# பாரதியும் உலகமும்

செந்தமிழ்ச் செல்வர்

ம. ப. பெரியசாமித் தூரன்

வானதி பதிப்பகம்

தி.நகர் • சென்னை-17

முதற் பதிப்பு : ஜூன், 1979

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 6-00

உலகத்து மனிதர்கள் எல்லோரும் ஒரே ஜாதி
—பாரதி வாக்கு

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

# அணிந்துரை

**நா. மகாலிங்கம்**

**( தலைவர்—பாரதியார் சங்கம் )**

தமிழ் நாட்டுக் கவிஞர் பரம்பரை மிக நீண்ட பரம்பரை. அவர்கள் எல்லோரும் உலகம் ஒன்றே என்று நம்பி வலியுறுத்தி வந்தவர்கள்; வருகிறவர்கள்.

"யாதும் ஊரே; யாவருங் கேளிர்" என்றவர் தமிழ் நாட்டுக் கவிஞர். எல்லா ஊரும் என்னுடைய ஊரே; எல்லா மக்களும் என் உறவினர்களே என்று கணியன் பூங்குன்றனார் பெருமிதத்துடன் பேசுகிறார்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே; நிகழ்ச்சி அவர் கட்டு ஆகலான" என்கிறது தொல்காப்பியம். உலகம் என்பது உயர்ந்தவர்களைத்தான் குறிப்பிடும். காரணம் அவர்களால்தான் உலகம் நல்வாழ்வு பெற்று வருகிறது என்கிறார் தொல்காப்பியர்.

**"பண்புடையார்ப் பட்டுண்டு உலகு அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்"**

பண்புடைய பெருமக்கள் வாழ்வதால் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் இது பூமிக்குள் புகுந்து அழிந்து போய்விடும் என்று அழுத்தமாகச் சொல்கிறார் திருவள்ளுவர்.

**"உண்டால் அம்ம இவ்வுலகம்**
**பிறர்க்கென வாழுநர் உண்மையானே"**

என்று புறநானூறு பேசுகிறது.

தனக்கென வாழாமல் பிறருக்காகவே வாழும் சான்றோர்களால்தான் இந்த உலகம் நிலைத்திருக்கிறது என்று அந்த புறநானூற்றுப் புலவர் பேசுகிறார்.

நம் புலவர்கள் எல்லாரும் கடவுள் அனுபவம் உடைய வர்கள். கடவுள் அனுபவம் பெற்ற அவர்கள் எதையும் உலகக் கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறார்கள்.

**"உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்"**

என்கிறார் சேக்கிழார்.

**"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்"**

என்று பாடுகிறார் கம்பர்.

**"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த [மூர்த்தியாகி**

என்று வேண்டுகிறார் தாயுமானவர்.

**"உலகம் எலாம் போற்ற ஒளி வடிவனாகி"**

என்கிறார் இராமலிங்க அடிகள்.

இவ்வாறு எல்லாவற்றையுமே உலகமாகப் பார்த்தவர்கள் நமது கவிஞர்கள். அந்த ஒப்பற்ற கவிஞர் பரம்பரையில் வந்தவர் கவிஞர் பாரதியார்.

பாரதியார் ஒரு தேசிய மகாகவி. பாரத நாட்டின் அடிமை ஆட்சியை நீக்க வெற்றி முரசு கொட்டிய வீரக்கவி. ஆனால் அவர் அதற்குள் மட்டும் நின்றுவிடவில்லை. உலக மெங்கும் உலாவுகிறார்.

இதன் காரணமாக பாரதி தன் நாடு வாழ விரும்புவது போலவே, உலகமும் வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறார்.

**"கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்**
**கொண்டு வையம் முழுதும் பயனுறப்**
**பாட்டிலே அறங்காட்டு எனுமோர் தெய்வம்"**

என்று பாடுகிறார்.

பாரதிக்கு உலக மக்கள் எல்லாருமே ஒரே சாதி; ஒரே குலம்; ஒரே குடும்பம். அவர் இந்தியர் என்றோ, சீனர் என்றோ, ருஷ்யர் என்றோ, அமெரிக்கர் என்றோ பார்க்கவில்லை. உலகத்து மக்கள் அத்தனை பேரையும் ஒரே வயிற்றில் பிறந்த சகோதரராகவே பாவிக்கிறார்.

"நான் சாதி பேதத்துக்கு நண்பன் அல்ல; இந்தியர்கள் எல்லாரும் அல்லது இந்துக்கள் எல்லாரும் ஒரே சாதி என்ற

சாதாரண இங்கிலீஷ் படிப்பாளிகளின் கொள்கையை நான் ஆதரிக்கவில்லே. உலகத்து மனிதர்கள் எல்லாரும் ஒரே சாதி. 'வசுதைய குடும்பம்' என்ற பத்ருஹரியின் கொள்கையைத் தழுவியுள்ளேன்'' என்கிருர்.

இத்துடன் நிற்கவில்லே; இன்னும் மேலே போகிருர்.

**''பேசாப் பொருளேப் பேச நான் துணிந்தேன்!**
**கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்!**
**மண்மீதுள்ள மக்கள், பறவைகள்,**
**விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்**
**யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே**
**இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே**
**செய்தல் வேண்டும் தேவ தேவா!''**

என்று இறைவனே இறைஞ்சுகின்ருர் பாரதி. அவருடைய விரிந்து பரந்த உள்ளத்துக்கு இதைவிட வேறு எதைச் சொல்வது.

இந்த உலகப் பார்வை பாரதிக்கு இருந்ததால்தான் தன் நாட்டு விடுதலையுடன், உலக விடுதலையையும் விரும்புகிருர். இத்தாலி தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய மாஜினியைப் பாராட்டி வாழ்த்துகிருர். மாஜினி தன் தாய் நாட்டை விடுவிக்க எடுத்துக்கொண்ட சபதத்தை உணர்ச்சி கொப்பளிக்கத் தம் பாட்டிலே வடித்துக் காட்டுகிருர்.

உலகில் சர்வாதிகாரம் ஒழிந்து மக்களாட்சி மலர்ந்தால், பாரதியின் உள்ளம் புளகாங்கிதம் அடைகிறது. கம்பீரமாக அதை வாழ்த்திப் பாடுகிருர்.

ருஷ்ய நாட்டில் ஜார் மன்னனின் கொடிய ஆட்சி ஒழிந்து, குடிமக்கள் சொன்னபடி, குடி வாழ்வு மேன்மையுற, குடிமை நீதி ஆங்கே தோன்றிய செய்தியைக் கேட்டவுடன், பாரதிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லே. உடனே துள்ளிக் குதித்து எழுகிருர். எழுச்சி பொங்க அதை வரவேற்றுப் பாடுகிருர்.

**மாகாளி பராசக்தி உருசிய**
**நாட்டினில் கடைக்கண் வைத்தாள்! அங்கே**
**'ஆகா' என்று எழுந்ததுபார் யுகப்புட்சி!**
**கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்!**
**வாகான தோள்புடைத்தார் வானமரர்**
**பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்**

**போகாமல் கண்புகைந்து மடிந்தனவாம்**
**வையகத்தீர் புதுமை காணீர்!**

என்று வீரமுழக்கம் செய்கிருர் பாரதி.

ருஷ்யப் புரட்சி பாரதியாருக்கு ஏதோ தன் நாட்டுக்குச் சம்பந்தமில்லாத நிகழ்ச்சியாகத் தோன்றவில்லை. உலக வரலாற்றில் ருஷ்யப் புரட்சியை மாபெரும் சம்பவமாக, பொன் ஏடாகக் கருதுகிருர். மனித சமுதாயத்தின் மலர்ச்சிக்கு அதை ஒரு திருப்பு முனையாகக் காண்கிருர். அதனுல்தான் ருஷ்யப் புரட்சி என்று சொல்லாமல் "யுகப்புரட்சி!" என்கிருர்.

ருஷ்யப் புரட்சியால் உலகத்துக்கே நன்மை ஏற்படப் போகிறது என்று எழுதுகிருர். "பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது, மனித சாதி முழுவதிற்கும் விடுதலை உண்டாகப்போகிறது, ருஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியானது இனி வரப் போகின்ற நற்சமுதாயத்தின் நல் அடையாளங் களில் ஒன்று. பூமி தூளாகாது. மனிதர்கள் ஒருவருக் கொருவர் செய்துவரும் அநீதி தூளாகும்" (பாரதி தமிழ் பக்கம் 184-185) என்று அறுதியிட்டு உறுதி கூறுகிருர்.

உலகத்தில் எங்கேனும் விடுதலை முழக்கம் கேட்கிறபோது, மக்கள் ஆட்சி மலர்கிறபோது, அநீதி அழுகிறபோது ஆனந்தக் கூத்தாடியவர் பாரதி; அதே சமயம் ஒரு நாடு அக்கிரமமாக ஆக்கிரமிக்கப்படும்போது அதை எதிர்த்துக் குரல் கொடுக் கிருர். ஆக்கிரமிப்புக்குள்ளான நாட்டுக்காகக் கண்ணீர் வடிக்கிருர்.

ஜெர்மன் கெய்சர், சக்திவாய்ந்த தன் படையின் மூலமாக பெல்ஜியத்தை ஆக்கிரமித்துக்கொள்கிருன். சின்னஞ்சிறு நாடான பெல்ஜியம் ஜெர்மனியுடன் எதிர்த்துப் போராடு கிறது; தோற்றுவிடுகிறது; ஜெர்மனிக்கு அடிமை நாடாகப் போய்விடுகிறது. அதன் வீரம் பாரதியைக் கவர்கிறது. எந்த நாடும் தன் சுதந்திரத்துக்காக இப்படித்தான் போராட வேண்டும் என்று உணர்கிருர். அந்த உணர்வு அவர் இதயத் தில் இருந்து பொங்கி வருகிறது.

**"அறத்திஞல் வீழ்ந்துவிட்டாய்**
**அன்னியன் வலியனுகி**
**மறத்திஞல் வந்து செய்த**
**வன்மையைப் பொறுத்தல் செய்வாய்**

முறத்தினுல் புலியைத்தாக்கும்
மொய்வரைக் குறப்பெண்போலத்
திறத்தினுல் எளியையாகிச்
செய்கையால் உயர்ந்து நின்ருய்''

என்று வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தைப் பாராட்டுகிருர் பாரதி. அவருடைய உலகப் பார்வைக்கு இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்!

வறுமையை பாரதி மிக ஆவேசமாகச் சாடுகிருர். தன் நாட்டில் மட்டும் வறுமை ஒழிந்தால் போதாது; உலக மெங்கும் அதை ஒழித்துவிடவேண்டுமென்று முழக்கமிடுகிருர்.

''வயிற்றுக்குச் சோறிடவேண்டும்—இங்கு
வாழும் மாந்தருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்''

என்று பறைசாற்றுகிருர்.

பாரதி உலகை நேசிக்கிருர். உலகெங்கும் சமாதானம் நிலவ வேண்டுமென விரும்புகிருர். உலக மக்கள் ஒருவருக் கொருவர் உடன் பிறந்தவர்களைப்போல் பழகி வாழ வேண்டு மென்கிருர்.

உடன் பிறந்தார்களைப் போல—இவ்
உலகில் மனிதர் எல்லாரும்
இடம் பெரிதுண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்

என்கிருர்.

பாரதி தமிழகத்தில் வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கும் உலக மகா கவிகளின் பரம்பரையைச் சேர்ந்தவர்.

தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய வீரர் பாரதி. அவர் குரலைக் கேட்டு எழுந்த எண்ணற்ற வாலிபர்களில் திரு. பெரிய சாமித் தூரனும் ஒருவர்.

1928ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே தூரன் அவர்களுக்குப் பாரதியாரிடம் பக்தி ஏற்பட்டுவிட்டது. ''பாரதி பைத்தியம்'' என்று சிறப்புப் பெயரும் அப்போதே அவருக்குக் கிடைத்தது.

கல்லூரியில் படிக்கும் அந்த நாட்களிலேயே திரு. பெரிய சாமித் தூரன் பாரதியாரின் எழுத்துக்களை எல்லாம் சேர்த்து வெளியிட வேண்டுமென்று ஆர்வமுடன் தொண்டாற்றினார்.

மகாகவி பாரதியார் 1905ஆம் ஆண்டு முதல் 1921ஆம் ஆண்டுவரை பதினாறு ஆண்டுகள் சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளை, கவிதைகளை எல்லாம் சேகரிக்கும் பணியில் உற்சாகமாக ஈடுபட்டார்.

பாரதியிடம் கொண்ட பக்தி ஒன்றையே மூலதனமாகக் கொண்டு சுதேசமித்திரன் ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் நன்மதிப்பைப் பெற்றார். இதனால் பதினாறு ஆண்டுகளாகச் சுதேசமித்திரன் பத்திரிகைகளில் தொடர்ந்து வெளிவந்த பாரதியின் எழுத்துக்களைத் தொகுப்பதற்கு அவர் அனுமதி கிடைத்தது.

பதினாறு ஆண்டுகளில் வெளியான சுதேசமித்திரன் தினசரிப் பத்திரிகை, வாரம் ஒருமுறை வெளியான சுதேசமித்திரன் வாரப் பத்திரிகை, இவற்றின் தாள்களை ஒவ்வொன்றாகப் பரிசோதித்து பாரதியாரின் கட்டுரைகளை எல்லாம் தொகுப்பது சுலபமான காரியமா? திரு. பெரியசாமித்தூரன் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபட்டு பாரதியின் கட்டுரைகளைத் தொகுத்தார். பாரதியாரோடு நெருங்கிப் பழகிய திரு. பரலி சு. நெல்லையப்பர், திரு. பி. ஸ்ரீ. ஆகிய அறிஞர்களை அணுகி, அவர்களிடமிருந்து பல அரிய செய்திகளைச் சேர்த்தார். இவைகளை எல்லாம் சேர்த்து 'பாரதி தமிழ்' என்ற பெரிய நூலை 1953ஆம் ஆண்டிலேயே வெளியிட்டார்.

கல்லூரி வாழ்க்கையில் "வனமலர் சங்கம்" என்ற சங்கத்தை திரு. பெரியசாமித் தூரன் ஆரம்பித்தார். அதில் நாட்டு விடுதலை, சுதேசி இயக்கம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றில் ஈடுபாடுள்ள அன்பர்கள் அங்கத்தினர்களாக இருந்தார்கள். இந்தச் சங்கத்தின் சார்பில் 'பித்தன்' என்ற பத்திரிகையை வெளியிட்டார். அதில் பாரதியின் கட்டுரைகளை வெளியிட்டார்.

பிற்காலத்தில் 'தமிழ்க் கலைக் களஞ்சியத்தின்' பிரமத ஆசிரியராக இருந்து அருமையான தொண்டு ஆற்றினார். இந்திய மொழிகளில் தமிழ் மொழியில்தான் முதன் முதலில் ஆங்கிலத்தில் உள்ளதுபோலக் கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகளாக வெளிவந்தது. இந்தத் தொண்டைச் சிறப்பாகச் செய்தவர் திரு. பெரியசாமித் தூரன்.

பெரியவர்களுக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக கலைக்களஞ்சியம் வெளியிட்டதுபோல, குழந்தைகளுக்காகவும் கலைக்களஞ்சியம் பத்துத் தொகுதிகள் வெளியிட்டார்.

தமிழ் வளர்ச்சிக்காகவே தம் வாழ்நாட்களைப் பயன் படுத்தி வரும் பேராசிரியர் திரு. பெரியசாமித் தூரன் சிறந்த கவிஞர், 'நல்ல எழுத்தாளர், காந்தியவாதி, கொங்கு நாடு தந்த தமிழ் அறிஞர்.

மாணவப் பருவத்தில் பூத்த அவருடைய பாரதி பணி இப்பொழுது வளர்ந்து மணம் வீசுகிறது. மேன்மேலும் இடைவிடாது அவர் பாரதியை ஆய்ந்து வருகிறார். தம்முடைய நீண்ட நாள் அனுபவத்துடன் பாரதியின் நூல்களைப் பகுத்தும், தொகுத்தும் வெளியிடும் பணியில் இப்போது ஈடுபட்டிருக்கிறார். மகாகவியின் மணிவாக்குகளைப் பன்முகநோக்கில் ஆராய்ந்து, பற்பல தலைப்புகளில் நூல்களாக வெளியிட்டு வருகிறார்.

'பாரதியும் உலகமும்' என்ற தலைப்பில் பாரதியாரின் பாடல்களையும், கட்டுரைகளையும் இந்த நூலில் விரித்து வெளியிட்டிருக்கிறார்.

இன்றைக்கு உலகில் இருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் பற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே மகாகவி பாரதியார் சிந்தித்து, அவைகளைத் தீர்ப்பதற்குத் தக்க வழிகளையும் காட்டியிருக்கிறார். அதைப் படிக்கும்போது அவருடைய தீர்க்க தரிசனத்தை எண்ணி வியக்கவேண்டி இருக்கிறது. அவருடைய எண்ணங்கள் எல்லாம் இன்னும் எழுத்திலேயே இருப்பதை எண்ணி ஏங்கவும் வேண்டி இருக்கிறது.

திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் தாம் வெளியிடும் பாரதியின் நூல்களின் ஒவ்வொரு தொகுப்பிலும் சிறப்பான ஆய்வுக் கட்டுரைபோல ஒரு முன்னுரை மட்டும் எழுதியிருக் கிறார்.

இன்று பெரியசாமித் தூரன் அவர்களுக்கு மகாகவி பாரதியாரின் எழுத்துக்களைத் திறனாய்வு செய்யும் ஆற்றலும் அனுபவமும் நிறைய இருக்கிறது. ஆகவே இனி வரும் பாரதியின் நூல்களில் முன்னுரையுடன் மட்டும் இல்லாமல், பாரதியின் கட்டுரைகளையும் கவிதைகளையும் பற்றித் தன்னுடைய ஆய்வுக் கருத்துக்களையும் ஆங்காங்கே அவர் கொடுத்தால், எதிர்காலத்தில் இலக்கியத் திறனாய்வு செய்யும்

மாணவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நல்ல நூல்களை வெளியிடுவதையே இலட்சியமாகக் கொண்ட வானதி திருநாவுக்கரசு அவர்கள் திரு. பெரிய சாமித் தூரனின் பாரதியார் நூல்களை வெளியிடுவதால், அந்த நூல்கள் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் வேகமாகப் பரவு வதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இருக்க வேண்டிய நூல்கள் திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் தொகுத்திருக்கும் பாரதியார் நூல்கள்.

வாழ்க மகாகவி பாரதியார்! வளர்க திரு. பெரியசாமித் தூரன் தமிழ்ப்பணி!

31, போயஸ் தோட்டம்
சென்னை-600 086.
23-6-79.

**நா. மகாலிங்கம்**

# பொருளடக்கம்


பக்கம்

அணிந்துரை—திரு. நா. மகாலிங்கம் ... iii
முன்னுரை—ம. ப. பெரியசாமித் தூரன் ... 9

பாரதியார் கவிதைகள்

1. காணி நிலம் ... 25
2. நல்லதோர் வீணை ... 26
3. விநாயகர் நான்மணி மாலை (அகவல்) ... 26
4. விநாயகர் நான்மணி மாலை (விருத்தம்) ... 27
5. ஹே காளீ! ... 28
6. பகைவனுக்கு அருள்வாய் ... 28
7. முரசு ... 29
8. கண்ணன்—என் தந்தை ... 34
9. திரு வேட்கை ... 37
10. வெள்ளைத் தாமரை ... 39
11. காட்சி முதற்கிளை—இன்பம் ... 40
12. விடுதலை ... 41
13. இந்தியாவின் அழைப்பு ... 42
14. பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து ... 44
15. புதிய ருஷியா ... 47
16. ஜய பேரிகை ... 48

பாரதியார் உரைநடை

17. உயிரின் ஒலி ... 50
18. லோகோபகாரம் ... 54

19. உலகத்துக்கு நல்லுபதேசம் செய்ய நாமே தகுதியுடையோர் ... 59
20. ஹிந்து தர்மம் ... 61
21. ஜாதி - I ... 63
22. ஜாதி - II ... 65
23. ஸ்ரீ ரவீந்திரர் திக்விஜயம் ... 75
24. செல்வம் - I ... 79
25. செல்வம் - II ... 83
26. பழைய உலகம் ... 102
27. வாசக ஞானம் ... 105
28. அமிர்தம் தேடுதல் ... 109
29. நேசக் கக்ஷியாரின் மூடபக்தி ... 112
30. பூகோள மஹாயுத்தம் ... 116
31. மண்ணுலகம் ... 121
32. சீனாவிலே பிரதிநிதியாட்சி முறைமை ... 124
33. ஜப்பானுக்கு ஹிந்து உபதேசிகள் அனுப்புதல் ... 126
34. திரான்சுவால் இந்தியரின் கஷ்டம் ... 128
35. ரூஸ்வெல்ட் அதிபரும் ஜப்பானும் ... 130
36. பாரஸீக தேசத்தில் பிரதிநிதி ஆட்சி முறைமை ... 132
37. துருக்கியின் நிலை ... 134
38. பாரஸீகத்துக்கு ஸௌக்ய காலம் ... 137
39. ஐர்லாந்துக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்க மாட்டோம் ... 138
40. நாகரிகத்தின் ஊற்று ... 146
41. கிரேக்க தேசத்தின் ஸ்திதி ... 149
42. விதி ... 150

# முன்னுரை

தமிழ் நாட்டையும், தமிழ் மொழியையும் புகழ்ந்து எழுதி, அவற்றின் பெருமையைத் தெளிவாக எடுத்துக் காட்டி பாரதியார் தமிழ் மக்களைத் தட்டி எழுப்புகின்றார். விடுதலைப் போருக்கு ஆயத்தமாகும்படி துணிச்சல் கொள்ளச் செய்கின்றார். இவற்றையெல்லாம் பாரதியும் தமிழகமும் என்ற நூலில் பார்த்தோம்.

பாரதியாருடைய பார்வை தமிழ் நாட்டோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமிழ் நாட்டைப் புகழ்ந்து பேசுகின்ற அதே மூச்சில் அவர் பாரத தேசத்தையும் போற்றுகின்றார். தமிழ் நாடு பாரத தேசத்தில் இணை பிரிக்க முடியாத பகுதி என்றும், பாரத தேசத்தின் பெருமைகளிலும் சிறுமைகளிலும் தமிழ் நாடும் பங்கு கொள்ளுகின்றது என்றும் தெளிவாகக் காட்டுகின்றார்.

**முப்பது கோடி முகமுடையாள் உயிர்**
**மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்**
**செப்பு மொழி பதினெட்டுடையாள் எனில்**
**சிந்தனை ஒன்றுடையாள்**

என்று ஐயத்திற்கு இடமில்லாமற் பாடுகின்றார்.

**வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் அடி**
**மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்**

என்று பாரதியார் பாடும்போது அவர் எத்தகைய பரந்த உள்ளத்தோடு பரவசமாகப் பாடுகின்றார் என்பதை எண்ணி மெய் சிலிர்க்கின்றோம்.

பாரத தேசம் பாரதியாருடைய கனவில் எப்படி ஒரே நாடாக உருவெடுக்கின்றது என்பதை பாரதியும் பாரத தேசமும் என்ற நூலில் பார்த்தோம்.

பாரதியாருடைய எண்ணங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றியிருந்தால் இதற்குள் பாரதம் ஒரு மகத்தான தேசமாக ஆகியிருக்கும்.

அங்கு தொழில் உண்டு.

ஆனால் சாதிப் பிரிவுகள் இல்லை.

எல்லாத் தொழிலும் சமமாக மதிக்கப்படும்—ஏற்றத் தாழ்வு இல்லை.

பெண்களுக்குச் சம உரிமை உண்டு; அவர்கள் ஆண்களோடு போட்டி போட்டுக் கொண்டு எல்லாத் தொழில்களும் செய்து நாட்டை உயர்த்துவார்கள்.

பல சமயங்கள் உண்டு; ஆனால் அவற்றிற்குள்ளே பூசல் இராது.

பொய் மதச் சடங்குகள், குருட்டு நம்பிக்கைகள் அடியோடு மறைந்துவிடும்.

இறைவன் ஒருவனே. அவனுக்கு ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும் தனக்கு விருப்பமான வடிவில் பெயர் வைத்து வணங்கலாம்.

இந்தியா உலகுக்கு வழிகாட்டியாக அமையும்.

இதுவே பாரதியாரின் கனவு. அந்தக் கனவை அற்புதமான, உணர்ச்சி மிக்க கவிதைகளிலும் உரை நடையிலும் அவர் வடித்து நமக்களித்திருக்கிறார்.

பாரதியாருடைய பரந்த நோக்கம் பாரத தேசத்தோடு மட்டும் நின்று விடவில்லை.

தாம் பிறந்த தமிழ் நாடு, தாம் பிறந்த பாரததேசம் இவற்றை நோக்குவதோடு உலகத்தையும் அவர் மறந்து விடவில்லை. ஏறு, ஏறு, ஏறு; மேலே, மேலே, மேலே! என்று எழுதுகிருரே அவரே மேலே மேலே ஏறி வானில் நின்று உலகனைத்தையும் தமது பார்வையிலே ஒருமை உணர்ச்சியோடு பார்க்கிருர்!

தமிழ் நாடு வாழ்க என்று எழுதியவர் பாரத மணித் திருநாடு வாழ்க என்று எழுதியவர் இப்பொழுது உலகம் வாழ்க என்று முழங்குகிருர்.

அவருடைய உள்ளமும் பார்வையும் அப்படி விரிந்து விட்டன.

“ஜாதி இரண்டொழிய வேறில்லை” என்ற பழந் தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள் என்று தமிழருக்கு பாரதியார் அறிவுரை கூறுகின்ருர்.

இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர் என்று அவர் ஜாதி வகுக்கிருர்; “ஜாதிகள் இல்லையடி பாப்பா” என்ற கருத்தையே இது வலியுறுத்துகின்றது.

தமிழர்கள் அனைவரும் ஒரே ஜாதி என்பார் பாரதியார்.

“ஒரு ஜாதி, ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி” என்று பாரத தேசத்தைப் பற்றிக் கூறவந்த விடத்து இவ்வாறு கூறுவார் பாரதியார். (பார்க்க: ஆறில் ஒரு பங்கு—முகவுரை.)

பாரத ஜாதி ஒரேஜாதி; பிரிக்க முடியாதது; அழிவில் லாதது.

என்று இதே கருத்தை அவர் மேலும் வலியுறுத்து கின்ருர்.

இப்பொழுது பாரதியார் உலகத்தைப் பார்க்கிருர். பார்த்து என்ன சொல்லுகிருர்?

மானுடச் சாதி ஒன்று; மனத்திலும், உயிரிலும், தொழிலும் ஒன்றே ஆகும்!

விடுதலை என்ற நாடகத்தில் இவ்வாறு தெளிவுபடுத்துகிறார் பாரதியார்.

உன்னுடைய ஆத்மாவும்,

உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று.

நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம்.

(இனி என்ற கட்டுரையில்)

இந்த உணர்வு மலரும் போதுதான், "மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக" என்று பிரமதேவன் இந்திரனுக்குக் கட்டளையிடுவதாக அவர் எழுதுகிறார்.

"வாழ்க தந்தை; மானுடர் வாழ்க" என்று அக்நி வாழ்த்துகிறான்.

"உண்மை வாழ்க, உலகமோங்குக. தீது கெடுக, திறமை வளர்க" என்று மற்றவர்கள் வாழ்த்தெடுக்கிறார்கள். —விடுதலை—நாடகம்.

பாரதியாருக்கு இவ்வாறு பாடத் தோன்றுகிறது.

இந்தப் பரந்த உள்ளுணர்வின் விளைவாகவே,

"பகைவனுக்கு அருள்வாய்" என்ற பாட்டுப் பிறக்கின்றது.

இது மட்டுமல்ல.

**மண்ணில் யார்க்கும் துயர் இன்றிச்**
**செய்வேன்** (ஹே காளி!)

என்றும்,

**வல்லமை தாராயோ?—இந்த**
**மாநிலம் பயனுற வாழ்வதற்கே** *(நல்லதோர் வீணை)*

*என்றும்,*

**பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்**
**பாலித்திட வேண்டும்** *(காணி நிலம்)*

*என்றும் கனிந்துருகிப் பாடுகின்றார்.*

*பாரதியார் திருமகளைப் போற்றுகின்றார். செல்வம் எல்லாம் அருளும்படி வேண்டுகின்றார்.*

*எதற்காக?*

*தம்முடைய நலத்துக்காகவா? தாம் வாழ்வதோடு,*

**இல்லையென்ற கொடுமை—உலகில்**
**இல்லையாக வைப்பேன்** *(திருவேட்கை)*

*என்கிறார்.*

*மனித இனத்தை மட்டும் பாரதியார் சிந்தையிற் கொண்டிருக்கவில்லை. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பறை சாற்றிய அருட்ஜோதி இராமலிங்க வள்ளலாரைப் போல பாரதியாருடைய உள்ளம் எல்லா உயிரினங்களின் மேலும் அன்பு கொள்ளுகின்றது.*

*இந்த உணர்வு மேலோங்கிய போதுதான்,*

**மண்மீதுள்ள மக்கள், பறவைகள்**
**விலங்குகள், பூச்சிகள், புல்பூண்டு, மரங்கள்**
**யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே**
**இன்பமுற் றன்புடன் இணைந்து வாழ்ந்திடவே**
**செய்தல் வேண்டும் தேவ தேவா!**

*என்று புதுவை மணக்குள விநாயகர் நான்மணி மாலையிலே பாடுகிறார்.*

இதே உணர்வோடுதான்,

**காக்கை குருவி எங்கள் ஜாதி—நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**

என்ற பாடலும் அற்புதமாகப் பிறக்கின்றது.

இந்த நேரத்திலே பாரதியார் இமய மலையின் உச்சியி லிருந்து

**நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை;**
**நோக்க நோக்கக் களியாட்டம்**

என்று கர்ஜனை புரிகின்றார்.

அப்படி அவருடைய உள்ளம் பொங்கி வழிந்து உணர்ச்சிவெள்ளம் கரை புரண்டோட எல்லாவற்றையும் ஒருமை உணர்வோடு நோக்கிக் கவிதை பொழிகின்றார்.

ஆனால் பாரதியார் வெறும் கனவு காணும் கவிஞரல்ல; கனவிலேயே உள்ளத்தைப் பறிகொடுத்து அவர் நின்று விடவில்லை.

அடுத்த கணத்திலே யதார்த்த நிலையைப் பார்க்கிறார். அவர் உள்ளம் பல முனைகளில், பல கோணங்களில் பொருத்தி வைக்கப் பெற்ற கண்ணாடி போன்றது.

இமயமலை உச்சியிலிருந்து அடிவாரத்திற்கு வருகிறார். வந்து மண்ணுலகையும் இங்கு வாழும் மக்களின் பிரத் தியட்ச நிலையையும் காண்கிறார்.

ஞான ரதத்திலேறிக் கந்தர்வலோகத்திற்கும் ஒரு கணத்திலே பாரதியார் செல்லுவார். மறு கணத்திலே மண் ணுலகத்திற்கு வந்து இங்குள்ள உண்மை நிலையையும் தெளி வாகக் காண்பார்.

கண்டு "என்ன உலகமடா, இந்த மண்ணுலகம்! ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலைச்,

ஸாரமில்லே. ஸத்துக் கிடையாது; உள்ளூரப் பூச்சியரித்துக் குழலாய் இருக்கும் வாழ்க்கை'' என்று மனங்கசந்து பேசுகின்ருர்.

இவ்வாறு மனங்கசந்து பேசிய பாரதியார் உலகத்தைத் துறந்து, மக்களினத்தை விட்டு நீங்கிப்போய் விட்டாரா? மக்களே வெறுத்து விட்டாரா? இல்லவே இல்லே.

யதார்த்த நிலேயை நன்கு புரிந்து கொண்டு எங்கெங்கு கொடுமை ஓங்குகிறதோ அங்கெல்லாம் அக் கொடுமையைச் சாடித் தமது வலிமையான கவிதைக் குரலாலும் உரை நடைக் குரலாலும், பேச்சுக் குரலாலும் கண்டனம் தெரிவித்து அக் கொடுமையை ஒழிக்கப் பாடுபடுகின்ருர். இதில் அவர் சோர்வடைந்ததே இல்லே.

இந்த உணர்வின் அடிப்படையிலேதான் பாரத தேசத்தை அடிமைப் படுத்தி வறுமைக்கும், பிணிக்கும் பஞ்சத்திற்கும் உள்ளாக்கிய ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து முழங்கினுர்; பெல்ஜிய நாட்டிற்கு வாழ்த்துப் பாடினுர்; புதிய ருஷியாவில் கலியுகம் விழுந்து கிருதயுகம் எழுக என்று ஆசி கூறினுர்.

ஐர்லாந்து, கிரீஸ், பாரஸீகம், துருக்கி முதலான நாடுகளுக்கு, பிரிட்டனும், நேசக் கட்சியாரும் இழைத்த அநீதியை வன்மையாகக் கண்டிக்கிருர். இங்ஙனம் கண்டிப்பது மறைமுகமாக பாரத மக்களுக்கு ஆங்கிலேயர் செய்து வந்த அக்கிரமங்களே எடுத்துக்காட்டி அவர்களே எதிர்த்துப் போராடி விடுதலே பெறத்தூண்டுவதற்குப் பயன் பட்டாலும் அது ஒன்றே பாரதியாரின் நோக்கமாக இருக்கவில்லே.

பாரதியார் உலக அரசியல் நடைமுறைகளே எவ்வளவு நுட்பமாக அந்தக் காலத்திலே ஆராய்ந்து மக்களுக்குத் தமது இந்தியா வார இதழின் மூலமாக எடுத்து விளக்கினுர் என்பதை நாம் காண்கிருேம். உலகத்து நாடுகளின்

போக்கை ஒட்டியே இந்தியாவின் போக்கும் அமைய வேண்டி வரும் என்ற உண்மையை அக் காலத்திலேயே பாரதியார் தமது தொலை நோக்கால் உணர்கின்ருர்.

1921 ஆம் ஆண்டு செப்டம்பரோடு பாரதியாரின் பேறு ஓய்வு பெற்று விடுகிறது, அதற்குப் பின்னல் 1921 டிசம்பரி லும் 1922 ஆம் ஆண்டு ஜனவரியிலும்தான் சத்யாக்ரஹ இயக்கம்;நேருக்கு நேர் அந்நிய ஆட்சியோடு மோதி சுமார் முப்பதிணுயிரம் பேர் சிறை சென்ருர்கள். 1922 இன் தொடக்க காலத்திலேயே சௌரி சௌரா வன்முறை நிகழ்ந்து விட்டதால் காந்தி அடிகள் யாரும் எதிர் பார்க் காத வகையில் இயக்கத்தை நிறுத்தி விடுகிருர்.

இந்த இயக்கத்திற்கு ஆயத்தம் செய்யப் பல மாதங் களாகி இருக்கலாம். அப்பொழுதுதான் 1920இல் அஹிம் சைக் கொள்கையின் சிறப்பைப்பற்றி காந்திஜி தமது புகழ் பெற்ற விளக்கக் கட்டுரையை எழுதுகின்ருர்:

"கோழைத்தனமா ஹிம்சையா இவற்றில் எது மேலா னது என்று கேட்டாலும், இவற்றில் எதை மேற்கொள்ள லாம் என்று வினவிஞலும் ஹிம்சையே மேல் என்று கூறுவேன். தனது தன் மாத்னதை இழந்து கோழை போல நடந்து கொள்வதைக் காட்டிலும் போர்க் கருவி கொண்டு தமது மானத்தை இந்தியா காப்பாற்றிக் கொள்ளுவதே சிறந்தது என்று நான் விரும்புவேன். ஆனல் அஹிம்சை வழி ஹிம்சை வழியை விட மிக உன்னதமானது என்று நான் நம்புகிறேன். தண்டனையை விட மன்னிப்புத்தான் ஆண்மையின் இலக்கணம்.... உடம்பின் வலிமையால் மட்டும் சக்தி பிறப்பதில்லை. மன உறுதியாலேயே அள வற்ற சக்தி பிறக்கின்றது......பண்பட்ட மக்களின் வழியே அஹிம்சையாகும். விலங்குகளுக்கும் கடைப்பட்ட மனித

னுக்கே ஹிம்சையின் வழி ஏற்றது. அவன் மிருக பலத்தையே நம்பி வாழ்கிறுன்.

நயத்தக்க நாகரிகம் அடைந்தவர்கள் இதைவிட உயர்ந்த நெறியைப் பின்பற்ற வேண்டும். இவர்கள் ஆன்மாவின் சக்தியைக் கடைப்பிடிக்க வேண்டும், அஹிம்சை வழியைக் கண்டு பிடித்த ரிஷிகள் நியூட்டனைவிட உயர்ந்த மேதைகள்.''

என்று இவ்வாறு காந்தியடிகள் தமது அஹிம்சைக் கொள்கையை விளக்குவதை பாரதியார் தமது நுட்பமான கவிதை உள்ளத்தால் முன்பே கண்டு ''வாழ்க நீ எம்மான்'' என்ற பாடலைப் பாடியிருக்கிறுர்.

தன்னுயிர் போலே தனக்கழிவெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்,
இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனில்
பிணைத் திடத் துணிந்தனை பெருமான்!

இவ்வாறு பாரதியார் பாடுகின்றுர். விடுதலை இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் மேலும் மேலும் வலுப்பெற்ற காலத்தில் பாரதியார் வாழ்ந்திருந்தால் அவருடைய அரசியல் கொள்கை மேலும் தெளிவடைந்திருக்கும்; அதே சமயத்தில் அந்த இயக்கத்திற்கு வலிமை ஊட்டும்வகையில் பல பாடல்களை இயற்றி இருப்பார் என்று நம்பலாம்.

தேசிய காங்கிரஸின் மாநாடுகள் ஒவ்வோர் ஆண்டிலும் இந்தியாவின் பல பாகங்களிலே நடைபெற்றதைப் பலரும் அறிவார்கள். ஒவ்வோர் மாநாடும் முன் னடந்ததை விஞ்சும் படியாக அமைந்தன. ஜவாஹர்லால்

நேரு 1921இல் இந்திய அரசியலில் நுழைந்து மக்களெல்லாம் பரவசமடையும்படி தொண்டாற்றினர். தீர்மானங்கள் நிறைவேற்றும் நேரம் வரும்போது அயல்நாட்டுக் கொள்கைகளைப்பற்றிய தீர்மானத்தை உருவாக்கும்படி பண்டிதநேருவிற்கேவிட்டு விடுவார்களாம்.ஏனெனில் அவர் ஒருவர்தான் உலகக்கண்ணேட்டத்தோடு பல நாடுகளின் வர்த்தமானங்களை உன்னிப்பாகக் கவனித்து வருவாராம். அவருக்கு நமது நாட்டின் கதிமோட்சம் மற்ற உலக நாடுகளின் போக்கோடு பின்னிக்கிடக்கின்றது என்கிற உணர்வு மிகுந்திருந்தது.

பாரதியார் நடத்திய இந்தியா வார இதழ் 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கப் பெற்றது. அது 1910 மார்ச்சுத் திங்களோடு நின்று விடுகிறது.

அந்தக் காலத்திலேயும் சரி, சுதேசமித்திரனில் மீண்டும் எழுதும் வாய்ப்புக் கிடைத்த போதும் சரி, பின்னுல் அந்த நாளிதழிலேயே உதவி ஆசிரியராக இரண்டாம் முறையாக அமர்ந்த போதும் சரி உலக நடைமுறைகளைக் கூர்ந்து கவனித்து அவற்றைப்பற்றியெல்லாம் தமிழ் மக்களுக்கு எளிதில் விளங்குமாறு பாரதியார் எழுதுகின்ருர்.

பாரசீக தேசத்திலே பிரதிநிதி ஆட்சி முறைமையைப் பற்றி இந்தியா வார இதழில் எழுதுவார் (16 மார்ச் 1907); சீனவிலே பிரதிநிதி ஆட்சி முறைமையைப் பற்றி எழுதுவார் (8 செப்டம்பர் 1906); ரூஸ்வெல்ட் அதிபரும் ஜப்பானும் என்று கட்டுரை தீட்டுவார் (8 டிசம்பர் 1906); ஜப்பானுக்கு ஹிந்து உபதேசிகள் அனுப்புதல் கவனிக்கப் படவேண்டிய விஷயம் என்று தெளிவு படுத்துவார் (10 நவம்பர் 1906); ஐர்லாந்தைப்பற்றிப் பரிவோடு எழுதுவார்; துருக்கியின் நிலையை அதே கட்டுரையில் எடுத்துக் கூறுவார் (15 நவம்பர்1920); கிரேக்க தேசத்தின் ஸ்திதியை விவரிப்பார். (19 நவம்பர் 1920)

இவ்வாறு பாரதியார் எழுதுவதைக் காணும்போது நமக்கே வியப்பாக இருக்கிறதல்லவா? இன்று நம்மிடையே உலவிவரும் தமிழ் நாளிதழ்களைப் பாருங்கள். அநேகமாக உலக நடைமுறைகளைப் பற்றி ஒன்றுமே இராது. ஏதாவது நில நடுக்கம் அல்லது விமான விபத்து என்று மட்டும் வரும். அயல் நாடுகள் எவ்வாறு இயங்குகின்றன என்ற தகவல்களைக் காண இயலாது.

பாரதியார் அன்று உலக நடைமுறைகளைக் கூர்ந்து நோக்கி எழுதியது அவருடைய மனிதாபிமானம் என்ற பரந்த நோக்கிலே முக்கியமாக எழுந்ததாகும்.

லார்டுகர்ஸன் இந்திய வைஸ்ராயாக 1899 முதல் 1905 வரை இருந்தவர்; வங்காளப் பிரிவினைக்குக் காரணமாயிருந்து அதை அமல் செய்தவர்; பல அநீதிகளைச் செய்தவர். இவரைப் பற்றி காரசாரமாகக் கண்டித்து பாரதியார் தமது இந்தியா வார இதழிலே எழுதியிருக்கிறார். இருந்தாலும் இவருடைய மனைவியார் இறந்த காலத்தில் பாரதியார் தமது அனுதாபத்தைத் தெரிவிக்கத் தவறவில்லை.

''லார்டுகர்ஸனும் அவரது மூன்று குழந்தைகளும் அடையக் கூடிய துக்கத்தை நினைக்கும்போது எவரும் பரிதாபம் அடையக் கூடும்'' என்று தமது இந்தியா வார இதழில் எழுதியுள்ளார்.

''உலகத்து மனிதர்கள் எல்லோரும் ஒரே ஜாதி, இந்தச் சண்டையில் (முதல் உலக யுத்தத்தில்) இத்தனை ஐரோப்பியர் அநியாயமாக மடிகிறார்களே என்று நான் கண்ணீர் சிந்தியதுண்டு. இத்தனைக்கும் சுதேசியத்திலே கொஞ்சம் அழுத்தமானவன். அப்படியிருந்தும் ஐரோப்பியர் மடிவதில் எனக்கு சம்மதம் கிடையாது. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு''

இவ்வாறு தமிழ் நாட்டின் விழிப்பு என்ற கட்டுரை யிலே 25 ஜனவரி 1918-ல் பாரதியார் எழுதியுள்ளார். இவருடைய மனிதாபிமானத்தைக் காட்ட வேறு எடுத்துக் காட்டு வேண்டுவதே இல்லை.

மேலும் உலகத்தின் குருவாக நல்வழிகாட்ட பாரத தேசம் மிகுந்த தகுதியுடையது என்று பாரதியார் திண்ண மாக நம்புகிறார். "உலகத்துக்கு உபதேசம் செய்ய நாமே தகுதியுடையவர்கள்" என்று அவர் கூறுகின்றார்.

"இந்தியா ஐரோப்பியரைக்கூடக் கொல்ல விரும்புவ தில்லை. திருத்த விரும்புகிறது" என்று அவர் தெளிவாக எழுதியுள்ளார் (பார்க்க—பூகோள மஹாயுத்தம்).

"அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங் களே உண்மையான நாகரிகத்தையும் நித்யஜீவனையும் விளைக்கும். இப்படி நூற்றுக்கணக்கான ஹிந்து தர்மக் கொள்கைகளை நாம் உலகத்தார் கேட்க முழங்குவதற்கு இதுவே நல்ல தருணம். இந்தச் சமயத்தில் மனித ஸமூகம் அழிந்து போகாமல் அதைக் காப்பாற்றி நல்ல வழியிலே சேர்க்கக் கூடிய ஜாதியார் நம்மைத் தவிர, வேறு யாரு மில்லை. கண்ணைத் திறந்து பூ மண்டல முழுவதையும் ஒரே பார்வையாகப் பார்த்தால் நான் சொல்வது உண்மை என்பது தானே விளங்கும்."

இவ்வாறு ஹிந்து தர்மம் என்ற கட்டுரையிலே 29 நவம்பர் 1917ல் பாரதியார் எழுதுகின்றார்.

மேலும் அக் கட்டுரையிலே போர்க்கருவிகளின் பயனின்மை குறித்து அதிசயிக்கத் தக்கவாறு எழுதுகிறார்;

"நாம் இன்று நூறு ஸப்மரீன் வைத்துக் கொண்டு பிறருடைய கப்பல்களைத் தகர்த்தால், நாளை மற்றொரு ஜாதியார் ஆயிரம் ஸப்மரீன் கட்டி நம்முடைய கப்பல்

களை நொறுக்கிப் போடுவார்கள்; பாம்பைக் கொக் ஒரு கீரிப்பிள்ளை யுண்டு. பகை பகையை வளர்க்கும்.

"தீராத ஆவலும், அவஸரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்வர வாழ்க்கை நாகரிக மாட்டாது. சரியான நாகரிகத்துக்குச் சாந்தியே ஆதாரம் யந்திரப் பீரங்கிகளும், ஸப்மரீன்களும் நாகரிகத்துக்கு அடையாளமல்ல...... அவை மனுஷ்யனுக்குப் பலமல்ல, துணையல்ல; அவை மனுஷ்யனுக்குப்பகை. மனுஷ்யனையும் அவன்நாகரிகத்தை யும் அழிக்கும் குணமுடையன."

அணுகுண்டுப் பூதம்தோன்றி மானிடஇனமே அழிந்து போகுமோ என்று அஞ்சுகின்ற இந் நாளில் பாரதி யாருடைய எச்சரிக்கை மிகப் பயனுடையதாகும்; ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

"இப்பொழுது மனிதர் ஒருவருக்கொருவர்பயப்படுவது தான் அதிகம்" என்று பாரதியார் 22 செப்டம்பர் 1916-ல் எழுதினார்.

இன்று இந்த பயம் பல நூறு மடங்கு அதிகரித் துள்ளது.

"உலக முழுவதும் ஒரே குடும்பத்தைப் போல் வாழக் கூடாதா?" என்று அதே கட்டுரையில் (லோகோபகாரம்) பாரதியார் கேட்கிறார்.

பாரதியார் விழைகின்ற அந்தக் குடும்பத்திலே சாதி யின் பெயராலும், சமயத்தின் பெயராலும், நிறத்தின் பெய ராலும் எந்த விதமான பிரிவினைகளும் இருக்காது. இந்த ஆசையை முரசு என்ற கவிதையிலே அவர் தெளிவாகக் காட்டுகின்றார்.

**சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்**

என்றும்

தெய்வம் பல பல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்

என்றும்

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை-அவை
பேருக் கொரு நிறமாகும்

...............

எந்த நிற மிருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரமன்றோ?

என்றும் அவர் எழுதுகிறார். முரசு ஓர் அற்புதக் கவிதைமணி. பாப்பாப் பாட்டு குழந்தைக்கு. முரசு எல்லாருக்கும்.

ஒரே குடும்பம் போல் வாழலாகாதா? என்ற வினாவில் எத்தனை ஏக்கம் பொதிந்து கிடக்கிறது! நன்றாக எண்ணிப் பாருங்கள். இதுவே தமிழகத்தின்மீது பொதியமலை அளவு அன்பு, பாரத தேசத்தின்மீது இமயமலை அளவு அன்பு, உலகத்தின் மீது வானளவில் அன்பு என்று தமது அன்பை விரிவுபடுத்தி விசுவரூபம் எடுக்கச் செய்து கொண்டிருக்கும் நமது கவிஞருக்கு மனிதகுலம் செய்யக் கூடிய நன்றி யாகும்.

பாரதியும் பாரததேசமும் என்ற நூலைப் போலவே இந்த நூலிலும் சென்னை நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ் நிறுவனத் தார் அரிதில் முயன்று திரு இளசைமணியன் அவர்களின் உதவியோடு வெளியிட்டுள்ள பாரதிதரிசனம் என்றநூலின் முதல் இரண்டு பாகங்களிலிருந்தும் சில கட்டுரைகளை

அவர்கள் அனுமதியுடன் சேர்த்திருக்கிறேன். கட்டுரை களின் அடியிலும் நன்றி தெரிவித்திருக்கிறேன்.

இங்கும் எனது நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட பாரதி தமிழ் என்ற நூலிலிருந்தும் சில கட்டுரைகளை இங்கு சேர்த்துள்ளேன்.

என்றும் நிலை பெற்றிருக்க வேண்டிய மனிதகுலத்தின் பெயரால் நான் கேட்கிறேன். அணுயுகம் தோன்றிய பிறகு யுத்தம் என்பது பெரிய மூடத்தனம். மஹாபாரதகாலத் திலேயே இதை இந்தியா நன்கு உணர்ந்து கொண்டது. உலகம் உணர்வது அவசரத்திலும் அவசரம்.

வணக்கம்

ம. ப. பெரியசாமித்தூரன்

# பாரதியார் கவிதைகள்

## 1. காணி நிலம்

காணி நிலம் வேண்டும்—பராசக்தி
காணி நிலம் வேண்டும்;—அங்கு
தூணில் அழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்தினிடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்; அங்கு
கேணியருகினிலே—தென்னைமரம்
கீற்று மிளநீரும், 1
பத்துப் பன்னிரண்டு—தென்னைமரம்
பக்கத்திலே வேணும்—நல்ல
முத்துச் சுடர்போலே—நிலாவொளி
முன்பு வரவேணும்;—அங்கு,
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
காதிற் படவேணும்; என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
தென்றல்வர வேணும். 2
பாட்டுக் கலந்திடவே—அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும்;—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டுதர வேணும்;—அந்தக்
காட்டு வெளியினிலே,—அம்மா! நின்றன்
காவலுற வேணும்;—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும். 3

## 2. நல்லதோர் வீணை

நல்லதோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி, சிவசக்தி!—எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ? 1

விசையுறு பந்தினைப்போல்—உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன்—நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும்—சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன்,—இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ? 2

## 3. விநாயகர் நான்மணி மாலை

அகவல்

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்,
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்;
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்;
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே,

இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா!
ஞானா காசத்து நடுவே நின்றுநான்
'பூமண்ட லத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும், மிடிமையும், நோவும்,

சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
இன்புற்று வாழ்க' என்பேன்! இதனைநீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி,
'அங்ஙனே யாகுக' என்பாய் ஐயனே!
இந்நாள் இப்பொழு தெனக்கிவ் வரத்தினை

அருள்வாய்; ஆதிமூலமே! அநந்த
சக்தி குமாரனே! சந்திர மவுலீ!
நித்தியப் பொருளே! சரணம்
சரணம் சரணம் சரணமிங் குனக்கே.

## 4. விநாயகர் நான்மணி மாலை

### விருத்தம்

வாழ்க புதுவை மணக்குளத்து
வள்ளல் பாத மணிமலரே!
ஆழ்க உள்ளம் சலனமிலாது!
அகண்ட வெளிக்கண் அன்பினையே
சூழ்க! துயர்கள் தொலைந்திடுக!
தொலையா இன்பம் விளைந்திடுக!
வீழ்க! கலியின் வலியெல்லாம்!
கிருத யுகந்தான் மேவுகவே.

## 5. ஹே காளீ!

எண்ணி லாத பொருட்குவை தானும்
ஏற்றமும், புவி யாட்சியும் ஆங்கே
விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும்
வெம்மை யும்பெருந் திண்மையும் அறிவும்,
தண்ணி லாவின் அமைதியும் அருளும்,
தருவள் இன்றெனை தன்னை யென்காளீ;
மண்ணி லார்க்குந் துயரின்றிச் செய்வேன்;
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன். 1

தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்;
வானம் மூன்று மழைதரச் செய்வேன்,
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்;
மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்,
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்;
நான்வி ரும்பிய காளி தருவாள். 2

## 6. பகைவனுக்கு அருள்வாய்

பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே!
பகைவனுக் கருள்வாய்!

1. புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே!
பூமியிற் கண்டோமே.
பகை நடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான்—நன்னெஞ்சே!
பரமன் வாழ்கின்றான். (பகைவ)

2. சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ?—நன்னெஞ்சே!
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ?—நன்னெஞ்சே! (பகைவ)

3. உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ளம் நிறைவாமோ,—நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனுமோ?—நன்னெஞ்சே! (பகை)

4. வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ?—நன்னெஞ்சே!
தாழ்வு பிறர்க்கெண்ண ந் தானழிவா னென்ற
சாத்திரங் கேளாயோ?—நன்னெஞ்சே! (பகைவ)

5. போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போலவந் தானுமவன்—நன்னெஞ்சே!
நேருக் கருச்சுனன் தேரிற் கசைகொண்டு
நின்றதுங்கண்ணனன்றோ?-நன்னெஞ்சே! (பகைவ)

6. தின்ன வரும்புலி தன்னையும் அன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே!
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்னெஞ்சே! (பகைவ)

## 7. முரசு

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வேதம் என்றும் வாழ்கஎன்று கொட்டு முரசே!
நெற்றி யொற்றைக் கண்ணனோடே நிர்த்தனம் செய்தாள்
நித்த சக்தி வாழ்க என்று கொட்டு முரசே!

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக் கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்.

2. வேத மறிந்தவன் பார்ப்பான்,—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்.
நீதி நிலைதவ றாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

3. பண்டங்கள் விற்பவன் செட்டி—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை,—தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை

4. நாலு வகுப்பும்இங் கொன்றே,—இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்,
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

5. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை;

6. ஏவல்கள் செய்பவர் மக்கள்;—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ?
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

7. சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்,
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்.

8. சாதிக் கொடுமைகள் வேண்டாம்;—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்

9. பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளே சிலமூடர்—நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

10. கண்கள் இரண்டினில் ஒன்றைக்—குத்திக்
காட்சிக் கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதமை யற்றிடுங் காணீர்.

11. தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்.

12. தீயினைக் கும்பிடும் பார்ப்பார்,—நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் யேசு மதத்தார்;

13. யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

14. வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை;—அவை
பேருக் கொருநிற மாகும்.

15. சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி,
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

16. எந்த நிறமிருந்தாலும்—அவை
யாவும் ஒரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்—இஃது
ஏற்ற மென்றும் சொல்லலாமோ?

17. வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமையில்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்

18. நிகரென்று கொட்டு முரசே!—இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம்;
தகரென்று கொட்டு முரசே!—பொய்ம்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்

19. அன்பென்று கொட்டு முரசே!—அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு;
துன்பங்கள் யாவுமே போகும்—வெறுஞ்
சூதுப் பிரிவுகள் போனல்

10. அன்பென்று கொட்டு முரசே?—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

21. உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்;
இடம்பெரி துண்டுவை யத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்?

22. மரத்தினை நட்டவன் தண்ணீர்—நன்கு
வார்த்ததை ஓங்கிடச் செய்வான்;
சிரத்தை யுடையது தெய்வம்—இங்கு
சேர்ந்த உணவெல்லையில்லை

23. வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்! —இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்:
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்!—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

24. உடன்பிறந் தவர்களைப் போலே—இவ்
வுலகினில் மனிதரெல் லோரும்;
திடங்கொண் டவர்மெலிந் தோரை—இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

25. வலிமை யுடையது தெய்வம்,—நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்;
மெலிவுகண் டாலும் குழந்தை—தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ?

26. தம்பி சற்றே மெலிவானல்—அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி—மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ?

27. அன்பென்று கொட்டு முரசே!—அதில்
யார்க்கும் விடுதலை உண்டு;
பின்பு மனிதர்க ளெல்லாம்—கல்வி
பெற்றுப் பதம்பெற்று வாழ்வார்.

28. அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்ருய்;
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்

29. பாருக்குள்ளே சமத்தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமைசெய் யாது—புவி
யெங்கும் விடுதலை செய்யும்

30. வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

31. ஒன்றென்று கொட்டு முரசே!—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்

## 8. கண்ணன்—என் தந்தை

(நொண்டிச் சிந்து)

பூமிக் கெனையனுப்பி னான்;—அந்தப்
பூதமண்ட லத்திலென் தம்பிக ளுண்டு;
நேமித்த நெறிப்படியே—இந்த
நெடுவெளி யெங்கணும் நித்தம் உருண்டே
போமித் தரைகளி லெல்லாம்—மனம்
போலவிருந் தாளுபவர் எங்க ளினத்தார்.
சாமி இவற்றினுக் கெல்லாம்—எங்கள்
தந்தையவன் சரிதைகள் சிறி துரைப்பேன். 1

செல்வத்திற்கோர் குறையில்லை;—எந்தை
சேமித்து வைத்த பொன்னுக் களவொன் றில்லை;
கல்வியில் மிகச் சிறந்தோன்—அவன்
கவிதையின் இனிமையோர் கணக்கி லில்லை;

பல்வகை மாண்பி னிடையே—கொஞ்சம்
பயித்தியம் அடிக்கடி தோன்றுவ துண்டு;
நல்வழி செல்லு பவரை—மனம்
நையும்வரை சோதனைசெய் நடத்தை யுண் டு 2

நாவு துணிகுவ தில்லை—உண்மை
நாமத்தை வெளிப்பட உரைப்பதற்கே:
யாவருந் தெரிந்திட வே—எங்கள்
ஈசனென்றும் கண்ணனென்றும் சொல்லுவதுண்டு.
மூவகைப் பெயர் புனைந்தே—அவன்
முகமறி யாதவர் சண்டைகள் செய்வார்:
தேவர் குலத்தவன் என்றே—அவன்
செய்திதெரி யாதவர் சிலருரைப்பார். 3

பிறந்தது மறக் குலத்தில்;—அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில்;
சிறந்தது பார்ப்பன ருள்ளே;—சில
செட்டிமக்க ளோடு மிகப் பழக்க முண்டு;
நிறந்தனிற் கருமை கொண்டான்;—அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப் பெண்கள்!
துறந்த நடைக ளுடையான்;—உங்கள்
சூனியப்பொய்ச் சாத்திரங்கள் கண்டு நகைப்பான் 4

ஏழைகளைத் தோழமை கொள்வான்;—செல்வம்;
ஏறியார் தமைக்கண்டு சீறி விழுவான்:
தாழவருந் துன்ப மதிலும்—நெஞ்சத்
தளர்ச்சிகொள் ளாதவர்க்குச் செல்வமளிப்பான்;
நாழிகைக்கொர் புத்தி யுடையான்;—ஒரு
நாளிருந்த படிமற்றோர் நாளினி லில்லை,
பாழிடத்தை நாடி யிருப்பான்:—பல
பாட்டினிலும் கதையிலும் நேரமழிப் பான், 5

இன்பத்தை இனிதெனவும்—துன்பம்
இனிதில்லை யென்றுமவன் எண்ணுவதில்லை;
அன்பு மிகவுமுடையான்;—தெளிந்
தறிவினில் உயிர்க்குலம் ஏற்ற முறவே,
வன்புகள் பல புரிவான்;—ஒரு
மந்திரியுண் டெந்தைக்கு விதியென்பவன்;
முன்பு விதித்த தனையே—பின்பு
முறைப்படி அறிந்துண்ண மூட்டி விடுவான் 6

வேதங்கள் கோத்து வைத்தான்—அந்த
வேதங்கள் மனிதர்தம் மொழியி லில்லை:
வேதங்க ளென்று புவியோர்—சொல்லும்
வெறுங்கதைத் திரளிலவ் வேதமில்லை:
வேதங்க ளென்றவற் றுள்ளே—அவன்
வேதத்திற் சிலசில கலந்ததுண்டு;
வேதங்க ளன்றி யொன்றில்லை—இந்த
மேதினி மாந்தர்சொலும் வார்த்தைகளெல்லாம் 7

நாலு குலங்கள் அமைத்தான்;—அதை
நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்,
சீலம் அறிவு கருமம்—இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்;
மேலவர் கீழவ ரென்றே—வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம்—இன்று
பொசுக்கிவிட்டாலெவர்க்கும் நன்மையுண்டென்
பான், 8

வயது முதிர்ந்து விடினும்—எந்தை
வாலிபக் களையென்றும் மாறுவதில்லை;
துயரில்லை; மூப்பு மில்லை,—என்றும்
சோர்வில்லை; நோயொன்று தொடுவதில்லை

பயமில்லை, பரிவொன்றில்லை.—எவர்
 பக்கமும்நின் றெதிர்ப்பக்கம் வாட்டுவ தில்லை
நயமிகத் தெரிந்தவன் காண்;—தனி
 நடுநின்று விதிச்செயல் கண்டு மகிழ்வான், 9

துன்பத்தில் நொந்து வருவோர்—தம்மைத்
 தூவென் றிகழ்ந்து சொல்லி வன்பு கனிவான்:
அன்பினைக் கைக்கொள் என்பான்;—துன்பம்
 அத்தனையும் அப்பொழுது தீர்ந்திடும் என்பான்;
என்புடை பட்ட பொழுதும்—நெஞ்சில்
 ஏக்க மறப் பொறுப்பவர் தம்மை உகப்பான்;
இன்பத்தை எண்ணு பவர்க்கே—என்றும்
 இன்பமிகத் தருவதில் இன்ப முடையான். 10

## 9. திருவேட்கை

மலரின் மேவு திருவே!—உன்மேல்
 மையல் பொங்கி நின்றேன்,
நிலவு செய்யும் முகமும்—காண்பார்
 நினைவ ழிக்கும் விழியும்
கலக லென்ற மொழியும்—தெய்வக்
 களிது லங்கு நகையும்,
இலகு செல்வ வடிவம்—கண்டுன்
 இன்பம் வேண்டு கின்றேன். 1

கமல மேவும் திருவே!—நின்மேல்
 காத லாகி நின்றேன்
குமரி நின்னை இங்கே—பெற்றோர்
 கோடி யின்ப முற்றார்,

அமரர் போல வாழ்வேன்—என்மேல்
அன்பு கொள்வை யாயின்,
இமய வெற்பின் மோத,—நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன். 2

வாணி தன்னை என்றும்—நினது
வரிசை பாட வைப்பேன்!
நாணி யேக லாமோ?—என்னை
நன்க றிந்தி லாயோ?
பேணி வைய மெல்லாம்—நன்மை
பெருக வைக்கும் விரதம்
பூணு மைந்த ரெல்லாம்—கண்ணன்
பொறிக ளாவ ரன்றோ? 3

பொன்னும் நல்ல மணியும்—சுடர்செய்
பூண்க ளேந்தி வந்தாய்!
மின்னு நின்றன் வடிவிற்—பணிகள்
மேவி நிற்கும் அழகை
என்னு ரைப்ப னேடீ—திருவே!
என்னு யிர்க்கோ ரமுதே!
நின்னை மார்பு சேரத்—தழுவி
நிக ரிலாது வாழ்வேன். 4

செல்வ மெட்டு மெய்தி—நின்னாற்
செம்மை யேறி வாழ்வேன்.
இல்லை என்ற கொடுமை—உலகில்
இல்லை யாக வைப்பேன்,
முல்லை போன்ற முறுவல்—காட்டி,
மோக வாதை நீக்கி,
எல்லை யற்ற சுவையே!—எனை நீ
என்றும் வாழ வைப்பாய். 5

# 10. வெள்ளைத் தாமரை

1. வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.(வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியினாவை யிருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

3. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக் குயிராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்(வெள்ளைத்)

4. ஊணர் தேசம் யவனர்தம் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு;
சேணகன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பாரசிகப் பழந்தேசம்

தோணலத்த துருக்கம் மிசிரம்
சூழ்கடற் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியின் ஒளி மிகுந்தோங்க (வெள்ளைத்)

## 11. காட்சி முதற்கிளை—இன்பம்

### 1

இவ்வுலகம் ஒன்று.
ஆண், பெண், மனிதர், தேவர்,
பாம்பு, பறவை, காற்று, கடல்,
உயிர், இறப்பு—இவை யனைத்தும் ஒன்றே.
ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலை யருவி,
குழல், கோமேதகம்—இவ் வனைத்தும் ஒன்றே.
இன்பம், துன்பம், பாட்டு,
வண்ணான், குருவி,
மின்னல், பருத்தி,
இஃதெல்லாம் ஒன்று.
மூடன், புலவன்,
இரும்பு, வெட்டுக்கிளி—
இவை ஒரு பொருள்.
வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர்—
இவை ஒரு பொருளின் பல தோற்றம்.
உள்ள தெல்லாம் ஒரே பொருள், ஒன்று.
இந்த ஒன்றின் பெயர் ‘தான்’.
‘தானே’ தெய்வம்.
‘தான்’ அமுதம், இறவாதது.

**2**

*எல்லா உயிரும் இன்ப மெய்துக.*
*எல்லா உடலும் நோய் தீர்க.*
*எல்லா உணர்வும் ஒன்றுத லுணர்க,*
*'தான்' வாழ்க.*
*அமுதம் எப்போதும் இன்ப மாகுக.*

## 12. விடுதலை

*(நாடகம்)*

**இடம் :** *வானுலகம்—காலம்—கலிமுடிவு.*

**இந்திரன் :** *உமக்கு நன்று தோழரே.*

**மற்றவர் :** *தோழா, உனக்கு நன்று.*

**இந்திரன் :** *பிரம்மதேவன் நமக்கோர் பணியிட்டான்.*

**மற்றோர் :** *யாங்ஙனம்?*

**இந்திரன் :** *மண்ணுலகத்து மானிடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக என்று.*

**அக்நி :** *வாழ்க தந்தை; மானுடன் வாழ்க.*

**மற்றோர் :** *தந்தை வாழ்க; தனி முதல் வாழ்க. உண்மை வாழ்க; உலகமோங்குக. தீது கெடுக; திறமை வளர்க.*

**ஒளி :** *ஒருவனைக் கொண்டு சிறுமை நீக்கி நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்தால் மானுடச் சாதி முழுதும் நல்வழிப்படும். மானுடச் சாதி ஒன்று; மனத்தினும் உயிரிலும் தொழிலிலும் ஒன்றே யாகும்.*

# 13. இந்தியாவின் அழைப்பு

*19-ஜூலை 1921.*

### வேண்டுகோள்

*அன்பிற் கினிய இந்தியா! அகில*
*மதங்கள், நாடுகள், மாந்தருக் கெல்லாம்*
*தாயே! எங்கள் உணர்வினைத் தூண்டிய*
*சேய்நெடுங் காலத்தின் முன்னே சிறந்தொளிர்*
*குருக்களை யளித்துக் குவலயங் காத்தனை*
*திருக்கிளர் தெய்வப் பிறப்பினர் பலரை*
*உலகினுக் களித்தாய்! உனதொளி ஞானம்*
*இலகிட நீயிங் கெழுந் தருளுகவே!*
*விடுதலை பெறநாம் வேண்டிநின் மறைவு*
*படுமணி முகத்தைத் திறந்தெம் பார்வைமுன்*
*வருகநீ! இங்குள மானுடச் சாதிகள்*
*பொருகளந் தவிர்ந்தமை வுற்றிடப் புரிகநீ!*
*மற்றவர் பகைமையை அன்பினால் வாட்டுக!*
*செற்றவர் படைகளை மனையிடந் திருப்புக!*
*தாயே, நின்றன் பண்டைத் தநயராம்*
*மாயக் கண்ணன், புத்தன், வலிய சீர்*
*இராமனும், ஆங்கொரு மஹமது மினையற்ற*
*விராவுபுகழ் வீரரை வேண்டுதும் இந்நாள்!*
*"தோன்றினேன்" என்று சொல்லி வந்தருளும்*
*சான்றோன் ஒருமுனி தருகநீ எமக்கே!*
*மோசே, கிறிஸ்து, நானக் முதலியோர்*
*மாசற வணங்கி மக்கள் போற்றிடத்*
*தவித்திடுந் திறத்தினர் தமைப் போலின்றொரு*
*பவித்திர மகனைப் பயந்தருள் புரிகநீ!*
*என்முன் வந்து நீதியின் இயலைச்*
*செம்மையுற விளக்குமொரு சேவகனை அருளுக நீ......*

## உத்தரம்

கேள்! விடை கூறினள் மாதா! நம்மிடை
யாவனே யிங்கு தோன்றினன்? இவன் யார்?
உலகப் புரட்டர் தந்திர உரையெலாம்.
விலகத் தாய்சொல் விதியினைக் காட்டுவான்.
மலைவு செய்யாமை, மனப்பகை யின்மை!
நலிவுறுத்தோரை நாம் எதிர்த்திடாமை;
தீச்செயல் செய்யும் அரசினைச் சேராமை;
ஆச்சரியப்பட உரைத்தனன்—அவையெலாம்.
வருக காந்தி! ஆசியா வாழ்கவே!
தரும விதிதான் தழைத்திட உழைப்பாய்.
ஆன்மா அதனால் ஜீவனை யாண்டு
மேனெறிப் படுத்தும் விதிதனை யருளினாய்;
பாரத நாட்டின் பழம்பெருங் கடவுளர்
வீரவான் கொடியை விரித்துநீ நிறுத்தினாய்!
மானுடர் தம்மை வருத்திடும் தடைகள்
ஆனவை யுருகி அழிந்திடும் வண்ணம்
உளத்தினை நீ கனல் உறுத்துவாய்! எங்கள்
காந்தி மஹாத்மா! நின்பாற் கண்டனம்!
மாந்தருட் காண நாம் விரும்பிய மனிதனை!
நின்வாய்ச் சொல்லில், நீதிசேர் அன்னை
தன்வாய்ச் சொல்லினைக் கேட்கின்றனம் யாம்;
தொழுந்தா யழைப்பிற் கிணங்கி வந்தோம் யாம்.
எழுந்தோம்; காந்திக் கீந்தோம் எமதுயிர்.
இங்கவன் ஆவிக் கொள்கை வென்றிடவே,
அன்றைக் குணவுதான் அகப்படு மாயின்
நன்றதில் மகிழ்வோம்; விடுதலை நாடி
எய்திடுஞ் செல்வ எழுச்சியிற் களிப்போம்;
மெய்திக ழொற்றுமை மேவுவோம்; உளத்தே

கட்டின்றி வாழ்வோம்; புறத்தளைக் கட்டினை
எட்டுணை மதியா தேறுவோம்; பழம்போர்க்
கொலைத் தொழிற் கருவிகள் கொள்ளா தென்றும்
நிலைத்தன ஆகிய நீதிக் கருவியும்
அறிவும் கொண்டே அரும்போர் புரிவோம்;
வறியபுன் சிறைகளில் வாடினும்; உடலை
மடிய விதிப்பினும்; "மீட்டு நாம் வாழ்வோம்" என்
றிடியுறக்கூறி வெற்றி யேறி,
ஓடிபடத் தளைகள், ஓங்குதும் யாஅமே.

ஸ்ரீமதி மாட் ரால்ஸ்டன் ஷர்மன் என்பவர் எழுதிய கவிதையின் தமிழாக்கம்.

## 14. பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து

அறத்தினுல் வீழ்ந்து விட்டாய்;
அன்னியன் வலிய னுகி
மறத்தினுல் வந்து செய்த
வன்மையைப் பொறுத்தல் செய்யாய்;
முறத்தினுல் புலியைத் தாக்கும்
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினுல் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றுய்! 1

வண்மையால் வீழ்ந்து விட்டாய்!
வாரிபோற் பகைவன் சேனை
திண்மையோடு அடர்க்கும் போதில்
சிந்தனை மெலித லின்றி
ஒண்மைசேர் புகழே மேலென்று
உளத்திலே உறுதி கொண்டாய்;
உண்மைதேர் கோல நாட்டார்
உரிமையைக் காத்து நின்றுய்; 2

மானத்தால் வீழ்ந்து விட்டாய்!
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடைய னேனும்
ஊனத்தால் உள்ள மஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்யவோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய்! 3

வீரத்தால் வீழ்ந்து விட்டாய்!
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே ஒதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ் வாமல்
பாரத்தை எளிதாக் கொண்டாய்;
பாம்பினைப் புழுவே யென்றாய்;
நேரத்தே பகைவன் தன்னை
'நில்'லென முனைந்து நின்றாய். 4

துணிவினால் வீழ்ந்து விட்டாய்!
தொகையிலாப் படைக ளோடும்
பிணிவளர் செருக்கி னோடும்
பெரும்பகை எதிர்த்த போது
பணிவது கருத மாட்டாய்;
பதுங்குதல் பயனென் றெண்ணாய்;
தணிவதை நினைக்க மாட்டாய்;
'நில்'லெனத் தடுத்தல் செய்தாய். 5

வெருளுத லறிவென் றெண்ணாய்
விபத்தையோர் பொருட்டாக் கொள்ளாய்;
சுருளலை வெள்ளம் போலத்
தொகையிலாப் படைகள் கொண்டே

மருளுறு பகைவர் வேந்தன்
　　வலிமையாற் புகுந்த வேளை
'உருளுக தலைகள், மானம்
　　ஓங்குக'என் றெதிர்த்து நின்றாய். 6

யாருக்கே பகை யென் றாலும்
　　யார்மிசை இவன்சென் றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி
　　உத்தர வெண்ணி டாமல்,
போருக்குக் கோலம் பூண்டு
　　புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில் லாமல்
　　வெட்டுவேன் என்று நின்றாய் 7

வேள்வியில் வீழ்வ தெல்லாம்
　　வீரமும் புகழும் மிக்கு
மீள்வதுண் டுலகிற் கென்றே
　　வேதங்கள் விதிக்கும் என்பர்;
ஆள்வினை செய்யும் போதில்,
　　அறத்திலே இளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக்
　　கிளர்ச்சிகொண் டுயிர்த்து வாழ்தல். 8

விளக்கொளி மழுங்கிப் போக
　　வெயிலொளி தோன்றும் மட்டும்,
களக்கமா ரிருளின் மூழ்குங்
　　கனக மாளிகையு முண்டாம்;
அளக்கருந் தீதுற் றாலும்
　　அச்சமே யுளத்துக் கொள்ளார்,
துளக்கற ஓங்கி நிற்பர்;
　　துயருண்டோ துணிவுள் ளோர்க்கே! 9

# 15. புதிய ருஷியா

(ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சி)

மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள், அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர், புதுமை காணீர்! 1

இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும்பே ரிசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும்; தருமந் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்;
பொய்சூது தீமை யெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்
தோங்கினவே அந்த நாட்டில். 2

உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
பிணிகள்பல வுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு;
தூக்குண்டே யிறப்ப துண்டு;
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவதுண்டு. 3

இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால்
வனவாசம்; இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்த்த போதில்,
அம்மைமனங் கனிந்திட்டாள்; அடிபரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள்; முடிந்தான் காலன். 4

இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன் இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே! 5

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்,
கிருத யுகம் எழுக மாதோ! 6

## 16. ஜய பேரிகை

### பல்லவி

ஜய பேரிகை கொட்டடா!—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

**சரணங்கள்**

1. பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்ம்மைப்
   பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்;
வியனுல கனைத்தையும், அமுதென நுகரும்
   வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம் (ஜய பேரிகை)

2. இரவியி னொளியிடைக் குளித்தோம்—ஒளி
   இன்னமு தினையுண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
   காலன் நடுநடுங்க விழித்தோம் (ஜய பேரிகை)

3. காக்கை குருவி யெங்கள் ஜாதி—நீள்
   கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
   நோக்க நோக்கக் களியாட்டம (ஜய பேரிகை)

## 17. உயிரின் ஒலி

*26 டிசம்பர் 1917.*

சில தினங்களுக்கு முன்பு கல்கத்தாவில் ஸ்ரீ ஜகதீச சந்திரவஸு, தமது "வஸு மந்திரம்" என்ற கூடத்தைப் பாரத மாதாவுக்குச் சமர்ப்பணம் செய்கையில் "உயிரின் ஒலி" என்ற மகுடமிட்டு ஒரு பிரசங்கம் செய்தார்.

அவருடைய கொள்கை எப்படியென்றால் :— நாம் ஜடபதார்த்தமாக நினைக்கும் உலோகாதிகளில் உயிர் நிறைந்திருக்கிறது; ஜந்துக்களைப்போலவே விருக்ஷாதிகளுக்கும் உணர்ச்சியிருக்கிறது. ஆகவே மண், செடி, ஜந்து' மனுஷ்யன் அத்தனைக்குள்ளும் ஒரே விதமான ப்ராண சக்தியிருக்கிறது. 'இந்த உலகமே உயிர்க்கடல்' என்பது அவரது சித்தாந்தம். அவர் பல நுட்பமான கருவிகள் செய்திருக்கிறார். ஹிந்து தேசத்துத் தொழிலாளிகளைக்கொண்டு அந்த ஸூக்ஷ்மக் கருவிகளை எல்லாம் செய்து கொண்டார். அந்தக் கருவிகளின் நேர்த்தியைப் பார்த்து ஐரோப்பிய சாஸ்திரிகளும் யந்திரிகளும் ஆச்சரியப்படுகிறார்கள். அந்தக் கருவியின் உதவியால், ஒரு பூண்டின் கையில் ஒரு ஊசி எழுதுகோல் கொடுக்கிறார். ஒரு புகைபட்ட கண்ணாடியின் மேல் அந்த ஊசி எழுதுகிறது; அதாவது, கோடுகள் கீறுகிறது. அந்தக் கோடுகளினால் மேற்படி செடியின் உள்ள நிலையை, அதன் நாடியின் அசைவு தெரிவிக்கிறது.

செடிக்கு விஷத்தைக் கொடுத்தால் மூர்ச்சை போடுகிறது. மறுபடி, தெளிய மருந்து கொடுத்தால் தெளிகிறது.

மதுபானம் செய்வித்தால் உண்டாட்டுக் கேளிகள் நடத்து கிறது. செடியின் சந்தோஷம், சோர்வு, வளர்ச்சி, சாவு ஆகிய எல்லா நிலைமைகளையும் கண்ணாடியிலே கீறிக் காட்டு வதைப் பார்க்கும்போது 'செடியின் நாடியுணர்ச்சிகளுக்கும் இதர மனுஷ்ய மிருகாதி ஜந்துக்களின் நாடியுணர்ச்சிகளுக் கும் பேதமில்லை' என்பது ருஜுவாகிறது.

இவ்விதமான அற்புத பரீக்ஷைகளினால் உலகத்தின் உயிரொலியை நமக்குத் தெரியும்படி செய்த மஹானாகிய மேற்படி ஜகதீச சந்திரவஸு நம்முடைய ஹிந்து மதத்தில் ஆழ்ந்த பக்தியடைவர் என்பது சொல்லாமலே விளங்கும். ஹிந்துக்களின் மேன்மையைப்பற்றி அவர் வார்த்தை சொல்லும்போது, அந்த வார்த்தைகளிலே மிகச் சிறந்த தொரு ஜீவநாதம் உண்டாகிறது. அந்த வார்த்தைகளைப் படிக்கும் போதே படிப்போரின் ஜீவசக்தி மிகுதிப்படுகிறது.

அவர் சொல்லுகிறார் :— "ஸாதாரணக் கருவிகளால் மஹத்தான காரியங்களை நிறைவேற்றிய மஹான்களின் ஸந்ததியிலே நாம் பிறந்திருக்கிறோம். .........ஒருவன் ஒரு பெருங்காரியத்தில் முழுதும் தன்னை ஈடுபடுத்தினால், அடைத்திருந்த கதவுகள் திறக்கும். அஸாத்யமாகத் தோன்றுவது அவனுக்கு ஸாத்யமாகும்; உண்மை தேடு வதையே தொழிலாகக் கொண்ட ஒருவன் சிற்றின்பங்களை விரும்பலாகாது. லாபநஷ்டங்களையும் வெற்றி தோல்வி களையும் ஒன்று போலக் கருதி அவன் தனது ஜீவனை உண்மைக்கு நைவேத்யமாக விடவேண்டும். பரததேசம் இப்போது வென்று காப்பாற்ற வேண்டிய வஸ்து யாது? சிறியதும் வரம்புற்றதுமாகிய ஒரு பொருளினால் பாரத மாதா திருப்தியடைவாளா? இவளுடைய அற்புதமான பூர்வ சரித்திரத்தையும் பூர்வ சாஸ்திரங்களையும் செயல் களையும் யோசிக்கும் போது, தாழ்ந்த தரமுள்ளதும் சில

நாள் நிற்கிறதுமான லாபமொன்றை இவள் விரும்ப மாட்டாளென்பது தெரியும்.

"இப்போது நம்முடைய கண்முன்னே இரண்டு விதமான தர்மங்கள் காணப்படுகின்றன.

"முதலாவது, (ஐரோப்பியரைப்போல நாமும்) படிப்பின் பரவுதலாலும், நகரத்தானுக்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதாலும், கைத்தொழில், வியாபார சம்பந்தமான பலவித முயற்சிகளாலும் பாரத நாட்டை வலிமையுடைய நாடாகச் செய்ய வேண்டும். இவையெல்லாம் தேசக்கடமையின் முக்கியாம்சங்கள். இவற்றைப் புறக்கணித்தால் நமது ஜீவனுக்கே ஆபத்து நேரிடும். வாழ்க்கையிலே ஐயமும் அவனவன் தன் தன் அவாவைத் திருப்தி செய்து கொள்ளும் வழியும் வேண்டிப்பாடுபட்டால், அதிலிருந்தே மேற்கூறிய லௌகிக தர்மத்திற்கு தூண்டுதல் உண்டாகும். இரண்டாவது, ஆத்ம தர்மம். க்ஷணமாயிருக்கும் இன்பங்களை மாத்திரம் கருதாமல், மனுஷ்ய வாழ்க்கையின் அத்யுந்நதமான நோக்கத்தை நாடி உழைத்தவர்கள் நமது நாட்டில் எக்காலத்திலும் மாறாமல் இருந்து வருகிறார்கள்."

ஆத்ம தர்மமாவது யாதென்றால், ஸ்ரீ வஸு சொல்லுகிறார்:—"மனுஷ்ய ஜாதியின் பரம க்ஷேமத்திற்காக ஒருவன் தன்னைத் துறந்து விடுதல்" என்று. வந்தே மாதரம். இந்தத் தர்மத்தை எக்காலத்திலும் இடைவிடாமல் ஒரு சிலரேனும் ஆதரவு செய்து வந்தமையாலேதான்—அஸ்ஸிரியா தேசத்திலும் நீல நதிக்கரையிலும் தலை தூக்கி நின்ற பெரிய ஜாதிகள் அழிந்து போயின—நாம் அழியாமல் என்றும் இளமை கொண்டிருக்கிறோம். கால வெள்ளத்தில் வரும் மாறுதல்களுக்கெல்லாம் மாறாமல், தான் அவற்றைத் தனதாக்கிக்கொண்டு வாழும் திறமை நமது நாட்டிற்கு இருக்கிறது.

வந்தே மாதரம்.

இதுவே உயிரின் ஒலி. ஹிந்துஸ்தானத்தை வணங்குகிறேன், ஹிந்து தர்மத்தைப் போற்றுகிறேன். லோக நன்மைக்காக என்னை மறந்து என்னை இரை கொடுப்பேன்.

இதுதான் ஜீவசக்தியின் சாந்தி வசனம். தர்மம் ஐரோப்பியருக்குத் தெரியாது. அதை நாம் ஐரோப்பியருக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். அவர்களுடைய முயற்சிகளை நாம் கற்றுக்கொண்டு பிறகுதான் அவர்களுக்கு நாம் உபாத்யாயராகலாம்.

ஐரோப்பாவின் தொழில் நுட்பங்களை நாம் பயிற்சி செய்தல் எளிதென்பது ஸ்ரீமான் வஸுவின் சரிதையிலே நன்கு விளங்கும். நம்முடைய சாந்தி தர்மத்தை ஐரோப்பியர் தெரிந்து கொள்வதால், அவர்களுக்கு விளையக்கூடிய நன்மையோ மிக மிகப் பெரியது.

ஸ்ரீமான் ஜகதீச சந்திர வஸு சொல்லுகிறார் :— "தன்னை அடக்கியாளும் சக்தியில்லாமையால் மனுஷ்ய நாகரீகமானது சேதப் படுகுழியின் கரையில் நடுங்கிக் கொண்டு நிற்கிறது. ஸர்வ நாசத்திலே கொண்டு சேர்ப்பதாகிய இந்த வெறி கொண்ட வேகத்திலிருந்து மனிதனைக் காப்பாற்ற மற்றொரு தர்மம் வேண்டும்; அதாவது, நம்முடைய ஹிந்து தர்மம். ஏனென்றால், "ஆத்ம த்யாகம் தனக்குத் தனக்கென்ற அவாவினால் உண்டாகாது. எல்லாச் சிறுமைகளையும் அழித்துப் பிறர் நஷ்டமெல்லாம் தனக்கு லாபமென்று கருதும் அஞ்ஞானத்தை வேரறுப்பதால் விளையும்" என்கிறார்.

முன்னொரு முறை சில வருஷங்களின் முன்பு ஜகதீச சந்திரர் சொல்லிய வாக்கிய மொன்றையும் இங்கு மொழி பெயர்த்துக் காட்டுதல் பொருந்தும். லண்டன் நகரத்தில்

"ராயல் ஸொஸைடி" என்ற பெரிய சாஸ்திர சங்கத்தார் முன்பு செய்த ப்ரசங்க மொன்றிலே அவர் சொன்னார்:— "ஸ்வலி கீதங்களில் பேசாத ஸாக்ஷ்யத்தை நான் பார்த்தேன். எல்லாப் பொருளையும் தன்னுள்ளே கொண்ட ஏகவஸ்துவின் கலை ஒன்றை அங்கு கண்டேன். ஒளியின் சிறுதிரைகளுக்கிடையே தத்தளிக்கிற துரும்பும், பூமியின் மேலே பொதிந்து கிடக்கும் உயிர்களும், நமது தலை மேலே சுடர் வீசும் ஞாயிறும்—எல்லாம் ஒன்று. இதைக்கண்ட பொழுதே, மூவாயிர வருஷங்களுக்கு முன்பு என் முன்னோர் கங்கைக் கரையில் முழங்கின வாக்கியத்திற்குச் சற்றே பொருள் விளங்கலாயிற்று. 'இந்த ஜகத்தின் பேத ரூபங்களில் ஒன்று காண்பார் எவரோ அவரே உண்மை காண்பார்,' பிறர் அல்லர், பிறர் அல்லர்; இது தான் ஜீவஒலி. வாயுபகவானுடைய ஸ்ரீமுக வாக்யம். எல்லாவற்றிலும் ஒருயிரே அசைகிறது. அதை அறிந்தால் பயமில்லை; பயம் தீர்ந்தால் சாவில்லை அமிர்தம் ஸதா."

## 18. லோகோபகாரம்

*22 செப்டம்பர் 1816*

ஏற்கெனவே, 'சக்திதர்மம்' என்ற மகுடத்தின் கீழ் ஓரிரண்டு விஷயங்கள் எழுதியிருக்கிறேன்.

'லோகோபகாரம்' என்றாலும் அதே அர்த்தந்தான். லோகோபகாரமாவது லோகத்துக்கு உபகரணம் அல்லது கருவியாக நடத்தல்.

லோகத்துக்கு உபகாரத்தை அதாவது இனிய செய்கையைச் செய்தல் லோகத்துக்கு இனியது செய்வோன், லோகசக்திக்கு ஒரு கருவியாகவே தொழில் செய்கிறான். சக்தியின் கருவியாக இருந்து தொழில் செய்

வதையே சக்தி தர்மம் என்றும் சொல்லுகிறோம். பிறருக்கு நாம் செய்தல் இஃதேயாம்.

லோகத்துக்கு இனியது செய்வோன் தன் உள்ளத்தில் பயம் வைத்துக் கொண்டிருக்கலாகாது. பயம் தீர்வதற்கு வழியென்ன? பகைதீர்ந்தால் பயந்தீரும். பகை தீர்க்கும் வழியென்ன? நம்முடைய மனத்தில் பிறர் மீது பகை யெண்ணம் தோன்றாமலிருக்க வேண்டும். பாம்பினிடத்திலே நாம் விரோத புத்தி கொள்ளாவிட்டால் அது நம்மைக் கடிக்காது. இந்த வார்த்தையைப் பரிஹாசம் பண்ணுதல் எளிது; யாரும் செய்யலாம். ஆனால் அது உண்மை. பாம்பைப் பழக்கிவைக்கும் திறமை அன்புக்குண்டு; பாம்பினிடத்தில் கருணை செய்யும் ஞானியைப் பாம்பு கடிக்காது. லோகோபகாரத்தைக் கருதி அந்த ஞானி மனதிலே அன்புடன் அந்தப் பாம்பைக் கோபித்தால் அது அவ்விடம் விட்டு ஓடிப் போய் விடும்.

எல்லா ஜீவாரசிகளிடத்தும் அன்பு செலுத்த வேண்டும். இதுவே புத்தன் சொல்லிய தர்மம். மஹான்களெல்லாம் காட்டிய வழி இதுதான். தற்காலத்தில் மனித ஜாதி கூடிய வரை நாகரிகப் பட்டிருப்பதால், மிருகங்கள், பக்ஷிகள், பூச்சி, புழு இவற்றால் மனிதனுக்குள்ள பயம் அநேகமாகத் தீர்ந்து போய் விட்டது.

இப்போது மனிதர் ஒருவருக்கொருவர் பயப்படுவது தான் அதிகம். இதற்கு இதுவரை மனித ஜாதியார் கண்டு பிடித்து அனுசரணையில் வழங்கிவரும் மருந்து உபயோக மில்லை. பயத்தினால் விரோதம், போர் உண்டாகிறது. மனித ஜாதி வீணாக அழிகிறது. எல்லோருக்குமே நஷ்டமுண்டாகிறது. பரஸ்பர பயம் நீங்கவேண்டுமானால் அதற்குப் போர் சரியான மருந்தில்லை. உலகம் தோன்றிய காலமுதல் இன்றுவரை போர்கள் நடந்துதான் வருகின்றன. இது

வட்டிலும் மனித ஜாதியிலே ஒருவருக்கொருவர் பயப்படு மது துளி கூடக்குறையவில்லை.

அன்பிருந்தால் பயந் தெளிந்து போகும். ஒரே குடும்பத்திலே ஒருவரையொருவர் கண்டு மரணபயங் கொள்வதில்லை. உலக முழுவதும் ஒரே குடும்பத்தைப் போல் வாழக் கூடாதா? எளியவன் அன்பு தொடங்கி வலிய வன் சும்மா இருந்தால் ஒன்றும் நடக்காது. எளியவன் வலிமையை விரும்பி நடக்க வேண்டும். வலியவன் எளிய வனிடம் அன்பு செலுத்த வேண்டும்.

யாரிடத்திலும் அன்புடன், யாரிடத்திலும் பயமின்றி நல்லோன் லோகோபகாரஞ் செய்கிறான். பராசக்தியின் கையிலே தன்னை ஒரு கருவியாக ஒப்புவித்துவிட்டு, அவள் சித்தப்படி தொழில் செய்துவருகிறான். உலகத்தை ஆக்கு தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழிலுக்கும் பராசக்தி வெவ்வேறு விதமான கருவிகளை வழங்குகிறாள். காற்றும், ஒளியும், வெம்மையும், மண்ணும், நீரும், சித்த மும் உயிரை ஆக்குவதற்குக் கருவிகளாகின்றன.

காற்றும், ஒளியும், வெம்மையும், நீரும், சித்தமும் பிற உயிர்களும் உயிரைக் காப்பதற்குக் கருவிகளா கின்றன.

இவையனைத்தும் காலமும் சேர்ந்து நாசத்திற்குக் கருவிகளாகின்றன. மனித உயிராகிய நான் மற்ற மனித வுயிர்களைக் காக்கும் கருவியாகத் தொழில் செய்வது நன்றா? அழிக்கும் கருவியாகப் போவது நன்றா? காப்பது நன்று.

மேலும் கர்ம விதியை மறக்கலாகாது. காக்க விரும்பு வோன் காக்கப்படுவான்; அழிக்க விரும்புவோன் அழிக்கப்

படுவான். நன்மை விரும்பினுல் நன்மை விளையும்; இல்லா விட்டால் விளையாது.

ஒருவன் லோகோபகாரத்தை மாத்திரமே விரும்பி நடக்கத் தொடங்கினுல் அவனுடைய சொந்த வியாபாரங் களுக்குச் சேதமுண்டாகுமென்று சிலர் நினைக்கிருர்கள். இது பிழை. தனது இன்பத்தை விரும்புவோன் முதலாவது செய்யவேண்டிய காரியம் லோகோபகாரம்.

''நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி'' நமக்குத் திரும்பி வந்தே தீரும். அடுத்த ஜன்மத்திலன்று; இந்த ஜன்மத்திலேயே திரும்பி வரும். இது கண்ணுலே கண்ட செய்தி. செல்வம், புகழ், துணை, வினையேற்றம் முதலிய எந்த நலத்தை ஒருவன் விரும்பின போதிலும், பிறர்க்கு நன்மை செய்யாவிட்டால் அது கைகூடாது. அனுபவத் திலே பார்த்துக் கொள்ளலாம். குடும்பத்தைக் காப்பவன் ஊருக்கு நலஞ் செய்வோன் இவர்கள் உண்டு வாழ்ந்திருப் பதனுல் உலகத்துக்கு நன்மையன்ருே? நீ பிறரைக் காப்பாற் றினுல் தெய்வம் உன்னைக் காப்பாற்றும்.

தெய்வம் உண்டு. ''நலஞ் செய்வோன் என்றும் கெட்ட வழி சேரமாட்டான்'' என்று கீதை சொல்லுகிறது. அவனுக்குக் கெடுதி நேரிடாதபடி அவனுடைய யோக க்ஷேமத்தைத் தான் சுமப்பதாகத் தெய்வம் வாக்களித் திருக்கிறது. ஆனுல், ஆரம்பத்திலே சோதனைகள் நேரிடும். மனம் தளராமல் லோகோபகாரம் செய்துகொண்டே போனுல் பிறகு சோதனைகள் நின்றுபோய் நன்மை உதய மாகும். லோகோபகாரத்திலே ''ஆரம்பத்திலே'' மனத் தளர்ச்சி ஏற்படுவது சகஜம்.

'ஏதடா இது! தெய்வத்தை நம்பி தெய்வமே கர்த்தா, நாம் கருவியென்று நிச்சயித்து மற்றவர்களுக்கு நன்மை

செய்யப் போன இடத்தில் நமக்குத் தீமையுண்டாகிறதே! கிணறு வெட்டப்போன இடத்தில் பூதம் புறப்படுகிறதே! உலகத்தைக் கிளியென்று நினைத்து அதன் பசி தீரப் பால் வார்க்கும்படி போனால் அது கழுகாக மாறி நம்மைக் கொத்துகிறதே!" என்று திகைத்துப் போய் மனிதன் லோகோபகாரத்தைக் கைவிடக் கருதல் ஸாமான்யம். இது தவறு. தெய்வம் நமக்குத் தகுதியேறும் பொருட்டாக நம்மைச் சோதனை செய்கிறது. உள்ளம் பதறாதிருந்தால் விரைவிலே வானந் தெளியும்.

லோகோபகாரம் எப்போது, எந்த வயதில் தொடங்கலாம்? இப்போது, இந்த நிமிஷத்திலே தொடங்க வேண்டும். யார் தொடங்கலாம்? ஆண், பெண், அலி, வலியவன், எளியவன், கிழவன், குழந்தை, குருடன், நொண்டி எல்லோரும் தொடங்கவேண்டும்.

பிறருக்கு இனியது செய்தலாவது யாது? நோய் தீர்த்தல், உணவு கொடுத்தல், அறிவு கொளுத்துதல் முதலிய செய்கை.

பிறரென்றால் அதற்கெல்லையுண்டா? சக்திக்குத் தக்கபடி எல்லை. குடும்பத்தைக் காத்த பிறகு நாட்டைக் காக்க வேணும். பிறகு மனித ஜாதி முழுதையும் காக்க வேணும்.

லோகோபகாரத்தினால் மனிதன் என்ன பயனடைவான்? எப்போது?

லோகோபகாரத்தையே பரிபூரணமாகச் செய்வோன் மனிதநிலை கடந்து அமரநிலை பெறுவான். இவ்வுலகத்தில் இந்தப் பிறவியில் பயன் அடைவான். செய்கையின் வேகத்துக்குத் தக்கபடி பயனின் வேகம்.

சக்தி காக்கும்—பாரதி தமிழ்.

# 19. உலகத்துக்கு நல்லுபதேசம் செய்ய நாமே தகுதியுடையோர்

சென்ற வாரம் சென்னப்பட்டனம் கந்தசாமி கோயில் வஸந்த மண்டபத்தில், சாது மஹாசங்கத்தாரின் ஏற்பாட்டிலே ஒரு கூட்டம் நடந்தது. அதிலே, ஸ்வாமி அத்புதாநந்தர் என்பவர் ஒரு நேர்த்தியான உபந்யாஸம் செய்ததாகத் தெரிகிறது.

ஸ்வாமி சொல்லியதன் சுருக்கம்:—''மத விஷயங்களில் நமது முன்ஞேர் மிகவும் உயர்ந்த ஆராய்ச்சிகள் செய்து வைத்திருக்கிருர்கள். இவற்றை நாம் நன்ருகத் தெரிந்து கொண்டு உலகத்தாருக்கெல்லாம் உபதேசம் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய வெளி தேசத்தார் நமது உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இனி, ''மதவிஷயங்கள்'' என்பவை பாரமார்த்திக உண்மைகளாம்; அதாவது ஐம்புலன்களுக் கெட்டாத, சுத்த அறிவிஞல் காணுதற்குரிய, தெய்விக உண்மைகள்; இசை ஞானம், பக்தி, யோகம் என்னும் வழிகளிலே கிடைப்பனவாகும். இவற்றை நமது முன்ஞேர் பெரிய பாடுபட்டுத் தேடித் தம்முடைய நூல்களிலே திரட்டி வைத்திருக்கிருர்கள். இந்தச் செல்வத்தை நாம் திறமையுடன் கையாண்டு உலகத்தாருக்கெல்லாம் வாரிக் கொடுத்து இவ்வுலகத்தின் துன்பங்களேயும் சிறுமைகளேயும், அறியாமைகளேயும் மாற்றி இதனே மேன்மைப்படுத்த வேண்டும்.

**தாம் இன்பு றுவது உலகு இன்புறக் கண்டு**
**காமுறுவர் கற்றிந்தார்**

என்று திருவள்ளுவர் சொல்லியபடி இஃதேஸ்வாமி அத்பு தாநந்தருடைய கருத்தாகும். இதை நான் பரிபூரணமாக அங்கீகாரம் செய்து கொள்கிறேன். ஆனால் நமது ஆசையை இவ்வளவுடன் நிறுத்தி விடலாகாது. லௌகிக விஷயங்களிலும் நமது உதவியை உலகம் வேண்டித்தான் நிற்கிறது. இதை நாம் மறந்து விடலாகாது. நமது முன்னோர் பாரமார்த்திகச் செய்திகளில் மாத்திரமே நிகரற்ற மேன்மை யடைந்திருந்ததாக நினைத்து விடலா காது. இஹலோக அறிவிலும் ஆச்சரியமான உயர்வு பெற்றிருந்தார்கள்: பல தேசங்களையும், அவற்றின் பலவித சாஸ்திரங்களையும், நன்றாக அறிந்த எனது நண்பரொருவர் ஐரோப்பாவில் மஹாகீர்த்தி பெற்றிருக்கும் யவனத்துச் (கிரேக்க தேசத்துச்) சிற்பத்தைக் காட்டிலும் நமது புராதன சிற்பம் மேம்பட்ட தென்று கருதுகிறார். இதை வெளியுலகத்தாருக்கும் விளங்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், ஸ்ரீ ஆனந்த குமாரஸாமி முதலியவித்வான் கள் மிகவும் உழைத்து வருகிறார்கள். ஆனால் இதை இங்கு நமது தமிழ் நாட்டிலே வாழும் ஜனங்களுக்கு விளங்கக் காட்டுவார் யாரையும் காணவில்லை.

பலதேசத்து ஸங்கீதங்களையும் நான் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். நமது புராதன ஸங்கீதத்துக்கு நிகரா னது இவ்வுலகத்தில் வேறெங்குமில்லை என்பது என்னு டைய முடிபு. கவிதை விஷயத்திலும் இப்படியே.

இனி கணிதம், ரஸாயனம் முதலிய வேறு பல சாஸ்தி ரங்களும் நமது தேசத்திலேதான் முதலில் வளர்ச்சி பெற்றவையாகும்.

நாம் இஹலோகத்து அறிவிலும் மேம்பாடு பெற வேண்டும். தெரியாத சாஸ்திரங்களின் ஆரம்பங்களைப் பிறரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். பிறகு அவற்றை நமது ஊக்கத்தாலும் உயர்மதியாலும் மேன்

மேலும் வளர்த்து மீளவும் உலகத்தாருக்கு ஊட்ட வேண்டும். இஹலோக வளர்ச்சியிலே நாம் தலைமை வகிக்க வேண்டும். அதற்கு நாமே தகுதியுடையோர்.

குறிப்பு;—இக் கட்டுரை தராசு என்ற பாரதியார் நூலில் உள்ளது.

## 20. ஹிந்து தர்மம்

*29 நவம்பர் 1917*

வாரீர் நண்பர்களே, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஹிந்து தர்மத்தைப் பரவும்படி செய்ய வேண்டுமானுல் அதற்கு இதுவே மிகவும் ஏற்ற தருணம். ஆஹா! ஸ்வாமி விவேகாநந்தரைப் போலே பத்துப்பேர் இப்போதிருந்தால் இன்னும் ஒரு வருஷத்துக்குள் ஹிந்து தர்மத்தின் வெற்றிக் கொடியை உலகமெங்கும் நாட்டலாம். அந்தக் கண்டங்கள் யுத்தமாகிய சுழற்காற்றுக்குள்ளே அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கையிலே, ஹிந்து தர்மத்தை எவன் கவனிப்பான் என்று கூறிச் சிலர் ஆக்ஷேபிக்கலாம். அந்த ஆக்ஷேபம் சரியன்று. சண்டைக் காலந்தான் நமக்கு நல்லது. இந்த ஸமயத்திலேதான் மனுஷ்ய அஹங்காரத்தின் சிறுமையும் தெய்வத்தினுடைய மஹிமையும் மனுஷ்யனுடைய புத்திக்கு நன்ருக விளங்கும். இவ்வுலக இன்பங்களைத் தர்மத்தினுலே பெற்ருலொழிய அவை இன்பங்கள் போலே தோன்றினுலும் துக்கமாவே முடியும். அவரவர் கர்மத்தின் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும். வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினையறுப்பான். நாம் இன்று நூறு ஸப்மரீன் வைத்துக் கொண்டு பிறருடைய கப்பல்களைத் தகர்த்தால், நாளை மற்ருெரு ஜாதியார் ஆயிரம் ஸப்மரீன் கட்டி

நம்முடைய கப்பல்களை நொறுக்கிப் போடுவார்கள். பாம்பைக் கொல்ல ஒருகீரிப் பிள்ளையுண்டு; பகை பகையை வளர்க்கும். நாம் மற்றவரை அடிமைப் படுத்தினால் நம்மை அடிமைப்படுத்த வேறு யாரேனும் முளைப்பார்கள்.

இவ்வுலகத்தில் நாம் செய்கிற ஒவ்வொருசெய்கையும். ஸ்வப்ரயோஜனத்தைக் கருதாமல். லோகோபகாரத்தை முன்னிட்டுக் கொண்டுசெய்யவேண்டும், தீராத ஆவலும், அவஸரமும், ஓயாத பரபரப்பும் உள்ள ஜ்வர வாழ்க்கை நாகரிகமாகமாட்டாது. சரியான நாகரிகத்துக்கு சாந்தியே ஆதாரம். யந்திரப்பீரங்கிகளும் ஸப்மரீன்களும் நாகரிகத்துக்கு அடையாளமல்ல. நிலக்கரிச் சுரங்கங்களும் ஆகாச வெடிகுண்டுகளும் மனுஷ்யனுக்கு பலமல்ல துணையல்ல அவை அபிவிருத்திக்கு லக்ஷணமல்ல. அவை மனிதனுக்குப்பகை. மனுஷ்யனையும் அவனுடையநாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையன.

கர்வத்தினாலே மரணம் உண்டாகும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங்களே உண்மையான நாகரிகத்தையும் நித்ய ஜீவனையும் விளைக்கும். இப்படி நூற்றுக் கணக்கான ஹிந்து தர்மக் கொள்கைகளை நாம் உலகத்தார் கேட்க முழங்குவதற்கு இதுவே நல்ல தருணம். இந்த ஸமயத்தில் மனுஷ்ய ஸமூகம் அழிந்து போகாமல் அதைக் காப்பாற்றி நல்ல வழியிலே சேர்க்கக் கூடிய ஜாதியார் நம்மைத்தவிர வேறு யாருமில்லை. கண்ணைத் திறந்து பூமண்டல முழுதையும் ஒரே பார்வையாகப் பார்த்தால் நான் சொல்வதுண்மையென்பது தானே விளங்கும். இவ்விஷயத்தை ஆழ்ந்து யோசனை பண்ணி இங்கிருந்து வெளி நாடுகளுக்கு நூற்றுக்கணக்கான பிரசங்கிகளை அனுப்பும்படி ராஜாக்களையும், ஜமீன்தார்களையும், செட்டியார்களையும், மடாதிபதிகளையும் பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன்.

—பாரதி தமிழ்.

# 21. ஜாதி—I

*26 டிசம்பர் 1916*

ஜாதி என்ற சொல் இரண்டர்த்த முடையது. முதலாவது ஒரு தேசத்தார் தமக்குள் ஏற்பத்திவைத்துக்டு கொள்ளும் பிரிவு. வேளாள ஜாதி, பிராமண ஜாதி, கைக்கோள ஜாதி என்பது போல. இரண்டாவது, தேசப் பிரிவுகளைத் தழுவிய வேற்றுமை. ஜப்பானிய ஜாதி, சீன ஜாதி, பார்ஸீ ஜாதி, பாரத ஜாதி, ஆங்கிலேய ஜாதி, ஜர்மானிய ஜாதி, ருமானிய ஜாதி என்பது போல. இவ்விரண்டும் அதிக அனுகூலம் இல்லையென்பது ஸ்ரீமான் ரவீந்திரநாத டாகுருடைய கக்ஷி.

அமெரிக்காவிலேயே பிறந்தவன் தன்னை அமெரிக்க ஜாதியென்றும், இங்கிலிஷ் ஜாதி இல்லையென்றும் நினைத்துக் கொள்ளுகிறான். இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயனுக்கும், குடியரசுத் தலைவன் வில்ஸனுக்கும் நடை, உடை, ஆசாரம், மதம், பாஷை எதிலும் வேற்றுமை கிடையாது. ஆனால் தேசத்தையொட்டி வேறு ஜாதி, நேஷன். இந்த தேச ஜாதிப்பிரிவு மேற்குப் பக்கத்தாரால் ஒரு தெய்வம் போலே ஆதரிக்கப் படுகிறது. அங்கு யுத்தங்களுக்கு இக்கொள்கை முக்கிய காரணம். எல்லா தேசத்தாரும் ஸகோதரரென்றும், மனுஷ்ய ஜாதி முழுதும் ஒன்றேயென்றும், ஆதலால் தேச வேற்றுமை காரணமாக ஒருவரையொருவர் அவமதிப்பதும் அழிக்க முயல்வதும் பிழைகளென்றும் ஸ்ரீடாகுர் சொல்லுகிறார்.

அமெரிக்காவிலே ஒரு சபையிலே இவர் மேற்படி கொள்கையை எடுத்துக் காட்டுகையில், அந்த தேசத்தாரொருவன் இவரை நோக்கி, “இவ்விதமான கொள்கையி

லிருந்தது பற்றியே உங்கள் தேசத்தை அந்நியர் வென்று கைப்பற்றிக் கொள்ள நீங்கள் தோற்றுக் கிடக்கிறீர்கள்" என்றான்.

"நாங்கள் இப்போது புழுதியோடு புழுதியாக விழுந்து கிடந்தாலும் எங்கள் பூமி புண்ணிய பூமி. உங்களுடைய செல்வத்தின் மேலே தெய்வசாபமிருக்கிறது" என்று ரவீந்திரநாதடாகுர் அவருக்கு மறுமொழி சொன்னாராம். அதாவது, இந்த நிமிஷத்தில் செல்வத்திலும், பெருமையிலும் நம்மைக் காட்டிலும் அமெரிக்கா தேசத்தார் உயர்வு பெற்றிருந்த போதிலும் இந்த நிலைமை எப்போதும் மாறுமலிருக்கு மென்று அமெரிக்கர் நினைப்பது பிழை. நாங்கள் தெய்வத்தையும் தர்மத்தையும் நம்பியிருக்கிறோம். கீழே விழுந்தாலும் மறுபடி எழுந்து விடுவோம். அமெரிக்கா விழுந்தால் அதோ கதி. ஆதலால் இனிமேலேனும் ஹிந்து தர்மத்தை அனுசரித்து உலக முழுவதிலும் எல்லா தேசத்தாரும் உடன் பிறப்பென்றும் சமானமென்றும் தெரிந்து கொண்டு, பரஸ்பரம் அன்பு செலுத்தினால் பிழைக்கலாமென்று ரவீந்திரர் அவர்களுக்குத் தர்மோபதேசம் செய்கிறார்.

வெளித் தேசத்தாருக்குத் தர்மோபதேசம் செய்கையில் நமது நாட்டில் குற்றங்கள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? இங்கே அநாவசியமான ஜாதி விரோதங்களும் (அன்புக் குறைவுகளும்) அவமதிப்புகளும் வளர விடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும் உடன் பிறப்பையும் நிலை நாட்டுவது நம்முடைய கடமையன்றோ?

# 22. ஜாதி—II

*ஜூலை 1917*

(குறிப்பு :— இக் கட்டுரையில் ஜனம் என்பதையும், ஜாதிஎன்பதையும் தனித் தனிப் பொருள்களில் வழங்கப் பட்டுள்ளன. ஜனம் என்பதை People என்ற கருத்திலும் ஜாதி என்பதை Nation என்ற கருத்திலும் கொண்டு ரவீந்திரநாதடாகுர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையை பாரதியார் மொழி பெயர்த்துள்ளார்.)

ஜனவகுப்புக்கள் தனித்தனி சுபாவங்களுடைய வெவ்வேறு ஜீவன்களாம். ஆனால் "ஜாதி"கள் வெறுமே வலிமைக்காகச் சேர்ந்த கூட்டங்களைத் தவிர வேறில்லை. அதுபற்றியே இவற்றின் உட்குணங்களும் புறச் செய்கைகளும் எங்கும் ஒரே சந்தமாக, ஒரே மாதிரியாக இருக்கின்றன. இவற்றுள்ளே வேற்றுமைகளிருந்தாலும் அவை தொழில் வலிமையைப் பற்றின வேற்றுமைகளே யன்றி குணபேதங்களல்ல. நவீன உலகத்தில் ஜனத்தின் ஜீவ சக்திக்கும், ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர்நடக்கிறது.

ஆசியாக் கண்டத்தின் மத்தியில் முன்பு மனிதர் குடியிருந்த நாட்டுக்கும், அதன் மேல் இடைவிடாமல் ஏறிக்கொண்டு வந்த பாலைவனத்து மணலுக்கும் சண்டை நடந்தது. உயிரும் அழகும் கொண்ட நாட்டை மணல் அழித்து விட்டது. அதுபோல் ஜாதி ஜனத்தை அழிக்கிறது. மனுஷ்யப் பொதுஜன உத்தம லக்ஷணங்களைப் பரவச் செய்தல் முக்கியமில்லை. என்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் திறமை வளர்ப்பதாகிய கல்நெஞ்ச ஸம்ப்ரதாயம் பலமடைகிறது. ஸான்ப்ரான்ஸிஸ்கோ நகரத்திலிருந்து லண்டன்வரை, லண்டனிலிருந்து டோக்யோ வரை ஜாதியெண்ணம் ஆதிக்கம் பெற்றிருக்கும்

நகரங்களனைத்திலும் ஒரே மாதிரியான இயல்பைக் காண லாம். அவற்றின் முகங்களைக் காட்டுவதில்லை முகமூடிகளைக் காண்பிக்கின்றன. ஜனம் ஜீவனுதலால் அதற்கு ஆத்மப் பிரகாசம் வேண்டும். அது ஸ்ருஷ்டி செய்யும். கல்வி, கலை, கோயில் முதலியன ஜனத்தின் ஸ்ருஷ்டிகளாம். இவை ஒரே விருந்தில் பலவித உணவுகள் போலே உண்மையை அறிந்து இன்பமடைவதில் வெவ்வேறு சுவை தருகின்றன. மனுஷ்ய லோகத்தை உயிர் வளமுடைய தாக்கிப் பலவிதங்களில் அழகு படுத்துகின்றன. ஆனால் ஜாதிகள் ஸ்ருஷ்டி செய்வதில்லை. அவை பெருக்கு கின்றன, அழிக்கின்றன; பெருக்குதலாவது சோறு துணி சேர்த்தல் போன்ற தொழில்வகை. பெருக்கும் கூட்டங்கள் அவசியமே. அழிக்குங் கூட்டங்களும் அவசியமாக இருக்கக் கூடும். ஆனால் இவை பேராசையும், விரோதமும் சேரும் போது, மனுஷ்ய ஜீவனை ஒரு மூலையில் ஒதுக்கி விடுகின்றன. இதனால் இசை தவறுகிறது. ஜனங்களின் சரித்திரம் அழிவை நோக்கிக் கழுத்தொடியும் வேகத் துடன் செல்லுகிறது.

மனுஷ்ய ஜாதி உயிருடனிருக்குமிடத்தே ஆதர் சங்களை. உத்தம தர்மங்களைப் பின்பற்றுகிறது. செத்த கட்டுப்பாடாகிவிடும் போது ஆதர்சங்களுக்கு இடங் கொடுப்பதில்லை. அதன் கட்டட மெல்லாம் புறத் தொழிலாகவே நடைபெறுகிறது. உள்ளிருக்கும் தர்மக் காட்சிக்கு அதன் உத்தரம் நேரில்லை. பல வளையாத முரட்டுத் தடைகளைக் கடந்து செல்ல வேண்டியதாகிறது.

மனுஷ்ய ஜீவனுக்குத் தனிமைக் குணமொன்றிருக் கிறது. தனிமையாகிய களத்திலே தான் அவனுடைய ஆத்மா தன்னைப் பிரகாசப்படுத்திக் கொள்ளவும் வளரவும் ஸ்வாதீன மடைகிறது. மனிதன் பொது நிலையை விட்டு

ஒரு 'தொழிலாளி' அதாவது யாதேனுமோர் வியாபாரம், அல்லது விவகாரத்தால் கட்டுப்பட்டவன் ஆகும் போது அவனைச் சுற்றி இறுகலான ஓடு தோன்றுகிறது. இந்தத் தொழிலாளித்தனம் என்ற களத்திலே மனிதர் தத்தம் அறிவுக்குத் தனிவழிகள் காட்டித் தமது பலத்தை ஒரு முகமாக்கித் தாம் தாம் முற்படவேண்டுமென்று பரஸ்பரம் முழங்கைகளால் எற்றித் தள்ளுகிறார்கள். தொழிலாளித் தனம் அவசியந்தான். ஆனால் அதை ஆரோக்கிய வரம்பு கடந்து செல்லவிடக் கூடாது. அது மனிதனை அடிமைப் படுத்தவும், குறுக்கவும், கடினமாக்கவும், ஆதர்சங்களில் நம்பிக்கையிழந்து லௌகிகலாபந் தேடுவோனாகச் செய்யவும் இடங்கொடுக்கக் கூடாது.

புராதன ஹிந்து தேசத்தில் ஸ்மிருதியால் தொழில் களில் வரம்புகடவாமல் நிறுத்தப்பட்டன. அவை முதலாவது ஜனங்களின் பொதுத் தேவைகளாகவும், பிறகு அவரவருக்கு ஜீவனோபாயங்களாகவும் கருதப் பட்டன. எனவே எல்லையில்லாத போட்டியின் தூண்டு தலுக்குட்படாமல், தனித்தனி தனது பரிபூரணத் தன்மை யைப் பரீக்ஷை செய்ய நேரமிருந்தது.

ஜனங்களுடைய பொதுவான தொழிலாளித் தனத் துக்கு ஜாதியென்று பெயர். அது ஜனங்களுக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது. ஏனெனில் அதில் மிகுந்த லாபமுண்டாகிறது; எனவே உயர்ந்த ஆதர்ஸங் களின் நியதிகளிலே மனிதருக்குப் பொறுமையில்லாது போகிறது. லாபம் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு ஸ்வார்த்தம், பொறாமை, விரோதம், இவற்றின் அல்லல் பலமடைகிறது. இவை மனிதர்களின் மனத்தில் லாபத் தால் விளைகின்றன.

உயிருள்ள ஜனங்கள் ஜாதிகளாக இறுகுதல் மேன் மேலும் அவசியமாகிறது. ஜாதியக் கொள்கையின்

வளர்ச்சியால் மனிதனுக்கு மனிதன் பெரிய விபத்தாய் விட்டான். அக் கொள்கை தீராத பயத்தை விளைவிப்ப தனுல், மேன்மேலும் பெரிய ஆபத்தாக மூண்டு வருகிறது.

கூட்டத்தின் புத்தி ஒரு குருட்டு சக்தி. நீராவி முதலிய பூத சக்திகளைப் போலவே அதையும் பிரமாண்ட மான பலம் சேர்க்க உபயோகப் படுத்தலாம். ஆதலால் லோபத்தாலும் பயத்தாலும் தமது ஜனங்களை வலிமைக் கருவிகளாக்க விரும்பும் அரசர் இந்தக் கூட்டப் புத்தியைத் தமக்கு வேண்டிய வழியில் பயிற்சி செய்கிறார்கள். ஜனங்களுடைய மனதில் எங்கும் பயமும், ஸ்வஜாதிக் கர்வமும், பிற ஜாதிகளிடம் விரோதமும் வளர்த்தல் கடமை யென்று நினைக்கிறார்கள். பத்திரிகைகளையும் பள்ளிக் கூடப் புஸ்தகங்களையும் கோயில் ஆராதனைகளையுங் கூட இந் நோக்கத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

தெய்வ விரோதமான இந்தக் குருட்டுக் கொள்கையைத் தைரியத்துடன் எதிர்த்துப் பேசுவோரை நியாயஸ்தலங்களில் தண்டிக்கிறார்கள்; அல்லது கூட்டத்தி லிருந்து விலக்குகிறார்கள்.

தனி மனிதன் (லோபதாப) முதலிய, உணர்ச்சிகளின் சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும் போது யோசனை செய்வதில்லை. அவனுடைய தர்மப் புலன் மழுங்கிப் போகிறது. கூட்ட மனங்களில் மனிதத் தன்மையை நசுக்கி விடுவதனுல் மிகுந்த பலமுண்டாகிறது. ஏனென் றால் கூட்டப் புத்தி இயல்பில் அநாகரிகமானது. அதன் சக்திகள் பூத சக்திகளைப் போன்றது. இருளின் பெரிய வலியை ஜாதி தனக்குப் பயன்படுத்திக் கொள்வதால் ஜாக்கிறதையாக இருக்கிறது.

சங்கட காலங்களில் ஒரு ஜனத்தின் தற்காப்புச் சிந்தையை ஆதிக்கமுடையதாகச் செய்தல் அவசியமே. அப்போது அதன் ஒற்றுமையுணர்ச்சி கடுமையான விழிப் பெய்துகிறது. இந்த மிகையுணர்ச்சி ஜாதியில் எப்போதும் சாகாதபடி செயற்கையுபாயங்களால் காக்கப்படுகிறது. ஒருவனுடைய வீட்டைத் திருடர் வந்து கொள்ளையிடும் போது அவன் போலீஸ் சேவகனுடைய தொழிலை மேற் கொள்ளவேண்டும். ஆனால் அவனுடைய சாதாரண ஸ்திதியே அப்படியாய்விட்டால் அவனுடைய வீட்டுச் சிந்தை மிகையாகி வீட்டருகே போவோர் வருவோர் மேலெல்லாம் பாய்ந்து விழும்படி செய்கிறது.

இந்த மிகையுணர்ச்சி ஒருவன் கர்வப்படத் தக்க உடைமையன்று. இது மெய்யாகவே ஆரோக்கியத்துக்கு லக்ஷணமன்று. அதுபோலவே ஒரு ஜாதியின் தீராத தற்போதமும் ஜனங்களுக்கு மிகுந்த தீங்கு விளைவிக்கும். அதனால் தற்காலத்துக்குப் பயன் உண்டாவது போலே தோன்றினாலும் மனிதனுடைய நித்ய ஜீவனுக்கு நஷ்ட முண்டாகும்.

ஒரு கூட்டம் சேர்ந்து யாதேனுமொரு குறுகிய நோக் கத்துக்குத் தம்மைப் பயிற்சி செய்து கொள்ளுமாயின் பிறகு அதையே தளராமல் காத்து அதற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்று போதனை செய்தல் அந்தக் கூட்டத்திற்கு லாபகரமாகிறது.

ஒரு ஜன முழுதையும் குறுகின ஆதர்ஸப்படி பயிற்சி செய்வதே ஜாதியக் கொள்கை. அது ஜனங்களுடைய உள்ளத்தைக் கவரும்போது தர்மக் குறையையும் குருட் டறிவையும் விளைவிப்பது நிச்சயம். இந்த ஜாதியக் கொள்கையின் காலம் பிரம்மாண்டமான ஸ்வார்த்தமும் செருக்கும் தலைப்பட்ட காலம். இது நாகரிகத்தில்

அசாசுவதமான ஓரிடைக்காலமேயன்றி வேறில்லையென்ற நம்பிக்கையை நாம் உறுதியாகப் பற்றி நிற்போம்.

மனித சரித்திரத்தின் இந்த அசாசுவதமான குணத்தைத் திருப்தி செய்யும் பொருட்டு சாசுவதமான வேலை செய்வோர் இனி வரப்போகிற உண்மையான விடுதலைக் காலத்துக்குத் தகுதியில்லாது போவார்கள்.

ஜாதியக் கொள்கை தடையின்றி வளர்வதனுல் மனுஷ்ய நாகரிகத்தின் ஆதாரநீதி தன்னையறியாமலே மாறுபடுகிறது. சமூகத்து மனுஷ்யனுடைய உத்தம லக்ஷ்யம் பிறர் நலம். ஆனுல் ஜாதி தொழிலாளித்தனம் உடையதாகையால் அதற்குத் தக்கபடியே அதன் உத்தம லக்ஷ்யம் தன் நலம். இதனுலேயே தனி மனுஷ்யன் தக்குனத் தனக்கென்ற அவா உடையவனுக இருந்தால் பழிக்கப்படுகிருன். ஒரு ஜாதி அப்படியிருந்தால் புகழப் படுகிறது. இதனுல் ஏக்கத்துக்கிடமான நீதிக் குருட்டுத் தனம் உண்டாகிறது. அது ஜனத்தின் மதத்தை ஜாதியின் மதத்தோடு ஒன்ருகப் போட்டுக் குழப்புகிறது. இதனுலே தான் உலகத்தின் பெரும் பகுதியை கிறிஸ்தவ ஜாதியார் ஆளுவதனுலே கிறிஸ்து மதந்தான் உயர்ந்ததென்று சொல்லுவோர் சிலர் இருப்பதாகக் காண்கிருேம். இது ஒரு திருடன் களவு செய்த சொத்தை அளவிட்டு அவன் மதக் கொள்கையை ஆதரிப்பதொக்கும். ஜாதிகள் தாம் பிற மனிதரை யதேஷ்டமாகக் கொன்று முடித்தது பற்றி ஆலயங்களில் விசேஷங் கொண்டாடுகின்றன. "டக" ஜாதிக் கள்வர் கூட்டம் தமது கொள்கையை நிறைவேற்றியது, தாம் வணங்கிய தேவியின் கிருபையென்று நினைத்தார்கள் என்பதை மேற்படி ஜாதிகள் மறந்துவிடுகின்றன. "டக" ஜாதியார் விஷயத்தில் அவர்களுடைய தேவதையை வெளிப்படையாகவே ஸம்ஹார மூர்த்தியென்று சொல்லி வணங்கினர். அதுமேற்படி குற்றவாளி

ஜாதியின் கொலையுணர்ச்சியை தெய்வமாக்கினவாறு தனி மனிதனுடைய மனமன்று, கூட்டத்தின் பொது உள்ளம். ஆதலால் தெய்விகமென்று கருதப்பட்டது. அதேமாதிரி நவீன சர்ச்சு (கிறிஸ்தவாலயங்களில்) ஜாதியின் பொது மனமென்ற கூட்டு நிலையில் ஸ்வார்த்தமும் அற்பச் செருக்கும், விரோதமும் தெய்வ பூசையுடன் கூசாமல் வந்து கலந்து கொள்ளுகின்றன.

தன்னலத்தை நாடி யுழைத்தால் முழுமையும் அஹங்காரமாகவே யிருக்க வேண்டு மென்று கட்டாயமில்லை. எல்லா நலத்துடன் அது பொருந்தவுங் கூடும், எனவே ஆதர்சிகமாகப் பேசுமிடத்து, ஜன ஸ்வார்த்தத்தில் பிரகாசத்தை நாடும் ஜாதியக் கொள்கை அவமானமடைய ஹேதுவில்லை. ஆனால் நாம் அனுபவத்தில் காண்பது யாதெனில் செல்வமடைந்த ஜாதியொவ்வொன்றும் பிறருக்குத் தீங்கு செய்யும் ஸ்வார்த்தச் செயல்களிலேதான் அதையடைந்திருக்கிறது. அதாவது வியாபார வேட்டைகளினாலும், அந்நிய தேச உடைமைகளாலும், அல்லது இரண்டும் சேர்ந்ததாலும் என்க.

இந்த லௌகிகச் செல்வமிகுதி ஓயாமல் ஜனத்தின் ஸ்வார்த்தம் இயல்பைப் போஷிப்பதுமன்றி ஒரு ஜாதிக்கு ஸ்வார்த்தம்(தன்னலம்) அவசியம். ஆதலால் அதுவே தர்மம் என்ற பாடத்தை மனிதரின் உள்ளத்தில் அழுந்தச் செய்கிறது. ஐரோப்பாவில் ஜாதியெண்ணத்தில் அழுத்தம் எப்போதும் வளர்ந்து செல்வதால் அது நேர்ச் செய்கையாலும், தொத்தும் திறத்தாலும் மனிதருக்குப் பெரிய விபத்தாய்க் கொண்டு வருகிறது.

மனுஷ்ய ஸ்வபாவத்திலேயே தீமைகள் இருப்பது மெய்தான். நாம் தர்மவிதிகளை நம்பியிருந்தாலும் தன்னுட்சியில் பயிற்சி பெற்றிருந்தாலும் அவை நம்மையறியா

மல் வெளியே கிளைத்து விடுகின்றன என்பதும் மெய்தான். ஆனால் அவை தம் நெற்றி மீது பழிச்சூடு போட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றின் வெற்றியே அவற்றின் கொடூரரூபத்தை அதிக கோரமாகக் காட்டுகிறது.மனுஷ்ய சரித்திர முழுமையிலும் துன்பப்படுவோர் சிலரும் படுத்து வோர் பிறரும் இருக்கவே செய்வார்கள். தீமையை வெல் லுதல் எக்காலத்திலும் பரிபூரணமாக நிறைவேறாது. தீ எரிவது போல் நமது நாகரிகத்தில் அது தொடர்ச்சியாக நடக்கும் செய்கையாம்.

நித்தியமான பரிபூரணத்வ லக்ஷ்யத்துக்கும் அதன் நிரந்தர ஸ்தானத்துக்கும் உள்ள பொருத்தமே ஸ்ருஷ்டி யென்று சொல்லப் படும்.

நன்மையென்னும் உடம்பாட்டு லக்ஷ்யம் ஸாதனக் குறைவு என்ற எதிர்மறையுடன் சமவேகமாகச் செல்லும் மட்டும், அவ்விரண்டுள் முழுப் பிரிவுண்டாகாதிருக்கும் மட்டும் நாம் துன்பத்துக்கும் நஷ்டத்துக்கும் பயப்பட வேண்டா.

ஆதலால் முற்காலங்களில் யாதேனு மொருஜனம் கலகந் தொடங்கிப் பிறருடைய மனுஷ்ய உரிமையைப் பறித்துவிட முயன்ற போது சில சமயங்களில் அந்த ஜனத் துக்கு வெற்றியும் சில சமயங்களில தோல்வியும் ஏற்பட்டது; அவ்வளவுதான். ஆனால் இந்த ஜாதியக் கொள்கை இன்று சர்வ சம்மதமாய்த் தனது தன்னலம் அளவிலே பிரமாண்டமாக இருப்பது கொண்டு அதை தர்மமென்று காட்டத் தலைப்படுமிடத்தே இந்தக் கொள்கை பிறர் சொத்துக்களை கொள்ளையிடுவது மாத்திர மேயன்றி, மனுஷ்ய ஜாதியின் உயிர் நிலையைத் தாக்கு கிறது. தர்ம விதியைப் புறக்கணிக்கும் புத்தியை மனிதருக்கு அவசரமாகவே விளைவிக்கிறது. ஏனெனில் ஜனம் தர்ம

விதியை தெய்விகமாக எண்ண, ஜாதி அந்த விதியைக் காற்றிலே தூற்றி விடுகிறதெதனுல் எனில், ஜனத்தைக் காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்குக் கற்பிக்கப் படுவதனுல் என்க.

ஒரு நோய் மூளையைத் தாக்கும் போது அது, மிகவும் கடுமையாகிறது என்று கேள்விப்படுகிறோம். ஏனென்றல் எல்லாவிதமான வியாதி சக்திகளையும் இடைவிடாமல் முற்றுகை போடுவது மூளையேயாம். ஜாதியத் தன்னலக் கொள்கையின் உள் நிலைமை ஒரு ஜனத்திற்கு நேரிட்ட மூளை வியாதியைத் தவிர வேறில்லை. தற்காலத்து அந்த நோயின் அறிகுறிகள் எவையெனில் சிவந்த கண்களும், குவிந்த முட்டிகளும், கொடுஞ் சொற்களும், கொடுஞ் செயல்களுமாம். இயற்கையிலே உள்ள சொஸ்தமாக்கும் கருவிகளை அது நொறுக்கிப் போடுகிறது.

ஜனசமூகத்தின் உயிருக்கு நல்ல வழி காட்டும் சக்தி யாதெனில் ஆத்ம த்யாகமும், அனுதாபத்துக்கும் கூட்டுத் தொழிலுக்கும் இடமாகிய தர்மசிந்தையுமே என்க. சூழ்ந்திருக்கும் வஸ்துக்களுடன் அனுகூல சம்பந்தம் கொண்டிருப்பதே அதன் தொழிலாம்.

இன்னும் பெருங்கேடு யாதெனில் ஜனங்களின் இந்தக் கோணல் நீதியானது தேசபக்தியென்ற பகட்டான பெயர் புனைந்து கொண்டு தன்னை ஒரு மேலான தர்மமாகக் காண்பித்துக் கொண்டு திரிகிறது. சுழலுகிற தனது தொத்து நோயை உலக முழுவதும் பரப்பித் தன் ஜ்வரத்தை ஆரோக்கியத்தின் சிறந்த குறியென்று முழங்குகிறது. இயற்கையில் தீங்கில்லாத ஜனங்களின் மனத்தில் பொருமையுண்டாக்குகிறது.

"ஜன்னி நிலையில் இருக்கும் அக்கம்பக்கத்துத் தேசத்தாருக்குள்ள பலம் நமக்கில்லையே, அவர்கள் பிறருக்குச் செய்யும் தீமை நம்மால் செய்ய முடியவில்லையே நாமன்றோ தீமையனுபவிக்கிறோம்" என்று பொறாமையுண்டாக்குகிறது.

எனது ஐரோப்பிய நண்பர் அடிக்கடி என்னிடம், "இத்தனை கொடிய தீமையை அழிக்க உபாய மென்ன?" என்று கேட்கிறார்கள். வெறுமே எச்சரிக்கை செய்து விட்டு மாற்று வழி சொல்லா திருக்கிறேனென்றே என் மேல் பலர் குற்றஞ் சொல்லுகிறார்கள்; ஒருவித அனுஷ்டானத்தால் நன்மையுண்டாகு மென்று நினைக்கிறோம். அனுஷ்டானத்துக்குப் பின்னே மறைந்து நிற்கும் உள்ள நிலை தவறாக இருந்தால் அனுஷ்டானம் இன்றில்லா விட்டாலும் நாளைக்குத் தீமையுண்டாக்கவே செய்யும் என்பதை நாம் மறந்து விடுகிறோம். இன்று ஒரு ஜாதி கொண்டிருக்கும் அனுஷ்டானம் நாளை எல்லா ஜாதிக்கும் பரவும். மனிதர் தமது மிருகக்குணங்களையும் கூட்டக் கோப தாபங்களையும் விடும்வரை புதிய அனுஷ்டானம் புதிய தொரு துன்பக் கருவி ஆகுமேயன்றி வேறில்லை. அல்லது வியர்த்தமாகும். நாம் தார்மிகமாக ஸத்குணத்தையும் கார்யஸித்திக் குரிய அனுஷ்டானத்தையும் ஒன்றாகக் கருதிக் குழம்பியே பழகியிருக்கிறோமாதலால் ஒவ்வொரு புதிய அனுஷ்டானமும் தோற்றுப் போகும் போது தர்ம விதியினிடத்திலேயே அவநம்பிக்கை கொள்ள நேரிடுகிறது.

ஆதலால் நான் எந்தப் புதிய அனுஷ்டானத்திலும் நம்பிக்கை வைப்பதில்லை. தெளிவான யோசனையும், பெருந்தகைமையுடைய உள்ளமும், நேர் நடையுமுடையவர்களாய் உலக முழுதிலும் ஆங்காங்கே இருக்கும் தனித் தனி மனிதர்களிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

அவர்களே தர்மத்தின் உண்மைக்கு வாய்க்கால்களாவார்கள். நமது தார்மிக லக்ஷ்யங்கள் உளியும் சம்மட்டியும் வைத்துக் கொண்டு வேலை செய்யவில்லை. சிற்பிகளிடம் அனுமதி கேட்காமல் மரம் வளர்வது போல் மண்ணுக்குள் வேர்களையும் இயற்கையிலேயே விடுகின்றன. இந்தக் காரணத்தாலேதான் ஜப்பானில் ப்ரஞ்ச் தேசத்து யௌவனப் பிராயமுடைய தர்மிஷ்டனொருவனைக் கண்ட போது இனி நாகரிகத்தில் உயர்ந்த காலம் வருவதைப் பற்றி என் மனதில் நிச்சய மேற்பட்டது. ஐரோப்பாவில் அழிவின் பெரிய சக்திகள் களிக் கூத்தாடிக் கொண்டிருக்கையிலே நான் இந்தத் தனியான வெளிக் கீர்த்தி பெறாத ப்ரஞ்சு இளைஞனைக் கண்டேன். அவனுடைய முகத்தில் புதிய ஸூர்யோதயத்தின் ஒளி வீசிற்று. அவனுடைய வாக்கில் புதிய உயிரின் அதிர்ச்சி தோன்றிற்று. எனவே ராஜ்யதந்த்ரிகளின் பஞ்சாங்கத்தில் பதிவாகா விடினும் மஹத்தான புதிய யுகம் ஏற்கெனவே பிறந்து விட்டதென்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

—ரவீந்திரநாத டாகுரின் ஐம் பெருங் கட்டுரைகள் என்ற நூலிலிருந்து—மொழி பெயர்த்தவர் பாரதியார்.

## 23. ஸ்ரீ ரவீந்திரர் திக்விஜயம்

*25 ஆகஸ்டு 1921.*

மன்னனற்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை;
கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு.

கீர்த்தியடைந்தால், மஹான் ரவீந்திரரைப் போலே அடையவேண்டும்.

ஜெர்மனி தேசம் இன்றைக்கும் ஐரோப்பாக் கண்டத்தின் வித்யா ராஜதானியாக விளங்குகிறது. ஜெர்மனியில் நமது பாரத கவீந்திரராகிய ரவீந்திரருக்கு நடத்தப்பட்ட உபசாரங்களெல்லாம் அவருக்குச் சேரமாட்டா. பாரத மாதாவின் பாத கமலங்களுக்கே சேரும். ஜெர்மனியில் உபசாரம் நடந்த மாத்திரத்திலே, அதைப் பின்பற்றி மற்ற முக்கியமான ஐரோப்பிய தேசங்களெல்லாம் அவருக்குப் பூஜை நடத்துமென்பது சொல்லாமலே விளங்கும். அங்ஙனமே நடத்தியுமிருக்கின்றன என்பதைக் கீழே நன்கு விவரணம் புரிவோம்.

*1921*-ஆம் வருஷம், மே மாஸம், *21*-ந் தேதியன்று 'ஹம்புர் கெர் ஜெய்துங்க' என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதியிருக்கும் நிருபத்தில் ஸ்ரீமான் டாகுரைப் பற்றிப் பின்வரும் வசனங்கள் கவனிக்கத்தக்கன : "ஸ்ரீமான் ரவீந்திரநாத டாகுர் ஸபைக்குள் வந்து பிரவேசித்த மாத்திரத்திலே எங்கள் அறிவுக்கெட்டாத ஒரு சக்தி வந்து புகுந்தது போலிருந்தது. இந்த மனிதனுடைய வாழ்க்கையில் ஒற்றை க்ஷணமாவது இவர் எல்லையில்லாத ஜகத்துடன் லயப்பட்டு நில்லாத க்ஷணம் கிடையாதென்பது தெளிவாகப் புலப்பட்டது. அவருடைய ஆரம்ப வசனங்களே மிகவும் வியக்கத்தக்கனவாக இருந்தன. கீழ்த்திசைக்கும் மேற்றிசைக்கும் நிகழ்ந்திருக்கும் ஸந்திப்பே இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய ஸம்பவமென்று ரவீந்திரர் தம்முடைய முதல் வாக்கியமாகக் கூறினர். ஆசியா ஐரோப்பியாவிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய உண்மைகள், ஆசியா ஐரோப்பாவிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய சக்திகள் பல இருக்கின்றன என்பதை ரவீந்த்ரர் மறுக்கவில்லை. இதனை மேற்றிசை உபந்நியாஸங்களிடையே அவர் பன்முறை அங்கீகாரம் செய்திருக்கிறார். இந்தியாவுக்கு வந்த பின்னர் சில ஆங்கிலோ இந்தியப்

பத்திராதிபர்களுக்குப் பேரானந்தம் விளையும்படி மிகவும் அழுத்தமான பாஷையில் வற்புறுத்தியிருக்கிறார். ஆனால், இஃதன்று அவருடைய முக்கியோபதேசம். நாம் மேற்றிசை யாரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய அம்சங்களைக் காட்டிலும், அவர்கள் நம்மிடம் கற்றுக் கொள்ளவேண்டிய அம்சங்கள் அதிகமென்பதே அவருடைய மதம். ஆசியாவையும் ஐரோப்பாவையும் ஒற்றுமைப்படுத்தினாலன்றி, உலகத்தில் யுத்தங்கள் நிற்கப் போவதில்லை. ஆசியாவும் ஐரோப்பாவும் ஸமத்துவம், ஸஹோதரத்துவம், அன்பு என்ற தளைகளாலே கட்டப்பட்டாலன்றி உலகத்தில் ஸமாதானத்துக்கிடமில்லை. ஸமாதானமே யில்லாமல், மனிதர் பரஸ்பரம் மிருகங்களைப் போலே கொலை செய்து கொண்டு வருமளவும், மனிதருக்குள்ளே நாகரிக வளர்ச்சியைப் பற்றிப் பேசுதல் வெற்றுரையே யாகுமென்று கூறி விடுக்க. ஆசியாவையும் ஐரோப்பாவையும் இங்ஙனம் ஒற்றுமைப் படுத்துதற்குரிய பல புதிய உண்மைகளையும் அறங்களையும், தம்முடைய அற்புதமான நூல்களாலும் உபந்நியாஸங்களாலும் தெளிவுபடுத்தி மஹான் டாகுர் இந்த பூமண்டலத்தையே தமக்குக் கடன்படுமாறு செய்துவிட்டார். இதனை ஜெர்மனி முற்றிலும் நன்றாக உணர்ந்து கொண்டு, அதன் பொருட்டாக நம் ரவீந்த்ரரிடம் அளவிறந்த மதிப்புச் செலுத்துவதுமன்றி அபாரமான நன்றியும் செலுத்துகிறது.

தன் பொருட்டாகச் சேகரிக்கப்படும் கீர்த்தியொரு கீர்த்தியாகுமா? ஒரு தேச முழுமைக்கும் கீர்த்தி சேகரித்துக் கொடுப்போனுடைய புகழே புகழ். ரவீந்த்ரநாதர் இந்தியாவை பூலோக குருவென்று பூமண்டலத்தார் கண்முன்னே நிலைநாட்டிக் கொடுத்தார். அவருடைய திருவடி மலர்கள் வாழ்க.

இந்தியாவின் ஞானோபதேசமாகிய அமிர்தத்துக்கு ஐரோப்பாவில் உயர்ந்த தரத்து மேதாவிகள் எத்தனை வேட்கையுடன் காத்திருந்தனரென்பது மேலே கூறிய ஆஸ்திரிய நிருபரின் கடிதத்திலே மற்றொரு பகுதியில் பின்வரும் வசனத்தாலே விளக்கப்படுகின்றது :—"இந்த நூற்றாண்டின் சிதறுபட்ட குழந்தைகளாகிய நாம் (ஐரோப்பியர்) இப்போது ஒற்றுமையை நாடித் தவிப்பது போல் எப்போதும் தவித்தது கிடையாது. நரகவாதனைப் படுகிற நாம் இன்றும் எதிர்காலத்தில் இந்த மண்மீது தேவலோக அனுபவங்களெய்துவோம் என்று கனவுகள் காண்பதை விடவில்லை. இப்படியிருந்த எங்கள் முன்னே மற்றொரு லோகத்திலிருந்தொரு மனிதன் வந்தது போலே டாகுர் வந்தார். அவரை நல்வரவு கூறி உபசரிப்பதற்கு இப்போது நாம் தகுதி பெற்றிருப்பது போல் இதுவரை எப்போதுமிருந்ததில்லை. இப்போது ஆயத்தமாக இருப்பது போல், இதுவரை எப்போதும் ஆயத்தமாக இருந்தது கிடையாது. இஃது நேற்று அவருக்கு நடந்த உபசாரங்களாலே நன்கு விளங்கிற்று" என்று அந் நிருபர் கூறுகிறார்.

இனி பிரான்ஸ் முதலிய மற்ற தேசங்களில் இந்தக் கவீசுவரருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றிப் பேசு முன்னர், இவர் இந்தியாவின் எந்த உண்மையைத் தெரிவித்தபடியாலே இங்ஙனம் பாரத பூமிக்கு பூலோக குருத் தன்மை ஏற்படுத்திக் கொடுக்க வல்லோர் ஆயினர் என்பதைச் சற்றே ஆராய்ச்சி புரிவோம்:—

அஃது பழைய வேத உண்மை; எல்லாப் பொருள்களும் ஒரே வஸ்துவாகக் காண்பவன் ஒருவனுக்கு மருட்சி யேது? துயரமேது? எல்லாம் ஒரே பொருளென்று கண்டவன் எதனிடத்தும் கூச்சமேனும், வெறுப்பேனும், அச்சமேனும் எய்தமாட்டான். அவன் எல்லாப் பொருள்களிடத்தும்

அன்பும், ஆதரவும், ஸந்துஷ்டியும், பக்தியும் செலுத்து வான். எல்லாப் பொருளிலும் திருப்தி பெறுவோன் எப்போதும் திருப்தியாயிருப்பான். இங்ஙனம் மாறுத சந்தோஷ நிலையே முக்தி நிலை என்றும் அமரபதமென்றும் கூறப்படுவது. இதனை மனிதன் அப்யாஸத்தாலும் நம்பிக் கையாலும் இந்த உலகத்தில் எய்திவிட முடியும். அஃதே வேத ரஹஸ்யம்.

இந்த ஆத்ம ஐக்யமான பரம தத்துவத்தை மிக இனிய தெளிந்த வசனங்களாலே ஐரோப்பாவுக்கு எடுத்துக் கூறியது பற்றியே ரவீந்த்ர கவிச்சக்ரவர்த்திக்கு ஐரோப்பா இங்ஙனம் அற்புத வழிபாடு செலுத்தியது.

—பாரதி தமிழ்.

## 24. செல்வம்-I

*28 நவம்பர் 1917*

ருஷ்யாவில் 'சோஷலிஸ்ட்' கட்சியார் ஏறக்குறைய தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றிவிடக் கூடுமென்று தோன்றுகிறது. சோஷலிஸ்ட் கட்சியென்பதைத் தமிழில் ஸமத்துவக்கட்சி என்று சொல்லலாம். அதுகூட சரியான மொழிபெயர்ப்பாகாது. சொத்து விபாகம் செய்திருப்பதில் இப்போது சிலர் செல்வரென்றும் பலர் ஏழைகளென்றும் ஏற்பட்டிருப்பதை மாற்றி உலகத்திலுள்ள சொத்தை அதாவது பூமியை உலகத்து ஜனங்களுக்கு ஸமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்றும், தொழில் விஷயத் தில் இப்போது போட்டிமுறை இருப்பதை மாற்றிக் கூடி யுழைக்கும் முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றும் மேற்படி கட்சியாருடைய முக்கியமான கோட்பாடு. ஆதலால் இந்தக் கட்சிக்கு ஐக்கியக்கட்சி

என்று பெயர் சொல்லுவது பொருந்தும் என்று தோன்று கிறது. இதை "அபேதக் கட்சி" என்று சொல்வாருமுளர்.

இந்தக் கட்சி இந்தியாவில் ஏன் இதுவரை ஏற்பட்டு விருத்தியடையவில்லை என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். முதலாவது காரணம் ஹிந்து ஜன ஸமூக அமைப்பில் ஐரோப்பாவில் இருப்பதுபோலவே அத்தனை அதிகமான தார தம்மியம் இல்லை. முதலாளி, தொழிலாளி, செல்வன், ஏழை இவர்களுக்கிடையே ஐரோப்பாவில் உள்ள பிரிவும் விரோதமும் நம் தேசத்தில் இல்லை. ஏழைகளை அங்குள்ள செல்வர் அவமதிப்பதுபோலே நமது நாட்டுச் செல்வர் அவமதிப்பது கிடையாது. ஏழைகளுக்குத் தானம் கொடுப்பது என்ற வழக்கம் நமது தேசத்தில் இருக்குமளவு அந்தக் கண்டத்தில் கிடையாது. லண்டன் நகரத்தில் பிச்சைக்காரனைப் போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போவான். பிச்சைக் குற்றத்திற்காக மாஜிஸ்டிரேட் தண்டனை விதிப்பார். நமது தேசத்தில் 'தேஹி' என்று கேட்டவனுக்கு 'நாஸ்தி' என்று சொல்கிறவனை எல்லோரும் சண்டாளன் என்று தூஷிப்பார்கள்.

இங்கிலீஷ் நாகரீகம் நமது தேசத்தில் நுழையத் தொடங்கியதிலிருந்து, இங்கும் சில மூடர் பிச்சைக்காரரை வேட்டையாடுவது புத்திக் கூர்மைக்கு அடையாளமென்று நினைக்கிறார்கள். பிச்சைக்காரன் வந்தால் "ஏண்டா தடி போலிருக்கிறாயே! பிச்சை கேட்க ஏன் வந்தாய்? உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வைது துரத்துவார்கள். "உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வாயினால் சொல்லி விடுதல் எளிது. உழைக்கத் தயாராக இருந்தாலும், வேலை யகப்படாமல் எத்தனை லக்ஷலக்ஷம் பேர் கஷ்டப்படுகிறார்கள் என்ற விஷயம் மேற்படி நாகரீக வேட்டை நாய்களுக்குத் தெரியாது.

சோம்பேறியாக இருப்பது குற்றந்தான். பிச்சைக்கு வருவோரில் பலர் மிகவும் கெட்ட சோம்பேறிகள் என்பதும் உண்மைதான். இதை யெல்லாம் நான் மறுக்கவில்லை. ஆனாலும், பிச்சை யென்று கேட்டவனுக்கு ஒரு பிடி அரிசி போடுவதே மேன்மை; வைது துரத்துதல் கீழ்மை. இதில் சந்தேகமில்லை.

சோம்பேறி! பிச்சைக்காரன் மாத்திரம்தானு சோம் பேறி? பணம் வைத்துக்கொண்டு வயிறு நிறையத் தின்று தின்று யாதொரு தொழிலும் செய்யாமல் தூங்குவோரை நாம் சீர்திருத்திவிட்டு அதன் பிறகு ஏழைச் சோம்பேறிகளை சீர்திருத்தப் போவது விசேஷம். பொருமையும் தன் வயிறு நிரப்பிப் பிற வயிற்றைக் கவனியாதிருத்தலும், திருட்டும். கொள்ளையும் அதிகாரமுடையவர்களும் பணக்காரர்களும் அதிகமாகச் செய்கிருர்கள். ஏழைகள் செய்யும் அநியாயம் குறைவு. செல்வர் செய்யும் அநியாயம் அதிகம். இதைக் கருதியே ப்ரூதோம் என்ற பிரெஞ்சு தேசத்து வித்துவான் "உடைமையாவது களவு" என்ருர்.

ஏழைகளே இல்லாமற் செய்வது உசிதம். ஒரு வயிற்று ஜீவனத்துக்கு வழியில்லாமல் யாருமே இருக்கலாகாது. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்தஅறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளை யிடுவதிலும் உபயோ கப்படுத்துகிருர்கள். ஐரோப்பிய யந்திரத் தொழிற்சாலை கள் ஏற்பட்டதிலிருந்து ஏழைகளுக்கு முன்னைக் காட்டிலும் அதிகத் துன்பம் ஏற்பட்டு இருக்கின்றனவே யன்றி ஏழை களின் கஷ்டம் குறையவில்லை.

ஏழைகளைக் கவனியாமல் இருப்பது பெரிய ஆபத்தாக முடியும். கிறிஸ்துவ வேதத்தில் பழைய ஏற்பாட்டில் ஆதியாகமத்தில் முதல் மனிதனுகிய ஆதாம் என்பவ னுக்கும் அவனுடைய பத்தினியாகிய ஏவாளுக்கும் இரண்டு

புத்திரர் பிறந்ததாகச் சொல்லப்படுகிறது. மூத்த குமாரன் பெயர் காயீன். இளையவன் பெயர் ஆபேல். காயீன் ஆபேலிடம் விரோதமாய் ஆபேலைக் கொன்று விட்டானும், அப்போது கடவுள் காயீனை நோக்கி—"உன் சகோதரனுகிய ஆபேல் எங்கே?" என்று கேட்டாராம். அதற்குக் காயீன் "எனக்குத் தெரியாது. சகோதரனுக்கு நான் காவலாளியோ?" என்றுனும்.

அதுபோல உலகத்துக்குச் செல்வர் ஸகல ஜனங்களுக்கும் பொதுவாகிய பூமியைத் தங்களுக்குள்ளே பங்கிட்டெடுத்துக் கொண்டு பெரும் பகுதியார் சோறின்றிமாளும் படி விடுகிறுர்கள். ஏழைகளைக் காப்பாற்ற வேண்டாமா என்று கேட்டால், "அவர்களுடைய கர்மத்தினுல் அவர்கள் ஏழையாயிருக்கிறுர்கள். அதற்கு நாங்களா பொறுப்பு? நாங்களென்ன ஏழைகளுக்குக் காவலாளிகளா?" என்று கேட்கிறுர்கள். உலகம் மாறுகிறது. ஏழைகளுக்கு நியாயம் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாளிகள் ஒரு சபை கூடி அந்தக் கிராமத்திலுள்ள ஏழைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய யோசனைகள் பண்ணி நிறைவேற்ற வேண்டும். அன்பினுல் உலகத்தின் துயரங்களை எளிதாக மாற்றிவிடலாம். அங்ஙனம் செய்யாமல் அஜாக்கிரதையாக இருந்தால், ஐரோப்பாவைப்போல் இங்கும், ஏழை செல்வர் என்ற பிரிவு பலமடைந்து விரோதம் முற்றி அங்கு ஜனக்கட்டு சிதறும் நிலைமையிலிருப்பது போல், இங்கும் ஜனசமூஹம் சிதறி மஹத்தான விபத்துக்கள் நேரிட இடமுண்டாகும்.

பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும், அன்பையும், ஸமத்துவ நினைப்பையும் கைக்கொண்டால், உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகமழியாமல் காப்பாற்ற முடியும். பாரசக்தி மனுஷ்ய ஜாதியை அன்பிலும் ஸமத்துவத்திலும் சேர்த்து நலம் செய்க.

# 25. செல்வம் - II

"பணமில்லாதவன் பிணம்" என்று பழமொழி சொல்கிறது. இதன் கருத்தைத்தான் திருவள்ளுவர் வேருெரு வகையிலே 'பொருளில்லார்க்கிவ்வுலகமில்லை' என்று சொல்லியிருக்கிருர்.

இந்த உலகிலுள்ள எல்லாத் துன்பங்களைக் காட்டிலும் வறுமைத் துன்பம் கொடியது. இவ்வுலகத்தில் எல்லாச் சிறுமைகளைக் காட்டிலும் ஏழ்மையே அதிகச் சிறுமையாவது. "இன்மையின் இன்ஞுததில்" என்றும், "இல்லானை இல்லாளும் வேண்டாள்; மற்றீன் றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாதவன் வாயிற் சொல்" என்றும் முன்ஞேர் சொல்லியிருக்கிருர்கள்.

இங்ஙனமே, ஏழ்மையின் நிகரற்ற இகழ்ச்சியையும், துன்பத்தையும் விளக்குவனவாய்த் தமிழ்ப் பண்டை நூல்களிலும், காவியங்கள் முதலியனவற்றிலும் காணப்படும் வசனங்களையும் உதாரணங்களையும் எடுத்துக்காட்ட முயன்ருல், அத்தொகுதி ஆயிரம் சுவடிகளுக்கு மேலாய் விடும். இவ்விஷயமாக இதர பாஷைகளிலுள்ள நூல்களிலும் இவ்வாறே செறிந்து கிடக்கும் வாக்கியங்களும் திருஷ்டாந்தங்களும் கணக்கில்லாதனவாம்.

எல்லா தேசங்களிலும் எல்லா பாஷைகளிலும் அறிஞரெல்லாம் ஒருங்கே வறுமைதான் எல்லா நரகங்களைக் காட்டிலும் மிகக் கொடிது என்பதை அங்கீகாரம் செய்திருக்கிருர்கள். ஆதலால், இந்த விஷயத்துக்கு நாம் மேற்கோளாதாரங்களை அதிகமாகக் காட்டவேண்டிய அவசியமில்லை. ஏனென்ருல் வறுமை மிகமிகப் பெரிய இகழ்ச்சியும் துன்பமுமாகும் என்பது கற்ருேர்க்கு மட்டுமேயல்லாது கல்லாதார்க்கும் நன்கு தெரிந்த விஷயமேயாம்.

எல்லா உயிர்களும் மரணத்துக்கு அஞ்சுகின்றன. ஆனுல், வறுமை மரணத்திலும் பெரிய துன்பமென்றுணர்ந்த ஏழைகள் மாத்திரமே "தெய்வமே எனக்கொரு சாவு வராதா?" என்று சில சமயங்களில் வேண்டுவது காண்கிறேம்.

இந்த ஏழ்மை இத்தனை கொடிதாக ஏற்பட்ட காரணந்தான் யாதெனில் சொல்லுகிறேன். உணவுதான் ஜீவ ஜந்துக்களின் அவசரங்களனைத்திலும் பெரிய அவசரமானது.

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்"

எனவே, இவ்வுலக இன்பங்கள், பெருமைகள் எல்லாவற்றிற்கும் அஸ்திவார பலம் உணவு. உணவு இல்லாத இடத்தில் அவை நிற்க வழியில்லை. மேலும், வெறுமே உயிர் தரித்திருப்பதற்குக் கூட ஆஹாரம் அவசியமாயிருக்கிறது. சோறில்லாவிட்டால் உயிரில்லை. இது கொண்டே, பெரும் பான்மையோருக்கு அன்றுடம் உணவு கிடைக்குமென்ற உறுதியில்லாமலும், பலருக்கு உணவே கிடையாதென்பது உறுதியாகவும் ஏற்படுத்திவைக்கும் வறுமையையே இத்தனை பெரிய கொடும் பகையாகக் கருதி மனிதர்கள் அஞ்சுகின்றனர்.

இந்த விஷயத்தில் மனித ஜாதியாரின் நிலைமை மற்ற மிருகங்கள் பக்ஷிகள் நிலைமையைக் காட்டிலும் அதிக பரிதாபகரமாகவும் இழிவாகவும் ஏற்பட்டிருக்கிறது. திருஷ்டாந்தமாக, பன்றி ஜாதி அல்லது நாய் ஜாதியை எடுத்துக்கொள்ளுங்கள். பல ஹீனமான நாயொன்று ஏதேனும் ஆஹாரம் தின்று கொண்டிருக்கும்போது

அகஸ்மாத்தாக அங்கே பலசாலி நாயொன்று வருமாயின் அந்தச் சமயத்தில் மாத்திரம் பலமில்லாத நாய் அவ்வுணவைப் பலசாலி நாய்க்குக் கொடுத்துவிட்டுத் தான் ஓடிப் போய்விடும்படி நேருகிறது. ஆனால், சில சில சமயங்களில் மாத்திரம் இந்த ஸம்பவம் நிகழ்வதல்லாமல், எப்போதுமே (மனித ஜாதியிலிருப்பது போல்) இஃது நியதமாக நடைபெறுவதில்லை.

மேலும், நான்கு பன்றிகள் அல்லது நான்கு நாய்கள் கூடி யாதேனும் ஒரு ஊரில் அல்லது ஒரு காட்டில் கிடைக்கக் கூடிய ஆஹார முழுதும் தங்களுக்கே தஸ்தாவேஜுப்படி சொந்தம் என்றும் தாங்களாக இஷ்டப்பட்டுத் தாங்கள் திட்டம் செய்து கொடுக்கும் அளவுப்படிதான் மற்றெல்லாப் பன்றிகள் அல்லது எல்லா நாய்களும் உண்ணக் கூடுமென்றும் விதி போடுகிற வழக்கம் (மனிதருக்குள் இருப்பதுபோல்) அந்த ஜந்துக்களிடையே காணப்படுவதில்லை. சிறு தொகையான மனிதருக்கு அடுத்த வேளை ஆஹாரம் கிடைப்பது நிச்சயமாகவும் பெருந்தொகையோர்க்கு அடுத்த வேளை சோறு நிச்சயமில்லாமலும் ஏற்பட்டிருக்கும் ஸம்பிரதாயம் மனிதரைத் தவிர வேறெந்த ஜாதி ஜீவர்களிடத்திலும் கிடையாது. "காக்கை முறவு கலந்துண்ணக் கண்டீரே?"

எனவே, மிகவும் முக்கியமானதும் ஜீவஜாதிகளுக்கு பரம அவசியமானதுமாகிய இந்த அம்சத்தில், மனிதருடைய நாகரீக நிலை மற்றெல்லா மிருகங்கள் பக்ஷிகள் முதலியவற்றின் நாகரீக நிலையைக் காட்டிலும் தாழ்வானது என்பதில் சிறிதேனும் ஸந்தேஹமில்லை. இதில் வேறொரு விஷயம் யாதெனில், மனித ஜாதிக்குள்ளே கூட மற்றெல்லா வகுப்பினரைக் காட்டிலும் ஹிந்துக்கள் அதிக இகழ்ச்சியடைந்து அதிக பரிதாபகரமான ஸ்திதியிலிருக்கிறார்கள்.

முற்காலத்திலே இந்தியா செல்வத்துக்கும். கல்விக்கும், ஞானத்துக்கும், தியானத்துக்கும், பக்திக்கும், வீரத்துக்கும், பராக்கிரமத்துக்கும், சாஸ்திரங்களுக்கும், பலவிதமான கைத்தொழில்களுக்கும் விசேஷ ஸ்தலமாக விளங்கி வந்தது. இக்காலத்திலே, இந்தியா பஞ்சத்துக்கும், பசி மரணத்துக்கும், வறுமைக்கும் சிறுமைக்கும், தொத்து நோய்களுக்கும் சாசுவத ஸ்தலமா யிருக்கிறது. இந்திய தேசத்தார் அழிவுறுவதுபோல் மற்றபடி பூமண்டல முழுதிலும் எந்நாட்டிலும் மனிதர் இவ்வாறு வருஷந் தவறுமல் வேறு காரணம் யாதொன்றுமில்லாமல் சுத்தமான பஞ்சம் காரணமாக பதிஞயிரம் லக்ஷக் கணக்கில் மடிந்து போகும் ஆச்சர்யத்தைக் காணமுடியாது. மனித ஜாதியார்களுக்குள்ளேயே இப்படி யென்ருல், மற்ற மிருகங்கள், பட்சிகள், பூச்சிகள் வருஷந் தவறுமல் கூட்டங் கூட்டமாக வெறுமே சுத்தமான பட்டினியால் மடியும் அநியாயம் கிடையாதென்பது சொல்லாமலே விளங்கும்.

இங்ஙனம், மனித ஜாதிக்கே பொது இகழ்ச்சியாகவும், பொதுக் கஷ்டமாகவும் ஹிந்துக்களுக்கு விசேஷ அவமானமாகவும் விசேஷ கஷ்டமாகவும் மூண்டிருக்கும் இந்த வறுமையாகிய நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடித்து அந்த நோயை நீக்கி இந்தியாவிலும் பூமண்டலத்திலும் ஸகல ஜனங்களுக்கும் ஆஹார சம்பந்தமாக பயமில்லாதபடி அரைவயிற்றுக் கஞ்சியேனும் நிச்சயமாகக் கிடைப்பதற்கு வழிகள் எவை என்பதைப் பற்றி ஒவ்வொரு புத்திமானும் ஆராய்ச்சி செய்தல் இவ்வுலகத்திலுள்ள எல்லா அவசரங்களைக் காட்டிலும் பெரிய அவசரமென்று நான் கருதுகின்றேன். இந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்குரிய ஸாதனங்களாக எனக்குத் தோன்றும் உபாயங்களை எழுதுகிறேன். இவ்விஷயத்தைக் குறித்துத் தமிழ் நாட்டு மக்களில்

வேறு பலரும் தத் தமக்குப் புலப்படும் உபாயங்களை நமது 'மித்திர'னுக்கெழுதி யனுப்பும்படி வேண்டுகிறேன்.

பூ மண்டலத்தில் அபார நலத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ந்த முக்கியமான கருவிகளில் ஒன்றாக நிற்கும் பெருமையும் புகழும் 'சுதேசமித்ரனுக்' கெய்துக. மனித ஜாதி முழுமைக்கும் பேரவசியமான இந்த மஹா மஹோபகாரத்தை நடத்துவதற்கு உறுதியான தந்திரங் களைக் காட்டிக் கொடுப்பதாகிய நிகரற்ற மஹிமை தமிழ் நாட்டு மேதாவிகளுக்கெய்துக.

உலகத்தில் செல்வத்தின் சம்பந்தமான ஏற்றத் தாழ்ச்சிகள் மற்ற எல்லாக் காரணங்களில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டிலும் மிகக் கொடியனவாக மூண்டிருக் கின்றன.

மனுஷ்ய நாகரிகம் தோன்றியகால முதலாக எல்லா ஜனங்களும் ஸமானமாக வாழவேண்டும் என்ற கருத்து ஞானிகளாலும் பண்டிதர்களாலும் வற்புறுத்தப்பட்டு வந் திருக்கின்றது. "ஆனால், ஒருவன் மிகவும் பலசாலியாக இருக்கிறான். அவனைப் பலமில்லாதவர்கள் மேன்மையுடை யோனாகக் கருதுகிறார்கள். அவனும் அதில் மகிழ்ச்சி கொண்டவனாக பலமில்லாதவர்களை வேறு சிருஷ்டியாக நினைத்து மிக இழிவாக நடத்தத் தொடங்குகிறான்.

இங்ஙனமே அழகுடையவன் அழகில்லாதவர்களைத் தாழ்வாக நினைக்கிறான். கல்வியுடையோர் கல்லாத மக்களிடம் வைத்திருக்கும் இகழ்ச்சியோ சொல்லுந் தரமன்று. "விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோடேனையவர்." அ தா வ து, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எத்தகைய பேதமிருக்கிறது, அத்தனை பேதம் கற்றோருக்கும் கல்லாதாருக்கு மி டை யே உளது. இந்தக் குறள் கல்விப் பெருமையுடையோர்

அஃதில்லாதாரின் விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தை நன்கு விளக்குகிறது. இங்ஙனமே, பாடத் தெரிந்தவன் அது தெரியாதவரைக் குறைவாக எண்ணி நடத்துகிறுன். நெட்டையாக இருப்பவன் குள்ளனைக் குறைந்த ஜாதியாக எண்ணுகிறுன். மேற் குலத்திற் பிறந்த வன் தாழ்ந்த குலத்தானை இகழ்ச்சி செய்கிறுன். சுருங்கச் சொல்லும் மிடத்தே, யாதேனுமொருவித விசேஷ அநு கூலம் படைத்தோர் அஃது படையாதவரை இழிவாக எண்ணிநடத்துகிறுர்கள். இங்ஙனம் கோடிவிதமான காரணங்களை உத்தேசித்து மனிதருக்குள்ளே எண்ணற்ற பேதங்கள் ஏற்பட்டு விட்டன. இந்த பேதங்களால் ஏற் படும் கஷ்டங்களும் மனஸ்தாபங்களும் பொருமைகளும் கர்வங்களும் போராட்டங்களும் எண்ணற்றனவாகின்றன. இதனுல் இவ்வுலகத்தில் மனித வாழ்க்கை நரக வாழ்க்கை போலத் தீராத் துன்பமாக முடிந்திருக்கிறது.

ஏனென்றுல, ஒருவன் எத்தனை விசேஷ அநுகூலங்கள் படைத்திருந்தபோதிலும், ஏதேனும் ஒரு விஷயத்தில் அவன் வேறு சிலருக்குக் குறைந்தவனுகவே இருக்கும்படி இயற்கையமைப்பு இருக்கிறது.

அளவிறந்த கல்வியுடையவன் கொஞ்சம் குள்ளனுக இருந்தால் போதும். பிடித்தது சனி! நெட்டை மனிதரைக் கண்டு அவன் பொருமை கொள்வதினின்றும் நெட்டை யாட்கள் அவனை இகழ்ச்சி செய்வதினின்றும் அவனுக்குப் பதவித அனர்த்தங்களும் கவலைகளும் ஏற்படுகின்றன. அவன் தான் குள்ளனுகப் பிறந்ததைப் பற்றி ஓயாமல் மனம் நொந்து சாகிறுன்.

மிகுந்த செல்வமுடையவன் கொஞ்சம் கருநிற முடையவனுக இருந்தால் போதும். வந்தது வினை! செந்

நிறமுடையவர்களாலே அவனுடைய வாழ்க்கை நரகத்தைப்போல் ஆக்கப்படுகிறது.

இங்ஙனம் எத்தனையோ பேதங்களால் மனிதனுக்குப் பல தொல்லைகள் விளைகின்றன. எனினும், நான் தொடக்கத்திலே கூறியபடி செல்வத்தால் ஏற்படும் வேற்றுமைகளே சால மிகக் கொடியன. செல்வமுடையவன் செல்வமில்லாதவரிடத்துக் கொண்டிருக்கும் இகழ்ச்சியும், செல்வமில்லாதவன் செல்வமுடையோரிடத்தே கொண்டிருக்கும் பொறுமையும் வேறெந்த முகாந்திரத்தைக் கருதியும் மனிதருக்குள்ளே ஏற்படுவதில்லை.

**"கண்ணுடையோ ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடை யார் கல்லாதவர்"**

என்று வள்ளுவர் சொல்லியபடி, படித்தவன் படியாதவனை வெறுமே குருடனாகக் கருதி நடத்துகிறான். பணமுடையவனே பணமில்லாதனைப் பிணமாக நினைக்கிறான்.

இதனிடையே மனித ஜாதி நாகரீகத்தில் முற்ற முற்ற ஸமத்வம் அவசியமென்ற கொள்கை ஒரு புறத்தே பரவிக் கொண்டேவருகிறது. எத்தனை வேற்றுமைகள் குணத்தாலும் செய்கையாலும் பிறப்பாலும் மற்ற வீண் நியமங்களாலும் மானிடருக்குள் ஏற்பட்டிருந்தபோதிலும், அந்த வேற்றுமைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு எல்லாரும் ஈசனுடைய மக்கள் அல்லது அம்சங்கள் என்ற பரம ஸத்யத்தை மனதில் தரித்து எல்லாரையும் நிகராக பாவிக்க வேண்டும் என்ற கருத்து வேத ரிஷிகளாலும், கிறிஸ்து, புத்தர் முதலிய அவதார புருஷர்களாலும் மனிதருக்கு வற்புறுத்திக் கூறப்பட்டன. அவர்களை ஒட்டி எண்ணிறந்த ஞானிகளும் பண்டிதர்களும் அக்கொள்கையைப் பலவகையாலே பரவச்செய்து கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்ஙனம், பரமார்த்த ஞானமுடையோர், ஆதிகாலம் தொட்டு, ஸமத்வக் கொள்கையைப் பரப்பி வருதல் ஒரு புறத்தே நிகழவும், சென்ற சில நூற்றுண்டுகளாக ஐரோப்பாவில் பல வித்வான்கள் தெய்வத்தைப்பற்றி யோசனை செய்யாமல் வெறுமே மானிட வாழ்க்கை ஸுகமாகவும் ஸமாதானமாகவும் நடைபெற வேண்டும் என்கிற லௌகிக காரணத்தைக் கருதி ஸகல ஜனங்களும் ஸமாதானமாகவே நடத்தப்பட வேண்டும் என்கிற கருத்தைப் பிரசாரஞ் செய்துகொண்டு வருகிறுர்கள். இக் கொள்கை, நாட்பட நாட்பட, ஐரோப்பாவிலும், அதன் கிளைகளாகிய அமெரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களிலும் ஐரோப்பிய நாகரீகத்தை அநுசரிக்க விரும்பும் ஜப்பான், இந்தியா முதலிய தேசங்களிலும் மிக விருத்தியடைந்து வருகிறது.

ஒற்றைக் குடும்பத்தில் ஒரு பிள்ளை புத்திமானுகவும் கல்வியுடையவனுகவுமிருக்கிறுன். மற்றொரு பிள்ளை கல்வியறிவற்ற மூடனுகவே இருக்கிறுன்; ஒருவன் சிவப்பாக இருக்கிறுன்; மற்றொருவன் கருநிறமுடையவனுக இருக்கிறுன். ஒருவன் பலசாலியாக இருக்கிறுன்; மற்றொருவன் பலஹீனனுக இருக்கிறுன். ஒருவன் தைரியசாலியாக இருக்கிறுன்; மற்றொருவன் கோழையாக இருக்கிறுன். ஒருவன் நெட்டை; மற்றொருவன் குட்டை. ஒருவன் அழகுடையவன்; மற்றொருவன் முகமெல்லாம் அம்மைத் தழும்புடையவனுய் ஒரு கண் பொட்டையாக இருக்கிறுன். எனினும், அறிவுடைய தாய் தந்தையர் இந்த மக்களுக்குள்ளே எவ்விஷயத்திலும் வேற்றுமை பாராட்டாமல் இவர்களை ஸகல விதங்களிலும் ஸமான அன்புடன் நடத்தி வருகிறுர்கள்.

அதுபோலவே, மனிதஜாதி முழுவதையும் ஒரே குடும்பமாகக் கருதி மானிடருக்குள்ளே இயற்கையாலும் மானிடர் தாமாகவே ஏற்படுத்திக்கொண்ட அர்த்தமில்

லாத கட்டுப் பாடுகளாலும் எத்தனை வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், இந்த வேறுபாடுகளைக் கருதிச் சிலருக்கு அதிக ஸௌகரியங்களும், பலருக்குக் குறைந்த ஸௌகரியங்களும், சிலருக்கு மதிப்பும், பலருக்கு அவமதிப்பும், சிலருக்கு லாபங்களும், பலருக்கு நஷ்டங்களும் ஏற்படுத்தியிருப்பது தவறு என்பதும், ஒவ்வொருவரும் சகோதரரைப்போல் பரஸ்பர அன்புடனும், மரியாதையுடனும் வாழ்வதே நியாயம் என்பதும், நவீன ஐரோப்பிய ஸித்தாந்தங்களிலே மிகவும் முக்கியமான ஸித்தாந்தமாகும். இந்தக் கொள்கைக்கு எல்லா மதங்களும் சார்பாக இருப்பதை உத்தேசிக்கு மிடத்தே, இது நாளடைவில் ஐரோப்பாவில் மாத்திரமின்றி உலக முழுமையிலும் பரிபூர்ணமாக வெற்றிபெறும் என்பதில் ஸந்தேஹமில்லை.

இந்த ஸித்தாந்தம் பரிபூர்ண ஜயமடைந்து மனிதருக்குள்ளே ஸஹஜ தர்மமாக ஏற்பட்ட பிறகுதான், மானிடர் உண்மையான நாகரீகம் உடையோராவர்.

மேலும், மானிடருக்குள்ளே இயற்கையால் ஏற்பட்டிருக்கும் வர்ண வேற்றுமைகள், உயர வேற்றுமைகள், சரீர பல வேற்றுமைகள் முதலியனவே மாற்ற முடியாதவை. செயற்கையால் உண்டாகிய கல்வி வேற்றுமைகள், செல்வ வேற்றுமைகள், ஜாதி பேதங்கள் முதலியன எளிதாக மாற்றிக்கொள்ளக் கூடியன.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பல தேசங்களிலும் ஏற்கெனவே பிற்கூறிய வேற்றுமைகளை நீக்குவதற்குப் பலமான முயற்சிகள் நடைபெற்று வந்து நல்ல பயன்களும் ஏற்பட்டு விட்டன. எல்லாருக்கும் கல்வி கற்பித்துக் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் முக்கியமாக வலிமையடைந்து வருகிறது. தேசத்து மக்கள் அத்தனை பேருக்கும் கட்டாயமாகவும் இனமாகவும் கல்வி

கற்பித்துக்கொடுக்க முயற்சி செய்து வருகிறார்கள். இந்த முயற்சி இன்னும் அதிக பலம் அடையும். நாளுக்கு நாள் இந்த முயற்சியில் சக்தியும் வேகமும் அதிகரித்து வருகின்றன. இதனினும் இன்னும் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் ஐரோப்பா முழுவதும் அந்த முறையைக் கைப்பற்றி நடக்கும். இந்தியா, ஜப்பான் முதலிய தேசங்களிலும் படிப்புத் தெரியாதவர் ஒருவர்கூட இல்லாமற் போய்விடுவார்கள் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜாதி பேதங்கள் இந்தியாவிலேயே சிதறுண்டு வருகின்றனவெனில் மற்ற நாடுகளைப் பற்றிப் பேசவேண்டியதில்லை.

இதுபோலவே, செல்வத்தைக் குறித்த வேற்றுமைகளையும் இல்லாமற் பண்ணிவிட வேண்டும் என்ற கொள்கையும் உலகத்தில் மிகத்தீவிரமாகப் பரவிவருகிறது. ஐரோப்பாவிலேதான் இந்த முயற்சி வெகு மும்முரமாக நடந்துவருகின்றது. ஒரு தேசத்தில் பிறந்த மக்கள் அனைவருக்கும் அந்த தேசத்தின் இயற்கைச் செல்வ முழுவதையும் பொது உடைமையாக்கி விட்டவேண்டுமென்ற கொள்கைக்கு இங்கிலீஷில் "சோஷலிஸ்ட்" கொள்கையென்றுபெயர். அதாவது "கூட்டுறவுக் கொள்கை." இந்தக் "கூட்டுறவு வாழ்வு"க் கொள்கை (சோஷலிஸ்ட்) ஐரோப்பாவில் தோன்றியபோது இதை அங்கு முதலாளிகளும் மற்றபடி பொது ஜனங்களும் மிக ஆத்திரத்துடனும், ஆக்ரஹத்துடனும் எதிர்த்து வந்தார்கள். நாளடைவில் இக் கொள்கையின் நல்லியல்பு அந்தக் கண்டத்தாருக்கு மேன்மேலும் தெளிவுபட்டு வரலாயிற்று. எனவே, இதன் மீது ஜனங்கள் கொண்டிருக்கும் விரோதமும் குறைவுபட்டுக் கொண்டுவரவே, இக்கொள்கை மேன்மேலும் பலமடைந்து வருகிறது. ஏற்கெனவே, ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின், ஸ்ரீமான் மின்த்ரோத்ஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளை

நிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொது உடைமையாகிவிட்டது. இக் கொள்கை ஜெர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும், துருக்கி யிலும் அளவற்ற வன்மை கொண்டு வருகிறது. ருஷ்யாவி லிருந்து இது ஆசியாவிலும் தாண்டிவிட்டது. வட ஆசியா வில் பிரம்மாண்டமான பகுதியாக நிற்கும் ஸைபீரியா தேசம் ருஷியாவின் ஆதிக்கத்தைச் சேர்ந்ததாதலால், அங்கும் இந்த முறைமை அனுஷ்டானத்திற்கு வந்து விட்டது. அங்கிருந்து இக்கொள்கை மத்திய ஆசியா விலும் பரவி வருகிறது. ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ் இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த முறைமை தம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து வரக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலைக் தடுக்குமாறு பலவிதங்களில் பிரயத் தனங்கள் புரிந்து வருகிறார்கள்.

ஆனால், இந்த முறைமை போர், கொலை, பலாத்தாரங் களின் மூலமாக உலகத்தில் பரவிவருவது எனக்குச் சம்ம தம் இல்லை. எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக் குள்ளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக் கூடாதென் பது என்னுடைய கருத்து. அப்படியிருக்க ஸமத்வம், ஸஹோதரத்வம் என்ற தெய்வீக தர்மங்களைக் கொண் டோர், அவற்றைக் குத்து, வெட்டு, பீரங்கி, துப்பாக்கிகளி னால் பரவச் செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந் தாத செய்கையென்று நான் நினைக்கிறேன். பலாத்கார மாக முதலாளிகளின் உடைமைகளையும், நிலஸ்வான்களின் பூமியையும் பிடுங்கி தேசத்திற்குப் பொதுவாகச் செய்ய வேண்டும் என்ற கொள்கை ருஷ்யாவில் வெற்றி பெற்ற தற்குப் பல பூர்வ காரணங்களிருக்கின்றன. நெடுங்கால மாகவே, ருஷியா தேசத்தில் ஆட்சி புரிவோரின் நிகரற்ற கொடுங்கோன்மையாலும், அநீதங்களாலும், செல்வர் களின் குரூரத்தன்மையாலும் பல ராஜாங்க புரட்சிகள்

நடந்து வந்திருக்கின்றபடியால், இந்த மாறுதல் அங்கு அமைப்பது சுலபமாயிற்று. மற்ற ஐரோப்பிய தேசங்களில் முதலாளிகளும் செல்வர்களும் இன்னும் முற்றிலும் பலஹீனமடைந்து போகவில்லை. பெரும்பாலும் அவர்களிடத்திலேயே எல்லாப் பலங்களும் சக்திகளும் அமைந்திருக்கின்றன. அங்கெல்லாம் 'சோஷலிஸ்ட்' கூட்டுறவு வாழ்க்கைக் கட்சி ருஷ்யாவிலுள்ள சக்தியும் பராக்கிரமும் பெற்றுவிடவில்லை. அங்ஙனம் பெறுவதற்கு இன்னும் பல வருஷங்கள் செல்லும் என்றே தோன்றுகிறது. தவிரவும் அங்ஙனம் 'சோஷலிஸ்ட்' கட்சியார் பலமடைந்தபோதிலும், அந்த பலத்தை உபயோகிப்பது நியாயமில்லையென்று நான் சொல்லுகிறேன். ஏனென்றால், பிறருடைமையைத் தாம் அபகரித்து வாழவேண்டும் என்கின்ற கெட்ட எண்ணமுடையவர்களும் ஸர்வ ஜனங்களும் ஸமான ஸௌகர்யங்களுடன் வாழவேண்டும் என்கிற கருத்து இல்லாத பாவிகளும் தம்முடைய கொள்ளை விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு, வாள், பீரங்கி, துப்பாக்கிகளால் அநேகரைக் கொலை செய்து, ஊர்களையும் வீடுகளையும் கொளுத்தியும் அநியாயங்கள் செய்வது நமக்கு அர்த்தமாகக் கூடிய விஷயம். அங்ஙனமின்றி, எல்லா மனிதரும் உடன் பிறந்த சகோதரரைப்போல் ஆவார்கள் என்றும், ஆதலால் எல்லாரையும் ஸமமாகவும் அன்புடனும் நடத்தவேண்டும் என்றும் கருதுகிற தர்மிஷ்டர்கள் தம்முடைய கருணாதர்மத்தை நிலை நிறுத்தக் கொலை முதலிய மஹாபாதகங்கள் செய்வது நமக்குச் சிறிதேனும் அர்த்தமாகக் கூடாத விஷயம். கொலையாலும் கொள்ளையாலும், அன்பையும் ஸமத்வத்தையும் ஸ்தாபிக்கப்போகிறோம் என்று சொல்வோர் தம்மைத் தாம் உணராத பரம மூடர்கள் என்று நான் கருதுகிறேன். "இதற்கு நாம் என்ன செய்வோம்! கொலையாளிகளை அழிக்கக் கொலையைத்தானே கைக்கொள்ளும்படி நேரு

கிறது; அநியாயம் செய்வோரை அநியாயத்தால்தான் அடக்கும்படி நேரிடுகிறது" என்று ஸ்ரீமான் லெனின் சொல்லுகிறார். இது முற்றிலும் தவறான கொள்கை. கொலை, கொலையை வளர்க்குமே ஒழிய, அதை நீக்க வல்லதாகாது. அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமேயொழியக் குறைக்காது. பாபத்தைப் புண்ணியத்தாலேதான் வெல்லவேண்டும். பாபத்தைப் பாபத்தால் வெல்லுவோம் என்பது அறியாதவர் கொள்கை. அதர்மத்தை தர்மத்தால் வெல்ல வேண்டும்; தீமையை நன்மையாலேதான் வெல்ல முடியும். கொலையையும் கொள்ளையையும் அன்பினாலும் ஈகையாலும்தான் மாற்ற முடியும். இதுதான் கடைசிவரை கைக்கூடிவரக்கூடிய மருந்து. மற்றது போலி மருந்து. சிறிது காலத்திற்கு நோயை அடக்கி வைக்கும். பிறகு, அந்நோய் முன்னைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக வலிமையுடையதாய் ஓங்கிவிடும். ஒருகொலையாளிக் கூட்டம் இன்று தன்னிடமுள்ள சேனை பலத்தாலும் ஆயுத பலத்தாலும் மற்றொரு கொலையாளிக் கூட்டத்தை அடக்கி விடக்கூடும். இதனாலே தோற்ற கூட்டம் நாளைக்கு பலம் அதிகப்பட்டு முந்திய கூட்டத்தை வென்றுவிடும். பிறகு, இதைப் பழிவாங்க முயன்று, மற்றது பலவித வேலைகள் செய்து பலமடைந்து இந்தக் கூட்டத்தை அழிக்கும். இது மறுபடி தலைதூக்கி அதை அடக்கும். இங்ஙனம் தலைமுறை தலைமுறையாக இவ்விரண்டு கூட்டங்களும் ஒன்றுக்கொன்று தீமை செய்துகொண்டே வரும். இதற்கு ஓய்வே கிடையாது. தர்மத்தாலும் கருணையாலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்கவல்லதாகும். இதனை அறியாதார் உலக சரித்திரத்தையும் இயற்கையின் விதிகளையும் அறியாதார் ஆவர்.

மேலும் ருஷ்யாவிலும்கூட இப்போது ஏற்பட்டிருக்கும் "ஸோஷலிஸ்ட்" ராஜ்யம் எக்காலமும் நீடித்து நிற்கும்

இயல்புடையதென்று கருத வழியில்லை. சமீபத்தில் நடந்த மஹாயுத்தத்தால் ஐரோப்பிய வல்லரசுகள் ஆள்பலமும் பணபலமும் ஆயுதபலமும் ஒரே அடியாகக் குறைந்துபோய் மஹாபலஹீனமான நிலையில் நிற்பதை ஒட்டி மிஸ்டர் லெனின் முதலியோர் ஏற்படுத்தியிருக்கும் 'கூட்டு வாழ்க்கைக்'' குடியரசை அழிக்க மனமிருந்தும் வலிமையற்றோராகி நிற்கின்றனர். நாளை இந்த வல்லரசுகள் கொஞ்சம் சக்தியேறிய மாத்திரத்திலே ருஷ்யாவின் மீது பாய்வார்கள். அங்கு உடைமை இழந்த முதலாளிகளும் நிலஸ்வான்களும் இந்த அரசுகளுக்குத் துணையாக நிற்பர். இதனின்றும் இன்னும் கோரமான யுத்தங்களும் கொலைகளும் கொள்ளைகளும் ரத்தப் பிரவாகங்களும் ஏற்பட இடமுண்டாகும். லெனின் வழி சரியான வழியில்லை. முக்கியமாக நாம் இந்தியாவிலே இருக்கிறோமாதலால், இந்தியாவின் ஸாத்யாஸாத்யங்களைக் கருதியே நாம் யோஜனை செய்யவேண்டும். முதலாவது, இந்தியாவிலுள்ள நிலஸ்வான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலஸ்வான்களைப் போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூரசித்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடைமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் நியாயமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார்கள். எனவே கொள்ளைகளும் கொலைகளும் சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பசி தீர்ப்பதற்குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க முயலவேண்டும். செல்வர்களுடைய உடைமைகளை பலாத்காரமாகப் பறித்துக்கொள்ள முயலுதல் இந்நாட்டிலே, நான் மேற்கூறியபடி, பொருந்தவும் செய்யாது; ஸாத்தியமும் இல்லை.

ஆனால், கோடிக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு கிடைக்குமென்று நிச்சயமில்லாமலும், லக்ஷக்கணக்கான

ஜனங்கள் ஒருவேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப் பட்டினியால் கோர மரண மெய்தும்படியாகவும் நேர்ந் திருக்கும் தற்கால நிலைமையை நாம் ஒரு க்ஷணம்கூடச் சகித் திருப்பது நியாயமில்லை என்பது சொல்லாமலே போதரும்.

எனவே, உலகத் துன்பங்கள் அனைத்திலும் கொடி தான இந்த ஏழ்மைத் துன்பத்தை ஸமாதான நெறியாலும் மாற்றக்கூடிய உபாயமொன்றை நாம் கண்டுபிடித்து நடத்துவோமானால், அதினின்றும் நமது நாடு பயனுறுவது மட்டுமேயன்றி, உலகத்தாரெல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மையடைவார்கள்.

'அப்படிப்பட்ட உபாயமொன்று கிடைக்குமா?' என்ப தைப் பற்றி இங்கே ஆராய்ச்சி செய்வோம்.

ஜனங்களுக்குள்ளே கலகங்களும் யுத்தங்களும் கொலைச் செயல்களும் நேரிடாத வண்ணம் ஸமாதான நெறியிலே உலகத்தின் ஏழ்மையைத் தொலைப்பதற்குத் தகுந்த உபாயமாக எனக்குத் தோன்றுவதை இங்கு தெரிவிக்கிறேன்.

உலகம் தேசங்களால் அமைக்கப்பட்டது. தேசம் மாகாணங்களின் தொகுதியாம். மாகாணங்கள் ஜில்லாக் களின் சேர்க்கையாகும். ஜில்லா, ஒரு சில நகரங்களும் பெரும்பான்மை கிராமங்களும் கூடிய தொகுதியாகும். எனவே, ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அதில் வறுமையே இல்லாமல் செய்வதற்குரிய வழி கண்டுபிடிப் போமாயின், பிறகு அந்த உபாயமே பூமண்டலத்தின் வறுமையைத் தொலைப்பதற்குப் பொருந்தியதாய் விடு மென்பது சொல்லாமலே விளங்கும். திருஷ்டாந்தமாக நான் இப்பொழுது வாசம் புரிந்து வரும் கடையம் கிராமத்தை எடுத்துக் கொள்வோம். இவ்வூரைச் சூழ்ந்

திருக்கும் வயல்களெல்லாம் சுமார் 30 பெரிய மிராசுதார் களுக்கும் பல சில்லரை நிலஸ்வான்களுக்கும் உரியன.

இந்த நிலஸ்வான்கள் எல்லாரும் சேர்ந்த ஒரு ஸபை சமைக்கப் படவேண்டும். இந்த ஸபையார் கோயில் வாயிலிலே கூட்டம் கூடியிருந்து கொண்டு ஊர் ஜனங்கள் அத்தனை பேரையும் பறை சாற்றுவித்துத் தம்முன்னே வரவழைக்க வேண்டும். அப்போது நிலஸ்வான்கள் எல்லா ருடைய ஸம்மதப்படி, அவர்களின் பிரதிநிதியாகிய ஒருவர் எழுந்து நின்று கிராமத்தாரிடம் பின்வருமாறு பிரமாணம் செய்து கொடுக்க வேண்டும்.

எப்படி என்றால்:—

"கஞ்சியாவது கிடைத்து வருகிறதெனினும் அது நியதமாக எப்போதும் கிடைத்துவரும் என்ற நிச்சயம் இல்லாதபடியால் நீங்கள் எண்ணில்லாத மனக் கவலை களுக்கும், மனஸ்தாபங்களுக்கும், பொறாமைகளுக்கும், வஞ்சனைகளுக்கும் ஏமாற்றங்களுக்கும், கலகங்களுக்கும் இரையாகி மடிகிறீர்கள். "அன்ன விசாரம் அதுவே விசாரம்" என்று பட்டினத்துப் பிள்ளை சொல்லியதுபோல் உங்களுக்கு இந்த ஆகார விசாரம் தீராத பெரு விசாரமாக வந்து மூண்டிருக்கிறது. நியாயமான உழைப்பாலோ, அல்லது ப்ரூதோம் என்ற பிரான்ஸ் தேசத்து சாஸ்திரி, 'உடைமையாவது களவு' என்று சொல்லியபடி வஞ்சனைத் தொழில்களாலே, இந்த ஊரிலுள்ள வயல்கள் தோட்டங் கள் எல்லாவற்றையும் எங்கள் சிலருக்கு மாத்திரம் உரிமை யாகும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். பூஸ்திதி எங்க ளிடம் இருப்பது எங்களுடைய குற்றமாக மாட்டாது. எனினும், உங்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் ஸ்நேஹ மும் இல்லாவிட்டால் எங்களுக்கு இந்த நிலங்கள் எவ்வித மான பயனும் தரமாட்டா. மேலும் நீங்கள் அத்தனை

பேரும் ஆகார விஷயத்தில் ஒருவித நிச்சயமில்லாமையால் படும் கஷ்டங்களும் அதனின்றும் உங்களுக்குள் ஏற்படும் போராட்டங்களும் எங்களையும் சூழ்ந்து தீராத துன்பத்துக்கு உள்ளாக்குகின்றன. நாங்கள் பொருளுடைமை விஷயத்தில் மாத்திரம் உங்களின்றும் வேறுபட்டிருப்பினும், மற்றெல்லா அம்சங்களிலும் உங்களைப் போன்ற மனிதர்களே; ஆதலாலும், உங்களுடனே எப்போதும் ஊடாடிப் பழகுவதும் விவஹரிப்பதும் எங்களுக்கு மிகவும் இன்றியமையாததலாலும், நீங்கள் தீராத வறுமை நரகத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் நாங்கள் மாத்திரம் சந்தோஷமாக இருத்தல் சாத்தியப்படவில்லை. எங்களுடைய காரியங்களெல்லாம் உங்களாலே ஆகவேண்டியிருக்கிறது. எங்களுக்கு உங்களைத்தவிர வேறு கதியில்லை. உங்களுடைய வறுமைத் தீ எங்களை நானுவிதங்களிலும் சாபம் போல எரிக்கிறது. எங்களுக்குள் சிறிதேனும் ஒற்றுமை யில்லாமல் செய்துவருகிறது. எங்களுக்குள் மேன்மேலும் பொருமையை வளர்க்கிறது. பூமி எல்லோருக்கும் பொதுவான தாய் போலாகும். அதில், நாங்கள் மாத்திரம் உரிமை கொண்டாடுதல் அநியாயம் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது. அதனின்றும் பூர்விக காலம் முதல் பரம்பரை பரம்பரையாக வழங்கிவரும் சொத்தை, ருஷ்யா முதலிய தேசங்களில் நடப்பதுபோல், நீங்கள் பலாத்காரமாக எங்களைக் கொன்றும் சிறையிலிட்டும் எங்களிடமிருந்து பறித்துக் கொள்வது நியாயம் இல்லை. ஏனென்றுல், உடைமை பொது நாகரீகத்திற்கு ஹேதுவாகும். எந்தக் காரணம் பற்றியும் கொள்ளையிடுவது சரியில்லை. நிலமில்லாத நீங்கள் எங்களுடைய நிலத்தைக் கொள்ளையிட்டுப் பறித்துக்கொள்ளலாமெனில், துணியில்லாதவர்கள் உங்களுடைய துணிகளைப் பறித்துக் கொள்ளலாமன்றோ? வீடில்லாதவர்கள் பிறர் வீடுகளைக்

கைப்பற்றிக் கொள்ளலாம். ஒரு சிறிதேனும் உடமையில்லாதவர்கள் மலைக்குறவர் இடையேகூடக் காணப்படுவதில்லை. பூஸ்திதி மாத்திரம்தானு உடைமை? துணி, மணி• வீடு, பாத்திரம், பண்டம், பாய், தலையணி—எல்லாம் உடைமைகளே. மலைப் பழிஞர் நாட்டுக்குள் பிரவேசித்து உங்களுடைய வீடு பாத்திரங்களெல்லாம் அபகரித்துக் கொள்ளுதல் நியாயமென்று உங்களுக்குத் தோன்றுகின்றதா?

''எனவே, எங்களுடைய பூஸ்திதிகளை நீங்கள் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ளுதல் நியாயமன்று. ஆனலும் பூமித்தாய் எல்லாருக்கும் பொதுவாகத் தரும் விளை பொருள்களை நாங்கள் சிலபேர் மாத்திரம் பங்கிட்டெடுத்துக் கொண்டு, உங்களுக்கு 'எங்களுடைய தயவு இருந்தால்தான் ஆகாரம். எங்கள் தயவில்லாவிட்டால் பட்டினி' என்ற நிலையில் உங்களை வைத்து, அதனின்று உங்களை அடிமைகளாக்கி நடத்திவரும் மஹாபாவத்திற்கு இன்னும் ஆளாயிருக்க எங்களுக்குச் சம்மதமில்லை. ''இன்றும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலும் நிரப்பு'' என்று திருவள்ளுவர் சொல்லியது போல, (அதாவது, 'நேற்று முழுதும் நம்மைக் கொலை செய்வது போலவே வருத்திக் கொண்டிருந்த வறுமை இன்றைக்கு வந்து விடுமோ' என்று) பரிதபித்து ஏங்கும் நிலைமையில் நீங்கள் உயிர் வாழ்க்கை நடத்திவருகிறீர்கள். உங்களை இந்த உணவு நிச்சயமில்லாத நிலையில் வைத்திருக்கும் பாவத்தை இனிச் சுமந்து கொண்டிருப்பதில் எங்களுக்குச் சம்மதமில்லை. எனவே, உங்களில் ஆண் பெண் குழந்தை எவருக்கும் என்றைக்கும் ஆகாரவிஷயமாக பயமில்லாத படி செய்துவிடவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம், அதற்கு, பின்வரும் வழியை அனுசரிக்க வேண்டும் என்று நிச்சயித்து இருக்

கிறோம். அதாவது, எங்களில் சிலரும் உங்களில் சிலரும் கூடி "தொழில் நிர்வாக சங்கம்" என்றொரு சங்கம் அமைக்கப்படும். பயிர்த் தொழில், கிராம சுத்தி, கல்வி, கோயில் (மதப்பயிற்சி), உணவு, துணிகள், பாத்திரங்கள், இரும்பு, செம்பு, பொன் முதலியன சம்பந்தமாகிய நாலு வகைப்பட்ட கைத்தொழிகள்—இவை இந்தக் கிராமத்துக்கு மொத்தம் இவ்வளவு நடைபெற வேண்டுமென்றும், அத் தொழில்களில் இன்னின்ன தொழிலிற்கு இன்னார் தகுதியுடையவர் என்றும் மேற்படி தொழில் நிர்வாக சங்கத்தார் தீர்மானம் செய்வார்கள். அந்தப்படி கிராமத்திலுள்ள நாம் அத்தனை பேரும் தொழில் செய்யவேண்டும். அந்தத் தொழில்களுக்குத் தக்கபடியாக, ஆண் பெண் குழந்தை முதலியோர், இளைஞர் அத்தனை பேரினும் ஒருவர் தவறாமல் எல்லாருக்கும் வயிறு நிறைய நல்ல ஆகாரம் கொடுத்து விடுகிறோம். நாங்கள் பிள்ளை பிள்ளை தலைமுறையாக இந்த ஒப்பந்தம் தவறமாட்டோம். இந்தப் படிக்கு இந்த ஆலயத்தில் தெய்வசந்நிதியில் எங்கள் குழந்தைகளின்மேல் ஆணையிட்டு பிரதிக்ஞை செய்து கொடுக்கிறோம். இங்ஙனம் நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்ட விஷயத்தை எங்களில் முக்யஸ்தர் கை எழுத்திட்டு செப்புப் பட்டையம் எழுதி இந்தக் கோயிலில் அடித்து வைக்கிறோம்." இங்ஙனம் பிரதிக்ஞை செய்து இதில் கண்ட கொள்கைகளின்படி கிராம வாழ்க்கை நடத்தப் படுமாயின், கிராமத்தில் வறுமையாவது அதைக் காட்டிலும் கொடிதாகிய வறுமையச்சமாவது தோன்ற இடமில்லாமல் ஒற்றுமையும் பரஸ்பர நட்பும் ஏற்பட்டு, அற்பாயுள், நோய் முதலிய பிசாசுகளின் பயந்தொலைந்து, பரிபூர்ண க்ஷேமம் உண்டாகும். ஒரு கிராமத்தில் இந்த ஏற்பாடு நடந்து வெற்றி காணுமிடத்து, பின்னர் அதனை உலகத்தாரெல்லாரும் கைக்கொண்டு நன்மை யடைவார்கள். தமிழ்

நாட்டு மக்களே, இங்ஙனம் உலகத்தில் வறுமையைத் தீர்க்கும் பெருந் தர்மத்தில் வழிகாட்டுவோராக நிற்கும் மஹிமை உங்களைச் சார்வதாகுக.

## 26. பழைய உலகம்

இந்த உலகம் மிகப் பழமையானது. இதன் வடிவம் புதிதாகத் தோன்றும். இயற்கை பழமை; தனி வேப்பமரம் சாகும்; ஒற்றை வேப்பமரம் இறக்கும்; வேம்புக்குலம் எந் நாளுமுண்டு. பூமியுள்ளவரை வெயில் என்றைக்கும் இப்படி அடிக்கும். மழை, காற்று, பிறப்பு, வளர்ப்பு, நோய், தீர்வு, இன்பம், கட்டு, விடுதலை, தீமை, இன்பம், துன்பம், பக்தி, மறதி, நரைப்பு, துயரம், கலக்கம்—எல்லாம் எக்காலத்திலுமுண்டு.

கருவிகள் மாறுபடுகின்றன; இயற்கை செல்கின்றது. ஏன் சொல்லுகிறேன், தெரியுமா? நமக்கெல்லாம் தெரியாமல் ஆகாசத்திலிருந்து புதிய நாகரீகம் ஒன்று குதித்திருப்பதாகப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நான் அதை நம்பவில்லை. உலகமே பழைய உலகம்.

ஏழை பாடு எப்போதும் கஷ்டம். பணக்காரனுக்குப் பல வித சௌக்கியங்களுண்டு. கோயில் காத்தவனுக்குப் பஞ்சமில்லை. சாமிகள், முக்கால்வாசிக்குக் குறையாமல், பாதி கல், பாதி சாமி. முழுச்சாமி இருந்து கோயில் நடத்தினால், உடனே கிருதயுகம் பிறந்துவிடாதா?

எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும் இதே கதை தான் நடந்து வருகிறது. எவன் கை ஏறியிருக்கிறதோ அவன் பாடு கோலாஹலம். ஏழைக்குக் கஷ்டம்.

பணக்காரன்—ஏழை என்ற பிரிவு முன் காலத்தில் எப்படி உண்டாயிற்று? குடி, படை என்ற இரண்டாக மனித ஜாதி ஏன் பிரிந்தது? எல்லாரும் ஒன்றுகூடி உழுது பயிரிட்டுப் பிழைக்கும் கிராமத்தில் வேற்றுமை எந்தக் காரணத்தினுல் வந்தது? இவை யெல்லாம் எஜமானன் விசாரணைகள். இந்த நிமிஷம் ஸௌகர்யமில்லை. ஏழை பணக்காரன் விஷயத்தை மாத்திரம் இப்போது கருது வோம்.

ஒரு செட்டி வியாபாரத்தில் ஏழையாய் நொந்து போய்த் தனது வீட்டுப் பஞ்சாங்கத்தையரிடம் 'பணக் காரனுவதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டான். நவ க்ரஹபூஜை நடத்தவேண்டும் என்று அய்யர் சொன்னுன். எவ்வளவு பணம் செலவாகுமென்று செட்டி கேட்டான். பத்துப் பொன்னுகுமென்று பார்ப்பான் சொன்னுன். அதற் குச் செட்டி சொல்லுகிருன்:—''என்னிடம் இப்போது கொழும்புக்காசு, தென்னைமரம் போட்டது, ஒற்றைக் காசுக்கூடக் கிடையாது. இந்த நிலைமையில் என்ன செய்தால் பணம் கிடைக்குமென்று உம்முடைய சாஸ் திரம் பேசுகிறது. அதைச் சொல்லும்'' என்ருன்.

அப்போது பார்ப்பான் சொன்னுன்—''நீ போன ஜன்மத்தில் பிராமணருக்கு நல்ல தானங்கள் செய்திருக்க மாட்டாய். அதனுல் இந்த ஜன்மத்தில் உனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. உனக்குப் பிராயச்சித்தம் நம்முடைய சாஸ்திரத்தில் கிடையாது. இந்த ஜன்மத்தில் இனியேனும் புண்ணியங்கள் செய்தால் அடுத்த பிறவியில் உனக்குச் செல்வமுண்டாகலாம்.''

இவ்வாறு அய்யர் சொல்லிய உபாயம் செட்டிக்கு ரஸப் படவில்லை. எனக்கும் பயனுடையதாகத் தோன்ற வில்லை. அடுத்த ஜன்மத்தில் நான் மற்ருெரு மனிதனுகப்

பிறந்து வாழ்கையிலே செல்வமுண்டானால், இப்போதுள்ள எனக்கு எவ்விதமான லாபமும் இல்லை. அதைப்பற்றி எனக்கு அதிக சிரத்தை யில்லை. இந்த ஜன்மத்தில் பணம் தேடுவதுதான் நியாயம். வரும் ஜன்மத்து ரூபாய்க்கு இப்போது சீட்டுக் கட்டுவது புத்திக் குறைவு.

எவ்விதமான மிருக பக்ஷியும் கூட்டம் கூடி கக்ஷி கட்டித் தன் குலத்தைத் தானே அழிப்பது வழக்கமென்று தோன்றவில்லை. மனித ஜந்து ஒன்றுக்கே இவ்வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஹோமர் கால முதல் கான்ஸ்டண்டைன் ராஜா காலம் வரையிலும் யவன தேசத்தில் போர் நிற்கவில்லை. புயற் காற்றடித்த இரவிலே கூடக் களவு நிற்கவில்லை. தீமை எக்காலத்திலுமுண்டு. விஷத்துக்கு மாற்றும், நோய்க்குத் தீர்வும், மிடிமைக்குச் செல்வமும், மடமைக்குக் கல்வியும் எக்காலத்திலும் தேடலாம். தேடவேண்டுமானால், அதற்கு உபாயங்களும் எல்லாக் காலத்திலும் ஒன்றாகவே யிருப்பதன்றி மாறுபடுவதில்லை. மனிதர் கருவிகளையே மாற்றுகின்றனர். மற்றப்படி பழமையை விடாமல் நடத்தி வருகின்றார்கள்.

ஒரு வியாபாரத்தில் ஒரு லாபம் கிடைக்கவேண்டுமானால், ஒரேடியாக ஸௌர்ய மண்டலத்துக்குத் தாவிப்போக முடியாது. பழைய வழக்கப்படி மெதுவாக ஒவ்வோர் அடியாகத்தான் போகவேண்டும். பதறின காரியம் சிதறும். மெதுவாகச் செல்வோனே குறியடைவான். பழைய வழிதான் நல்ல வழி. அதுதான் எப்போதுமே நடக்ககூடிய வழி. உலகத்தில் எல்லாக் காரியமும் படிப்படியாகத்தான் ஏறுகிறது. படீலென்று ஏறினால், படீலென்று விழ நேரிடலாம். காற்றுடி துள்ளிப் பாய்கிறது. சூரியன் ஒரே கணக்காக நடக்கிறான். அவன் நெறி மாறுவதில்லை, தாழ்ப்பதில்லை, செல்லுகிறான்; எப்போதுமே ஏறிச் செல்லுவான், பழைய வழிதான் வியாபாரத்துக்குச் சரியான வழி.

# 27. வாசக ஞானம்

வியாபாரம், கைத்தொழில், ராஜாங்கச் சீர்திருத்தம், ஜனசமூகத் திருத்தம் முதலிய லௌகிய விவகாரங்கள் எல்லாவற்றிலும், மனிதர் ஏறக்குறைய எல்லாத் திட்டங்களையும் உணர்ந்து முடித்துவிட்டனர். ஒரு துறை அல்லது ஓர் இலாகாவைப் பற்றிய ஸூக்ஷ்ம தந்திரங்கள் மற்றொரு துறையில் பயிற்சி கொண்டோர் அறிந்திருக்கலாம். ஆனால் அந்த அந்த நெறியில் தக்க பயிற்சி கொண்ட புத்திமான்களுக்கு அதனை யதனைப் பற்றிய நுட்பங்கள் முழுமையும் ஏறக்குறைய நன்றாகத் தெரியும்.

பொதுவாகக் கூறுமிடத்தே, மனித ஜாதியார் அறிவு சம்பந்தப்பட்டமட்டில் மஹா ஸூக்ஷ்மமான பரம சத்தியங்களையெல்லாம் கண்டுபிடித்து முடித்து விட்டனர். ஆனால் அறிவுக்குத் தெரிந்ததை மனம் மறவாதே பயிற்சி செய்ய வலிமை யற்றதாய் நிற்கிறது. அறிவு சுத்தமான பின்னரும், சித்தசுத்தி ஏற்பட வழி இல்லாமல் இருக்கிறது. எனவே அறிவினால் எட்டிய உண்மைகளை மனிதர் ஒழுக்கத்திலே நடத்திக் காட்டுதல் பெருங் கஷ்டமாக முடிந்திருக்கிறது. ஆத்ம ஞானத்தின் சம்பந்தமாகக் கவனிக்குமிடத்தே, இந்த உண்மையைத் தாயுமானவர்.

> "வாசக ஞானத்தினால் வருமோ ஸுகம் பாழ்த்த
> பூசலென்று போமோ புகலாய் பராபரமே"

என்ற கண்ணியில் வெளியிட்டிருக்கிறார்.

இதன் பொருள் "வெறுமே வாக்களவாக ஏற்பட்டிருக்கும் ஞானத்தினால் ஆனந்தமெய்த முடியவில்லையே? என் செய்வோம்? பாழ்பட்ட மனம்ஓயாமல் பூசலிட்டுக் கொண்டிருக்கிறதே? இந்தப் பூசல் எப்போது தீரும்? கடவுளே, நீ

அதனைத் தெரிவிப்பாய்'' என்பதாம். இதே உண்மையை உலக நீதி விஷயத்தில் ஏற்கும்படி, திருவள்ளுவர்

**''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''**

என்ற குறளால் உணர்த்துகிறார்.

இதன் பொருள் ''வாயினால் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யாவர்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சொல்லின்படி நடத்தல் மிகவும் துர்லபம்'' என்பது.

திருஷ்டாந்தமாக, ஆண்களும் பெண்களும் ஸமான மான ஆத்ம இயல்பும், ஆத்ம குணங்களும் உடையோராத லால், பெண்களை எவ்வகையிலும் இழிந்தவராகக் கருது தல் பிழை என்ற கொள்கை ஐரோப்பாவில் படிப்பாளி களுக்குள்ளே மிகவும் சாதாரணமாகப் பரவியிருக்கிறது. ஆயினும், பெண்களுக்கு வாக்குச்சீட்டு ஸ்வதந்தரம் வேண்டும் என்றுகேட்டால், அதைப் பெரும்பான்மையான ஐரோப்பிய ராஜதந்திரிகளும் பண்டிதர்களும் எதிர்த்துப் பேசுவதுடன், அங்ஙனம் எதிர்ப்பதற்குப் பல போலி நியாயங்களையும் காட்டவும் துணிகிறார்கள்.

''விஷ்ணுபக்தி யுடையோர் எந்த குலத்தோர்ஆயினும் எல்லா வகையிலும் சமானமாகப் போற்றுவதற்குரியர் என்பது ஸ்ரீ ராமானுஜாசார்யருடைய பரம சித்தாந்தம்'' என்பதை நன்குணர்ந்த தற்காலத்து வைஷ்ணவர்கள் பிராமண சூத்ர பேதங்களை மற்ற வகுப்பினரைக் காட்டி லும் அதிகமாகப் பாராட்டுவது மாத்திரமன்றி, இன்னும் வடகலை—தென்கலைச் சண்டைகளைக்கூட விடாமல் வீண் சச்சரவுகளில் ஈடுபட்டு உழல்கின்றார்கள்.

''எல்லாச் சரீரங்களிலும் நானே ஜீவனாக இருக் கிறேன்'' என்று கண்ணன் கீதையால் உணர்த்திய

உண்மையையும்'', ''எல்லா உயிர்களிடத்தும் தன்னையும் தன்னிடதே எல்லா உயிர்களேயும் காண்பவனே காட்சியுடையவன்'' என்று கண்ணபிரான் அதே கீதையில் சொல்லிய கொள்கையையும் வேதோப நிஷத்துகளின் முடிவான தீர்மானம் என்று தெரிந்த ஹிந்துக்கள் உலகத்திலுள்ள மற்றெல்லா ஜனங்களேக் காட்டிலும், ஜாதி வேற்றுமை பாராட்டுவதில் அதிகக் கொடுமை செலுத்துகிருர்கள்.

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது''

என்ற குறளின்படி, 'இனிய சொற்கள் சொல்வதினின்றும் நன்மைகள் விளேவது கண்டு மானிடர் ஒருவருக்கு ஒருவர் கொடுஞ் சொற்கள் வழங்குவது மடமை' என்பது உலகத்தில் சாதாரண அனுபவமுடையவர்களுக்கெல்லாம் தெரியும். அங்ஙனம் தெரிந்தும் கொடுஞ் சொற்களும் கோபச் செயல்களும் நீங்கியவர்களே உலகத்தில் தேடிப் பார்த்தாலும் காண்பது அரிதாக இருக்கிறது.

''மரணம் பாவத்தின் கூலி'' என்று கிருஸ்தவ வேதம் சொல்வது எல்லாக் கிருஸ்தவர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும், பாவத்தை அறவே ஒழித்த கிருஸ்தவர்கள் எவரையும் காணவில்லே. 'நாமெல்லோரும் பாவிகள்' என்பதைப் பல்லவிபோல சொல்லிக்கொண்டு காலங் கடத்துகிருர்கள்.

இதென்ன கொடுமை! இதென்ன கொடுமை! இதென்ன கொடுமை! சாதாரணமாக வியாபாரம், விவசாயம் முதலிய காரியங்களிலே கூட மனிதர் நிச்சயமாக லாபங் கிடைக்கும் என்று தெரிந்த வழிகளே அநுசரிக்க முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். இந்தப் பெரிய சக்தி

ஹீனத்திற்கு மாற்றுக் கண்டு பிடிக்காமல் நாம் சும்மா இருப்பது நியாயமன்று.

கண்ணைத் திறந்துகொண்டு படுகுழியில் விழுவது போல, மனித ஜாதி நன்மையை நன்முய் உணர்ந்தும் தீமையை உதற வலிமையின்றித் தத்தளிக்கிறது.

இதற்கு என்ன நிவாரணம் செய்வோம்? தைரியந் தான் மருந்து! தற்கால அசௌகர்யங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் மனிதர் உண்மை என்று கண்டதை நடத்தித் தீர்த்துவிட வேண்டும். அங்ஙனம் தைரியத்துடன் உண்மை நெறி பற்றி நடப் போரை மற்றவர்கள் புகழ்ச்சியாலும் சம்மானங்களாலும் ஊக்கப்படுத்த வேண்டும். கலி போதும்; வீண் துன்பங் களும் அநாவசியக் கஷ்டங்களும் பட்டுப் பட்டு உலகம் அலுத்துப் போய்விட்டது.

வாருங்கள், மக்களே! வாருங்கள், அண்ணன் தம்பி மார்களே! ஒருவரிருவர் நேர்மை வழியில் செல்ல முயல் வதில் பல இடர்கள் ஏற்படுகின்றன. அதனுல் நேர்மை வழியில் செல்ல விரும்புவோர்க்கெல்லாம் அதைரியம் ஏற் படுகிறது. வாருங்கள், உலகத்தீரே! கூட்டங் கூட்டமாக நேர்மை வழியில் புகுவோம்.

ஆண் பெண் சமத்வமே தர்மமென்று தெரிகிறதா, அப்படியானுல் வாருங்கள்; மாதர்களை லக்ஷக்கணக்காக விடுதலை செய்வோம். ஜாதி பேதங்கள் பிரயோஜனம் இல்லை என்று தெரிந்ததா? நிற வேற்றுமைகளும் தேச வேற்றுமைகளும் உபயோகம் இல்லாதன என்று தெரிந்ததா? நல்லது, வாருங்கள் கோடிக்கணக்காக. சமத்வ நெறியிலே பாய்ந்து விடுவோம். பழைய கட்டுகளை லக்ஷக்கணக்கான மக்கள் கூடி நின்று தகர்ப்போம்.

'அன்பே இன்பம் தரும். பகைமை அழிக்கும்' என்று தெரிந்தோமோ? நல்லது, எழுங்கள், கோடிக்கணக்கான மானிடர் எங்கும், எப்போதும், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தத் தொடங்குவோம். கலியை அழிப்போம். சத்யத்தை நாட்டுவோம்.

## 28. அமிர்தம் தேடுதல்

"காக்க நின்னருட் காட்சியல்லாதொரு போக்குமில்லை"

—தாயுமானவர்.

பல வருஷங்களின் முன்னே தெரு வழியாக ஒரு பிச்சைக்காரன் பாடிக்கொண்டு வந்தான்.

"தூங்கையிலே வாங்குகிற மூச்சு—அது
சுழிமாறிப் போனாலும் போச்சு"

இந்தப் பாட்டைக் கேட்டவுடனே எனக்கு நீண்ட யோசனை உண்டாகி விட்டது. என்னடா இது! இந்த உடல் இத்தனை சந்தேகமாக இருக்கும்போது இவ்வுகத்தில் நான் என்ன பெருஞ் செய்கை தொடங்கி நிறைவேற்ற முடியும்? ஈசன் நம்மிடத்தில் அறிவை விளங்கச் செய்கிறான். அறிவே தமது வடிவமாக அமைத்திருக்கிறான். அறிவு, இன்பத்தை விரும்புகிறது. அளவில்லாத அழகும் இன்பமும் கொண்ட உலகமொன்று நம்மோடு இருக்கிறது. எப்போதும் இவ்வுலகம் இன்பம். இந்த உலகம் கவலையற்றதாகும்; இதிலே அணுவிலும் அணுவொக்கும் சிறிய பூமண்டலத்தின் மீதுதான் நம்மால் சஞ்சரிக்க முடிகிறது. இது போல் கணக்கில்லாத மண்டலங்கள் வான்வெளியிலே சுழல்கின்றன. அவற்றின் இயல்பையும் நாம் அறிவினாலே காண்கிறோம். அவற்றிலே ஒரு பகுதியின் வடிவங்களைக்

கண்ணாலே தூரத்திலிருந்தே பார்க்கிறோம். இவ்வளவில் எங்கே பார்த்தாலும் ஒரே அழகுமயமாக இருக்கிறது. நமது பூமண்டலத்திற்கு வான் முழுதும் ஒரு மேற்கட்டி போல் தோன்றுகிறது. இடையெல்லாம் ஒரே தெளிவான வெளி; சூரியன் செய்கிற ஆயிர விதமான ஒளியினங்கள், மலை, காடு, நதி, கடல்—அழகு.

தவிரவும், எதைத் தொட்டாலும் இன்பமும் துன்பமும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் நாம் அறிவினாலே பொருள்களின் துன்பத்தைத் தள்ளி இன்பத்தை எடுத்துக் கொள்ளலாம். தண்ணீர், குளித்தால் இன்பம்; குடித்தால் இன்பம்; தீ, குளிர் காய்ந்தால் இன்பம்; பார்த்தாலே இன்பம்; மண், இதன் விளைவுகளிலே பெரும்பான்மை இன்பம், இதன், தாங்குதல் இன்பம்; காற்று, இதைத் தீண்டினால் இன்பம்; மூச்சிலே கொண்டால் இன்பம்; உயிர்களுடனே பழகினால் இன்பம்; மனிதரின் உறவிலே அன்பு இருந்தால் இன்பக்கட்டி. பின்னும் இவ்வுலகத்தில், உண்ணுதல் இன்பம். உழைத்தல் இன்பம்; உறங்கல் இன்பம்; ஆடுதல் இன்பம், கற்றல், கேட்டல், பாடுதல், எண்ணுதல், அறிதல்— எல்லாம். இன்பந்தான்.

## துன்பத்தை நீக்குதல் விரைவிலே ஈடேறவில்லை

ஆனால் இன்பங்களெல்லாம் துன்பங்களுடனே கலந்திருக்கின்றன. துன்பங்களை அறிவினால் வெட்டி எறிந்து விட்டு இன்பங்களை மாத்திரம் சுவை கொள்ள வேண்டுமென்று ஜீவன் விரும்புகிறது. துன்பங்களை வெட்டி எறியத் திறமைகொண்ட அறிவும் உறுதியும் வேண்டுமானால், அது எளிதில் முடிகிற காரியமாகத் தோன்றவில்லை. பெரிய பெரிய கஷ்டங்கள் பட்ட பிறகுதான், சிறிய உண்மைகள் புலப்படுகின்றன. நம்மைச்சுற்றி இன்பக் கோட்டைகள் கட்டிக்கொள்ள வேண்டும் என்கிற ஆசை ஒவ்வொருவனுக்

கும் இருக்கின்றது. மகத்தான அறிவு வேண்டும். அழியாத நெஞ்சுறுதி வேண்டும். கல்விகள் வேண்டும். கீர்த்திகள் வேண்டும். செல்வங்கள் வேண்டும். சூழ்ந்திருக்கும் ஊரார் தேசத்தார் உலகத்தார் எல்லோரும் இன்பத்துடன் வாழும்படி நான் செய்யவேண்டும். நல்லாசைகள் பெரிது பெரிதாக வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆசைகள் நிறைவேற வேண்டுமானால், பலமான அடிப்படை போட்டு மெல்ல மெல்லக் கட்டிக்கொண்டு வரவேண்டும். நிலை கொண்ட இன்பங்களை விரைவிலே உண்டாக்குதல் சாத்தியமில்லை. ஏழையாக இருப்பவன் பெரிய செல்வனாக வேண்டுமானால் பல வருஷங்கள் ஆகின்றன. கல்வியில்லாதவர் கற்றுத்தேறப் பல வருஷங்கள் ஆகின்றன. உலகத் தொழில்களிலே தேர்ச்சியடைய வேண்டுமானால் அதற்குக் காலம் வேண்டும். ஆத்ம ஞானம் பெறுவதற்குக் காலம் வேண்டும். "பொறுத்தவன் பூமியாள்வான்." "பதறின காரியம் சிதறும்". இடையே குறுக்கிடும் மரணம் இங்ஙனம் இன்பங்களின் தேட்டத்தில் நம்மால் இயன்ற வரையில் இடைவிடாமல் முயற்சி செய்து கொண்டு நாம் காலத்தின் பக்குவத்துக்காகக் காத்திருக்கும்படி நேரிடுகிறது. இதனிடையே மேற்படி பிச்சைக்காரன் பாட்டு வாஸ்தவமாய் விட்டால் என்ன செய்வது? தூங்கையிலே வாங்குகிற மூச்சு அது சுழிமாறிப் போனாலும் போச்சு! என்ன ஹிம்சை இது? நூறு வயதுண்டு என்பதேனும் நல்ல நிச்சயமாக இருந்தால் குற்றமில்லை. நூறு வருஷங்களில் எவ்வளவோ காரியம் முடித்து விடலாம். 'அடுத்த நிமிஷம் நிச்சயமில்லை' என்று தீர்ந்துவிட்டால் எதைக் கொண்டாடுவது? இது கட்டி வராது. எப்படியேனும், தேகத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும். நமது காரியம் முடிந்த பிறகுதான் சாவோம். அதுவரை நாம் சாகமாட்டோம் நம் இச்சைகள் நம்முடைய தர்மங்கள் நிறைவேறும் வரை நமக்கு மரணமில்லை,

## 29. நேசக் கக்ஷியாரின் "மூட பக்தி"

*11 பிப்ரவரி 1921*

"ரெயிக் ஸ்தாக்" என்ற ஜெர்மன் ஜனப் பிரதிநிதிகளின் ஸபையில் ஹெர் வோன் ஸிமோன்ஸ் என்ற ஜெர்மானிய மந்திரி சில தினங்களின் முன்பு நேசக் கக்ஷியாரின் பாரீஸ் ஸமாஜத்தில் முடிவு செய்யப்பட்ட நஷ்டஈட்டுத் தொகைகளைப் பற்றிப் பேசுகையில், ஜெர்மனியுடன் ஸமரஸமான வாதங்கள் செய்து பெறக்கூடியதைக் காட்டிலும் ஜெர்மனிக்குக் "கட்டளை" பிறப்பிப்பதனுல் அதிகம் பெறக்கூடுமென்ற மூட பக்தியை நேசக் கக்ஷியார் நீக்கி விடுதல் தகுமென்று எச்சரிக்கை செய்தார். ஏற்கெனவே ப்ருஸ்ஸெல்ஸ் நகரத்தில் நடைபெற்ற அர்த்த சாஸ்த்ர நிபுணர்களின் ஸங்கத்தில் ப்ரெஞ்ச் பிரதிநிதியாகிய ஸ்ரீமான் லேதூர என்பவரால் திட்டஞ் செய்யப் பட்டு மற்ற ஆங்கில, ப்ரெஞ்ச் அதிகாரிகளாலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கும் ஏற்பாட்டை நேசக் கக்ஷியார் இங்ஙனம் திடீரென்று கைவிட்டு விட்டதைக் குறித்து ஹெர் வோன் ஸிமோன்ஸ் வியப்புத் தெரிவித்தனர். லண்டனில் நடத்தப்போகிற ஸபைக்கு ஜெர்மன் பிரதிநிதிகளையும் அழைக்கப் போவதாக மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித்திருந்தார். அதாவது, பாரீஸ் ஸமாஜத்தின் தீர்மானங்களை ஜெர்மானியர் ஒப்புக் கொள்வாராயின் பிறகு லண்டன் ஸபைக்கு அவர்களைப் பிரதிநிதிகளனுப்பும் படி கேட்கவேண்டுமென்பது மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் கருத்து. ஆனுல் அதன் ஸம்பந்தமான அழைப்புக் கடிதம் இன்னும் தங்கள் வசம் கிடைக்கவில்லையாதலால், அந்த ஸபையில் சேர்வதா, அல்லது அதை பஹிஷ்காரம் செய் வதா என்பதைக் குறித்து இன்னும் ஜெர்மானியர் நிச்சய முரைக்க இயலாதென்று வோன் ஸிமோன்ஸ் கூறினுர்

ஆயினும், நேசக் கக்ஷியாரின் தீர்மானங்களை ஆதாரமாகக் கொண்டு மேலே விவாதங்கள் நடத்துவது ஸாத்யமில்லை யென்றும், அத்தீர்மானங்களுக்கெதிரிடையாக ஜெர்மானிய ஆலோசனைகளை வெளியிடப் போவதாகவும் அந்த மந்திரி தெரிவித்தார்.

நேசக் கக்ஷியாரின் பாரீஸ் தீர்மானங்களின்படி ஜெர்மனி நாற்பத்திரண்டு வருஷங்களில் இருபத்தீராயிரத்து அறுநூறு கோடி (26000, 000, 000) தங்க "மார்க்" அல்லது முந்நூறாயிரங் கோடி (3000, 000, 000, 000) காயித "மார்க்" செலுத்த வேண்டுமென்றும், அதனுடனே இன்னும் 42 வருஷங்கள் வரை ஜெர்மனியின் ஏற்றுமதிகளின் கிரயத்தில் 100-க்கு 12 வீதம் செலுத்திக் கொண்டு வரவேண்டு மென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. பிந்திய வகையில் இன்னும் ஓரிரண்டாயிரம் கோடி "மார்க்" அதிகமாகத் தட்டலாமென்று நேசக் கக்ஷியார் நினைப்பதாக வோன் ஸிமோன்ஸ் சொல்லியபோது ரெயிக் ஸ்தாக் அங்கத்தினர் நகைத்தார்களென்று ராய்ட்டர் தந்தி தெரிவிக்கிறது. இதினின்றும் ஜெர்மானியர் நஷ்டஈட்டுத் தொகை செலுத்தும் விஷயத்தில் நேசக் கக்ஷியாரின் கட்டளையை உடனே எதிர்ப் பேச்சில்லாமல் நிறைவேற்றுவார்களென்று நினைக்க இடமில்லாமலிருக்கிறது. இந்தத் தீர்மானங்களை ஜெர்மானியர் அங்கீகரியாவிடின், அவர்களுக்கு விதிப்பதாக எண்ணியிருக்கும் தண்டனைகளுக்கிடையே அவர்களை ஸர்வதேச ஸங்கத்தில் சேர்க்கமாட்டோமென்ப தொன்று. ஆனால் அந்த ஸங்கத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி ஜெர்மனி இன்னும் பிரார்த்தனை யனுப்பவில்லை யாதலால், அந்த தண்டனை அதிகமாகப் பொருட்படுத்தத் தக்கதன்றென்று வோன் ஸிமோன்ஸ் குறிப்பிட்டபோது "ரெயிக் ஸ்தாக்" அங்கத்தினர் கரகோஷம் புரிந்தார்களாம்.

அமெரிக்கப் பத்திரிகைகளிற் பெரும்பாலனவும், ராஜதந்திரிகளிற் பெரும்பாலோரும், இவ்விஷயத்தில் ஜெர்மனிக்கனுகூலமாகவே பேசுதல் குறிப்பிடத்தக்கது. ஜெர்மானியரால் இந்த பாரத்தைச் சுமக்க முடியா தென்றும், இந்த ஏற்பாட்டிலிருந்து அமெரிக்க வியாபாரத்துக்கு இடையூறு விளையுமென்றும் அமெரிக்காவில் பலமான நம்பிக்கை யேற்பட்டிருப்பதாக ராய்ட்டர் தெரிவிக்கிறார். ஜனதிபதி வில்ஸனுடைய பத்திரிகையாகிய "நியூயார்க் உலகம்" என்பது,—'ஜெர்மன் ஏற்றுமதிகளின் மீது விதிக்கும் தீர்வையால் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் வஸ்துக்களின் அளவு குறைந்துவிடும். இதினின்றும் விளைபொருள் வாங்குவதற்கு வேண்டிய நாணயம் ஜெர்மனிக்குக் குன்றிப் போகும். எனவே ஜெர்மனி மீளவும் உத்தாரணம் பெறுதல் இயலாது போய்விடும்' என்றெழுதுகிறது.

இவ்வாறு அமெரிக்காவில் ஜெர்மனிக்குத் தக்க உபபலமிருப்பதைக் கருதுமிடத்தே, வோன் ஸிமோன்ஸ் சொல்லியபடி நேசக் கக்ஷியாரின் திட்டம் வெறும் மூடபக்தியாகத்தான் முடியுமென்ற எண்ணம் எவருக்குமுண்டாகக்கூடும். ஆனால், இங்ஙனம், மஹாயுத்தத்தால் நேசக் கக்ஷியார்களுக்கு விளைந்திருக்கும் நஷ்டங்களை சிரமமில்லாமல் ஜெர்மனியின் தலையில் கட்டித் தாம் தப்பிவிடலாமென்று கருதும் மூட பக்தியைக் காட்டிலும் மற்றொரு பெரிய மூட பக்தி யிருக்கிறது. அதைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்லுதல் நமது கடமை என்று நினைக்கிறோம். அந்த மூட பக்தி நேசக் கக்ஷியாருக்குள்ளே பொதுவாக இருப்பினும், அவர்களுக்குள் மந்திராலோசனை முதலிய விஷயங்களில் தலைமை பூண்டிருக்கும் இங்கிலாந்தினிடம் மிகவும் விசேஷமாகக் காணப்படுகிறது. இதனை ஒரு திருஷ்டாந்த மூலமாக விளக்குகிறோம்.

ரெயிக் ஸ்தாக்கில் மேற்கூறிய ஸ்ரீ ஸிமோன்ஸின் உபந்யாஸம் இந்த மாஸம் (பெப்ருவரி) முதல் தேதியன்று நடைபெற்றது. அதே முதல் தேதியன்று ஐர்லாந்தில் கார்க் நகரத்தில் ராணுவ விசாரணைக் கொலைத் தண்டனை யொன்று நிறைவேற்றப்பட்டது. ராணுவ விசாரணையின் கீழ் இதுதான் முதலாவது கொலைத் தண்டனை யென்று ராய்ட்டர் தெரிவிக்கிறார். கொரி யென்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவனிடம் அனுமதிச் சீட்டில்லாத கைத் துப்பாக்கி யொன்றிருந்ததாகக் குற்றஞ்சாற்றி, அக் குற்றத்துக்காக அவனுக்கு மரணதண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது. அடக்கு முறைகளால் ஐர்லாந்துக் கலகத்தை நசுக்கிவிடத் தீர்மானஞ் செய்திருக்கிறார் களென்று இதனால் நன்கு விளங்குகிறது. இதைத்தான் நாம் பரம மூடபக்தியென்று சொல்லுகிறோம். ஜனங்கள் ஏற்கெனவே கொடுமையை எதிர்த்துக் கலகம் புரியும் போது, அந்தக் கலகத்தை அடக்க இன்னும் அதிகக் கொடுமையை வழங்குதல் உபயோகமற்ற—தீமையை மிகுதிப் படுத்தக் கூடிய—முறை யென்பதை உலக சரித்திரம் மீட்டும், மீட்டும், மீட்டும் எத்தனையோ திருஷ்டாந்தங்களால் விளக்கி யிருக்கிறது. எனினும் அதே முறையைத்தான் ஸிரியாவில் ப்ரான்ஸ் தேசத்தார் கையாள முயலுகிறார்கள். மெஸபொடோமியாவிலும் அரபியாவிலும் ஆங்கிலேயர் அதைத்தான் கையாண்டு வருகிறார்கள். கிரேக்கர் துருக்கியில் அதே கிரீடை செய்து வருகிறார்கள். அச்சம், சினம் முதலிய சித்த விருத்திகள் தோன்றும் போது ஸாதாரண மனிதர் புத்தி தவறி வேலை செய்தல் ஸஹஜம். அந்த ஸமயத்தில் ஜனங்களுக்கு யுக்தி, அனுபவம், சாஸ்திரம் என்ற மூன்று வித ப்ரமாணங்களும் மறந்துபோய் விடுகின்றன. எனவே புத்தி ஹீனமான கார்யங்கள் செய்து பெரிய நஷ்டங் களுக்குள்ளாகின்றனர்,

ஆனால், இவ்விதமான கார்யங்களை ராஜாங்கத்து மந்திரிகள் செய்வாரானால், அவர்கள் ராஜ்ய பாரத்துக்குத் தகுதியற்றோராய் விடுகிறார்கள். மேலும், மனுஷ்ய ஸஹோதரத்வம், ஸமத்வம் இவை ஐர்லாந்துக்குண்டா, இல்லையா? அரபியாவுக்கும் மெஸபொடோமியாவுக்கும், இந்தியாவுக்கும், எகிப்துக்கும் அவை உண்டா, இல்லையா? இல்லையெனில், ஏன் இல்லை? தெய்வ விதிகளுக்கு மாற்றில்லை. கொடுமையும் அநீதியும் செய்வோர் கொடுமைக்கும் அநீதிக்கும் இரையாவர். பிறரை அடிமைப் படுத்துவோர், தாம் அடிமைகளாக்கப்படுவர். அநியாயம், ஸமத்வ விரோதம் முதலியவற்றால் ஐரோப்பிய மஹா யுத்தத்தில் அபாரமான கஷ்டங்களுக்குட்பட்டும், ஐரோப்பிய ராஜதந்திரிகளுக்கு இன்னும் புத்தி தெளியாமலிருப்பது பற்றி விசனப்படுகிறோம்.

—பாரதி தமிழ்

## 30 "பூகோள மஹா யுத்தம்"

*12 பிப்ரவரி 1921*

ஐரோப்பாவைப் பிடித்த சனி இன்னும் முற்றிலும் நீங்கியதாகத் தெரியவில்லை. சென்ற நான்கு நூற்றாண்டுகளில் ஐரோப்பா கல்வித் தேர்ச்சி, இயற்கை யறிவு முதலியவற்றில் எவ்வளவோ மேன்மை யடைந்திருக்கிறது. ஆனால் அதை அக்கல்வி முதலியவற்றால் எய்தக் கூடிய முழு நலத்தையும் எய்தாதபடி தடுத்து, ஏறக் குறைய ஸ்மசான நிலைமையில் கொண்டு சேர்த்தது யாதெனில், அதன் ஓயாத போர் நினைவு! ஐரோப்பாவில் ஸதா ஏதேனுமோர் யுத்தம் நடந்து கொண்டிருக்கும். அல்லது விரைவில் ஒரு யுத்தம் வரப் போவதாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்,

அந்தக் கண்டத்தாரின் மனதிலிருந்து யுத்தபயம் முற்றிலும் நீங்கியிருந்த ஒற்றை க்ஷணமேனும் பல நூற்றுண்டுகளாகக் கிடையாது.

இதனிடையே, சென்ற நான்கு நூற்றுண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவின் ஒருபாகத்தினுள்ளே ஒதுங்கி வாழ்ந்த வெள்ளை ஜாதியார்கள் இன்றைக்கு ஐரோப்பா முழுவதையும், அமெரிக்காக் கண்ட முழுதையும், ஆஸ்திரேலியாவையும், ஆப்ரிகாவில் முக்காலே யரைக்காற் பங்கையும், ஆசியாவில் பாதிக்கு மேற் பகுதியையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

இங்ஙனம் இந்த நான்கு நூற்றுண்டுகளுக்குள்ளே பல கண்டங்களை வெல்லும் சக்தி இவர்களுக் கேற்பட்டதன் காரணம் வெடி மருந்து, துப்பாக்கி, பீரங்கிகள். இந்த ஆயுதங்கள் மற்றக் கண்டத்தாரின் வசப்படு முன்பு வெள்ளை ஜாதியாருக்கு வசப்பட்டன. அதனுல் பூமண்டலம் அவர்களுடைய ஆதிக்கத்தின் கீழே வீழ்ந்தது.

ஆனுல், இங்ஙனம் உலக முழுதையும் வென்று, அங்கெல்லாம் தங்களுடைய வியாபாரத்தையும் நிலை நிறுத்தி ஏராளமான செல்வங்கள் திரட்டி ஐரோப் பாவுக்குக் கொணர்ந்த ஐரோப்பியர் அந்தக் குவை குவை யான திரவியங்களையும், அவர்களுக்கு "ஸயன்ஸ்" ஞானத் தால் இயற்கையின் மீது கிடைத்த புதிய சக்திகளையும் யுத்தத்தில் உபயோகப் படுத்துவதே முதற் கடமையாகக் கருதினர்.

திருஷ்டாந்தமாக, வான விமானம் பறக்கத் தொடங் குவதற்கு முன்னதாகவே ஐரோப்பியர் அதைப் போரிலே உபயோகப் படுத்துவதெப்படி என்பதைக் குறித்து யோசனை செய்யத் தொடங்கி விட்டார்கள்.

இந்த குணத்திலிருந்து கடைசிப் பயனுக விளைந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தினுல் தாம் எய்திய கஷ்டங்களை உணர்ந்த பின்னராவது அவர்களுக்கு இந்த குணம் அடியோடு தொலைந்து விட்டதென்று நினைத்தோம். ஆனுல் பிறவிக் குணத்துக்கு மட்டை வைத்துக் கட்டினுல் போதுமா? இத்தனை கஷ்டங்களுக்குப் பிறகும் இந்தகுணம் அவர்களைக் கொஞ்சம் ஒட்டிக் கொண்டுதான் இருக்கிறது

உள் நாட்டுக் குழப்பத்தை அடக்குவதற்கு வேறு நியாயமான வழி தெரியாமல், பிற நாடுகளுடன் போர் தொடுத்து, அதினின்றும் ஸ்வ ஜனங்கள் ஏராளமாக மடிந்து தொலைவார்களாதலால் அங்ஙனம் உள் நாட்டுக் கலகம் தானே சாந்தி பெற்று விடுமென்று எதிர்பார்த்துப் பிற தேசங்களோடு போர் தொடங்குதல் சக்தியற்ற ராஜதந்திரிகளின் ஹீன மார்க்கங்களில் ஒன்று.

அதை முன்பு ருஷியா தேசத்துச் சக்ரவர்த்தி அனுஸரித்தார். அவர் அதனுல் எய்திய முடிவைக் கண்டும் புத்தி தெளியாமல், இன்று வேறு சில ஐரோப்பிய தேசங்களின் ராஜதந்திரிகள் அந்த வழியை அனுஸரிக்க எண்ணுகிருர்களென்று நினைக்க பலமான ஹேதுக்கள் இருக்கின்றன.

ஆனுல், இனி ஐரோப்பாவில் அல்லது மேற்கு ஐரோப்பாவில், குறைந்த பக்ஷம் இன்னும் 30 வருஷங்களுக்கு ஜனங்கள் யுத்தத்தின் பெயரையே ஸ்மரிக்க மாட்டார்களென்பது திண்ணம். சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை அணுகாது.

எனினும் ஐரோப்பிய தேசத்தார்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கும் விரோதங்களை மூடும் பொருட்டு ஐரோப்பா முழுவதையும், அல்லது வெள்ளை ஜாதியார் அனைவரையும்

ஆசியா, ஆப்பிரிகா ஜனங்களின் மீது போருக்கு விடலா மென்று சில மதி கேடர் யோசனை செய்கிறார்கள்!

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை பொறுப்புத் தன்மை யுடையதாகத் தன்னை மிகவும் கணித்துக் கொள்ளுகிறது. இங்கிலாந்து தேசத்து மந்திரிகளைக் காட்டிலும் தனக்கு ப்ரிட்டிஷ் பரிபாலன விஷயத்தில் ஆயிரம் பங்கு அதிகப் பொறுப்புணர்ச்சி யிருப்பதாக நடிக்கிறது. அந்தப் பத்திரிகை தனது 192 ஜனவரி 15-ஆம் தேதிப் பதிப்பில், மிஸ்டர் மக்ளூர் என்ற அமெரிக்கப் பத்திரிகாசிரியர் ரொருவர் எழுதிய "மேற்கும் கிழக்கும் விரோதம்" என்ற வ்யாஸத்தை ப்ரசுரம் செய்திருப்பதுடன், அதைக் குறித்து ஒரு தலையங்கக் குறிப்பும் வரைந்திருக்கிறது.

அந்த வ்யாஸத்தின் கருத்து யாதெனில் எதிர்காலத் தில் ஸமீபத்திலே ஏற்கெனவே நடந்த ஐரோப்பிய மஹா யுத்தத்தைக் காட்டிலும் பன் மடங்கு கொடிய பூகோள மஹா யுத்தமொன்று நடக்கப்போகிற தென்பது. இந்த யுத்தம் வெள்ளை ஜாதியாருக்கும் இதர வர்ணத்தாருக்கு மிடையே நடக்குமாம். ஜப்பானியரையும் சீனரையும் அமெரிக்காவும்ஆஸ்திரேலியாவும் தம்முள்ளே பிரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை உத்தேசித்து மஞ்சள் வர்ணத் தாருக்கும் வெள்ளையருக்கும் சண்டை வருமாம். ஜப் பானில் பூமி கொஞ்சம்; ஜனத்தொகை அதிகம். அதற்கு அதி சமீபத்தில் வட அமெரிக்கா இருக்கிறது. அங்கு விஸ்தாரமான பூமிகளிருக்கின்றன. ஜனத்தொகை மிக சொற்பம். இன்னும் உழவின் கீழே கொணராத மிக வள மார்ந்த மைதானங்கள் ஆயிரக் கணக்கான மைல்களில் பரவிக் கிடக்கின்றன. கனடாவிலுள்ள நிலங்களை நன்றாக முழுமையும் பண்படுத்தினால் அதில் விளையக்கூடிய கோதுமை மனிதக் கூட்டத்தில் பாதிக்குப் போதிய உணவாகு மென்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

உலகத்திலுள்ள பூமியை யெல்லாம் இங்ஙனம் ஐரோப்பியர் சூழ்ந்து கொண்டு, நிலத்துக்குத் தவிக்கும் ஜனங்களைத் தம் சூழல்களுக்குள் ப்ரவேசிக்கக் கூடாதென்று தடுப்பதை ஜப்பான் ஆக்ஷேபிக்கிறது. வலியவன் பேச்சு இறுதியில் வெல்லு மென்ற ஐரோப்பியக் கொள்கையை சாதகமாக எண்ணி ஜப்பான் தன் சண்டைக் கப்பல்களை அதிகப் படுத்திக் கொண்டு வருகிறது. தன் பீரங்கிகளைப் பெருக்கு கிறது. தன் படைகளை பலப்படுத்துகிறது.

இதைக் கண்டு அமெரிக்காவுக்கு நடுக்க மேற்பட்டிருக் கிறது. அமெரிக்காவுக்கு இங்கிலாந்து கழுத்து வரை கடன் பட்டிருக்கிறது. இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் நட்புடம் பாடு செய்து கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் ஜப்பானு டன் சேர்ந்து கொண்டு இங்கிலாந்து அமெரிக்காவுடன் போர் செய்யாதென்று மிஸ்டர் மக்ளூர் ப்ரமாணம்பண்ணு கிறார். அதை லண்டன் "டைம்ஸ்" பத்திராதிபர் மனப் பூர்வமாக ஆமோதிக்கிறார்.

மேலும் தென் ஆசியாவிலும் ஆப்ரிகாவிலுமுள்ள ஜனங்கள் ஐரோப்பாவின் ஆட்சியைத் தள்ளி விடப் போகிறார்களாம். அவர்களிடம் ஆயுதங்கள் இல்லையே யெனில், அவர்கள் அவற்றை மிக விரைவில் செய்து கொள்வார்களென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறார்.

இந்த யுத்தத்தில் சில ஐரோப்பிய தேசத்தார்ஆசியாக் கண்டத்தாரின் பக்கத்திலே சேர்ந்து கொள்ளக்கூடு மென்று மிஸ்டர் மக்ளூர் சொல்லுகிறார்.

எனவே, வெள்ளை ஜாதியாருக்குப் பெரிய ஆபத்து வரப்போகிறதென்று மிஸ்டர் மக்ளூர் பலமாக எச்சரிக் கிறார். ஆனால் ஆசியா இந்தியாவின் தலைமைக்குட்பட்டது. இந்தியா ஐரோப்பியரைக்கூடக் கொல்ல விரும்புவதில்லை. திருத்த விரும்புகிறது. எனவே, ஐரோப்பியர் இந்தப்புதிய

பயத்திற்கிரையாதல் அவசியமில்லை. அது வெறும் பேதை யச்சம். ஆனால் நம்முடைய சொல் ஐரோப்பாவில் எட்டு வதைக் காட்டிலும் லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையின் சொல் அதிகமாகவும் விரைவாகவும் எட்டுமே? அதற் கென்ன செய்யலாம்?

—பாரதி தமிழ்

## 31. மண்ணுலகம்

வீட்டு வியாபாரங்களையும் எனது சொந்த வர்த்த மானங்களையும் குறித்துச் சில திருஷ்டாந்தங்கள் காண் பித்தேன். இனி, வெளி வியாபாரங்கள், எனது மித்திரர், அயலார் முதலியவர்களின் செய்திகள் ஸம்பந்தமாகச் சில திருஷ்டாந்தங்கள் காண்பிக்கிறேன். திருவல்லிக்கேணி யிலே "செ..............ஸங்கம்" என்பதாக ஓர் தேச பக்தர் சபை உண்டு. அதில் தேசபக்தர்கள்தான் கிடையாது. நானும் சிற்சில ஐயங்கார்களுமே சேர்ந்து, "காரியங்கள்". —ஒரு காரியமும் நடக்கவில்லை—நடத்தினோம். நாங்கள் தேசபக்தர்கள் இல்லையென்று, அந்தச் சுவை ஒன்றுமில்லா மற் போனதிலிருந்தே நன்கு விளங்கும்.

நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர் களெல்லாம் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர்; 'காலணா'வின் அடியார்க்கும் அடியார்.

ஆனால், எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும் படியாக இருக்கும். பணத் தொண்டரடிப்பொடி யாழ்வார் எங்களெல்லோரைக் காட் டிலும் வாய்ப் பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக

வளைக்கலாமென்பான். மற்றொருவன் மணலைக் கயிறாகத் திரிக்கலா மென்பான். ஒருவன் "நாம் இந்த ரேட்டில்—இந்த விதமாகவே—வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப் பெருமை ஆறுமாதத் தில் காற்றாய்ப் போய்விடும்" என்பான். மற்றொருவன் "சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிறார், ஆறு வருஷத்தில் கிடைத்து விடுமென்று எனக்குத் தோன்று கிறது" என்பான். தவளையுருவங் கொண்ட மூன்றாமொரு வன் "ஆறு மாதமென்று சொல்லடா" என்று திருத்திக் கொடுப்பான்.

ப.................. ஆழ்வார் எங்களிலே முக்கியஸ்தர், அவர் இதை எல்லாம் கேட்டுப் பரமானந்தமடைந்து கொண்டிருப்பார். ஆனால் ஒரு தேவதை அவரிடம் வந்து, உங்களுக்கு நான் ஸ்வராஜ்யம் நாளை ஸூர்யோதத்திற்கு முன்பு சம்பாதித்துக் கொடுக்கிறேன். நீ உன் வீட்டிலிருந்து அதற்காக ஒரு வராகன் எடுத்துக் கொண்டுவா" என்று சொல்லுமாயின், அந்த ஆழ்வார், "தேவதையே உனக்கு வந்தனம் செய்கிறேன், ஓம் சக்தியை நம: ஓம் பராயை நம: இத்யாதி; அம்பிகே, இந்த உபகாரத்துக்கு நாங்கள் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறோம்? எங்கள் உடல், பொருள், ஆவி மூன்றும் உன்னுடையதே யாகும், ஆனால், ஒரு வராகன் கேட்ட விஷயத்தைப் பற்றி நான் ஒரு வார்த்தை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள் கிறேன். அதைக் கேள். நீ சொல்லுகிற காரியமோ பொதுக் காரியம். அதற்குப் பொது ஜனங்கள் பணம் சேர்த்துக் கொடுப்பதே பொருத்தமுடையதாகும். நான் ஒருவன் மட்டிலும் கையிலிருந்து பணம் செலவிடுதல் பொருத்தமன்று. இவ்விஷயத்தைப் பற்றி நாங்கள் அடுத்த வாரம் கூடப் போகிற 'மீட்டிங்'கில் பேசித் தீர்

மானம் செய்கிறோம். அதன் பிறகு நீ பெருங்கருணையுடன் எழுந்தருள வேண்டும். இப்போது போய் வருக. வந்தே மாதரம்'' என்று மறுமொழி சொல்லியனுப்பி விடுவார்,

ஐயோ! என்ன உலகமடா, இந்த மண்ணுலகம்! ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை, ஸாரமில்லை, ஸத்துக் கிடையாது: உள்ளூரப் பூச்சியரித்துக் குழலாய் இருக்கும் வாழ்க்கை; ஒவ்வொருவனும் மற்றவன் மீது பழி கூறுகின்றான். ஒவ்வொருவனும் தன்னிஷ்டப்படி விட்டு விட்டால் எல்லாம் நேராக நடக்குமென்ற நம்பிக்கையுடனே தான் இருக்கிறான், ஆனால், ''நான் ஒருவன் சரியாக இருந்தால் போதுமா? மற்றவர்களை நம்புவதற்கிடமில்லையே'' என்று நினைக்கிறான். பிறரை நம்புவதற்கிடமில்லையென்றெண்ணி ஏமாற்றுகிறான். ஐயோ மூடா நீ ஏமாற்றுவதனால், முன்னைக் காட்டிலும் பரஸ்பர நம்பிக்கை அதிகரித்து விடுமென்று நினைக்கிறாய்? மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம். இறங்காத விஷம். இதன் பெயர் பணம்.

இப் பேய்க்கு வணங்கும்படி அவனைத் தூண்டிவிடுவது விருப்பம்; அதாவது ருசி நீங்கிய விருப்பம்; அறிவற்ற விருப்பம்; ·ருசிஸஹிதமான விருப்பமுடையோர் கந்தவர்கள். ஸத்திய லோகக் கருவி.

இன்னும் எத்தனையோ காட்சிகள் மண்ணுலகத்திலிருந்து எடுத்துக் காட்டவேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால், பயனற்ற இவ்வுலகத்தைப் பற்றி அதிகமாக விஸ்தரிப்பது பயனுடைய கார்யமாகாது என்பது கருதி இத்துடன் நிறுத்தி விடுகின்றேன்.

—ஞானரதம் என்ற நூலிலிருந்து

# 32. சீனுவிலே பிரதி நிதியாட்சி முறைமை

செப்டம்பர் 8, 1906

சீனு தேசமானது இந்தியாவைக் காட்டிலும் ஜனத் தொகையிலே பெரியது; இந்தியாவைப்போலவே மஹா புராதனமான நாகரீகம் உடையது என்ற போதிலும், கால அளவில் அது சிறிது சிறிதாக நாகரீகக்குறை வடைந்து போய் நவீன நாகரீகம் பெற்ற மேற்கு தேசத்தார்களால் சிறிதேனும் மதிக்கப் பெருத நிலைக்கு வந்துவிட்டது.

ஆனுல், ஜப்பான் மேல் திசையாருக்குப் பாடம் கற் பித்துத் கொடுத்த பிறகு கிழக்குத் திசை நாடுகள் எல்லா வற்றிற்கும் புதிய உயிர் பிறந்திருக்கிற தல்லவா? மேலும், சீனு இந்தியாவைப்போல பராதீனப்பட்ட நாடில்லை. சுயாதீன சம்பத்துடையது. ஆதலால், அது எளிதில் அபிவி ருத்தி பெறுவதைத் தடுக்க எதிரிகள் அதிகமாகவில்லை. எனவே, சீனு ஜப்பனுடைய திருஷ்டாந்தத்தால் உற்சாகம் பெற்றுத்தான் நாகரீகமடைந்து உலகத்து ஜாதியாருக்கு குள்ளே உன்னத நிலைமையடைவதற்கு மிகவும் ஆவலுடன் பிரயத்தனங்கள் செய்து வருகிறது.

(1) சேனைகள் நவீன முறைப்படி தயார் செய்யப் படுகின்றன.

(2) இளைஞர் அன்னிய தேசங்களுக்கு ராஜாங்கச் செலவில் அனுப்பப்பெற்று அன்னிய கைத்தொழில் முறைகள், நாகரீக புதுமைகள், சாஸ்த்ராபிவிருத்திகள் என்பனவற்றை பெற்றுத் திரும்புகிறுர்கள்.

(3) மேற்கூறியவர்களுக்கே நாட்டில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படுகின்றன.

(4) பெண்கல்வி அபிவிருத்தியின் பொருட்டாகச் செய்யும் முயற்சிக்கு அளவில்லை.

(5) உள்நாட்டிலேயே பல புதிய காலேஜ்களை ஏற்படுத்தி நாகரீக தேசங்களிலிருந்து தக்க நிபுணர்களைத் தருவித்துக் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது.

(6) கீழ்தர ஜனங்களுக்குள்ளேயும் கல்வி பரவும் பொருட்டாகப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. இவை போன்ற அபிவிருத்திகள் எத்தனையோ உள.

இப்போது சிறிது காலமாக ஜனப்பிரதிநிதிகளை வைத்து ஆட்சி நடத்தும் மேல்நாட்டு முறைமை அனுசரிக் வேண்டுமென்று ஆலோசனை நடைப்பெற்று வந்தது. ஜனப் பிரதிநிதிகளாலே ஜனங்கள் ஆளப்பெறுவதும், மனுஷ சுதந்திரமே தேசாபிவிருத்திக்கு இன்றியமையாத விஷயங்களென்றும் உலக சரித்திரம் நமக்கு நன்கு புலப்படுத்திவிட்டது. ஆதலால், இந்தப் பெரு விஷயத்தைப் பற்றி சீன கவர்ன்மெண்டார் கருதத் தொடங்கியது மஹா சந்தோஷ கரமான சமாசாரம். இதன்பின், சீன சக்ரவர்த்தி "தேச ஜனங்கள் பக்குவநிலை அடைந்தவுடனே" பிரதிநிதியாட்சி முறைமை ஏற்படுத்தத் தான் தயாராகயிருப்பதாக ஒரு சன்னத்துப் பிறப்பித்திருக்கிறாரென்பதாக ஓர் தகவல் கிடைத்திருக்கிறது. சுயாதீனப் பிரியர்களாகிய எல்லோர் மனதிலும் இது மகிழ்ச்சியுண்டாக்குமென்று நம்புகிறோம்.

சீனா தனது தூக்க நிலையிலிருந்து எழுந்துவிட்டதானால் பிறகு கீழ்த்திசை முழுவதும் உன்னத நிலைக்கு வந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. இது நிற்க, சீன சக்கரவர்த்தியின் சன்னத்திலே "தேச ஜனங்கள்பக்குவ நிலையடைந்தவுடனே" என்று எழுதப்பட்டிருப்பது சிறிது அபிவிருத்திக்கு இடமாயிருக்கிறது. சுயாதீனம் கொடுத்துத்தான் ஜனங்களை சுயாதீனத்துக்குத் தகுதியாக்க வேண்டும், அவர்கள் தகுதியடையும் வரை பார்த்திருந்து

பிறகு கொடுக்கலாமென்பது மூடத்தனமான யோசனை நீச்சுத் தெரிந்த பிறகுதான் தண்ணீரில் இறங்கலாமென்பது எவ்வளவு மடமை?

நன்றி: பாரதி தரிசனம்—முதற்பாகம்.

## 33. ஜப்பானுக்கு ஹிந்து உபதேசிகள் அனுப்புதல்

*நவம்பர் 10, 1906*

ஒரு மனிதருக்கேனும் ஒரு ஜாதியாருக்கேனும் ஈசுவரன் ஞானத்தைக் கொடுத்து இருப்பது இவர்களின் சொந்த அலங்காரத்தின் பொருட்டாக இல்லை; இவர்களுடைய ஞானத்தை மற்ற ஜனங்களுக்குப் பரப்பும் பொருட்டாகவேயாகும். செல்வத்தைப் பெற்றிருப்பவன் அதைப் புதைத்து வைக்காமல் மற்ற ஜனங்களுக்கும் உதவி செய்யக் கடமைப்பட்டிருப்பதைப்போலவே ஞானமுடையவனும் அதையெல்லோருக்கும் தாராளமாக வழங்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

ஹிந்து ஜாதியார் மற்றெந்த விஷயத்திலும் குறைவு பட்டிருந்த போதிலும், தத்துவ ஞான விஷயத்திலே இவர்களிடம் சில அருமையான மனோரத்தினங்களிருக்கிறதென்பதை உலகத்தார் அனைவரும் ஒரே மனத்துடன் அங்கீகரித்திருக்கிறார்கள். லோபித்தனமான நம்மவர்கள் இந்த அருமையான ஞானரத்தினங்களைப் புதைத்து வைத்துக் கொண்டிராமல் எல்லா தேசத்தார்களுக்கும் வழங்குதல் பொருந்தும். முற்காலத்தில் எல்லாம் இங்ஙனமே நடைபெற்று வந்தது. ஆனால், இந்தியா பதனமடைந்து இந்தியர்களைச் சுற்றி பலவிதமான......

சூழத் தொடங்கிய காலத்திலே இவர்கள் தாம் பரம்பரை பரம்பரையாகச் சேர்த்து வைத்த ஞானக்குவைகளை அதிகரிக்க முயற்சி பண்ணுமலும். தானும் அனுபவிக்காமலும், அன்னியர்கள் உபயோகிக்கவும் அனுமதி தராமலும் புதையல் காத்த பேய்கள்போலாகி விட்டார்கள்.

* * *

சென்ற சில வருஷங்களாக இந்தியாவிலே ஓர் புதிய எழுச்சி தோன்றியதற்கு முன்னடையாளமாக சுவாமி விவேகானந்தரும் அவரது கூட்டத்தாரும் தோன்றி உலக முழுதிற்கும் ஹிந்துமத உண்மைகளைப்பட்டினத்தார் தமது பணத்தைச் சூறை கொடுத்ததுபோல வாரியிறைக்கத் தொடங்கினுர்கள். லௌகீக இன்பங்களிலும் நாஸ்திகக் கோட்பாடுகளிலும் மூழ்கிக் கிடந்த அமெரிக்காவிலே போய் தமது "ஸர்வத் தியாக" கோட்பாடுகளையும் எல்லா வஸ்துக்களின் ஏகத்துவத்தையும், விவேகானந்த சுவாமி ராஜமேகம் போல் நின்று வருஷிக்கத் தொடங்கினுர். அவருக்கப்பாலும், சுவாமி அபேதானந்தர், திரிகுணதீதர் முதலானவர்கள் இவரது பெரும் தொழிலை முறையே நடத்திவருகிறுர்கள்.

இப்போது ஜப்பானிலே மத மாறுபாடுகள் வெகு தீவிரமாக நடந்து வருகின்றன. பழைய கன்பூஷிய மதம், சிதைவுபட்ட புத்தமார்க்கம் என்பனவற்றைக் கைவிட்டு வருகிறுர்கள். இவர்களில் சிலர் கிறிஸ்தவ மார்க்கத்திலும் சிலர் மகமதிய மார்க்கத்திலும் சார்பு காட்டி வருகின்றுர் கள்.

* * *

அவர்களுக்கு இந்தச் சமயத்தில் ஹிந்து மார்க்க உண்மைகளை உபதேசிக்க யாரேனும் பெரியோர்கள் செல்வார்களானுல் மிகவும் சிறப்பாக இருக்கும். ராமகிருஷ்ண

மடத்து சந்நியாசிகள் இவ்விஷயத்தில் சிரத்தையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அவர்களுடைய ஞானவிதைகளை ஊன்றுவதற்கு அமெரிக்காவைக் காட்டிலும், ஜப்பான் மிகவும் பக்குவமான பூமியாகும். மேலும் ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் இக்காலத்தில் பலவிதமான சம்பந்தங்களேற்படுத்துவது பலவிதமான நன்மைகள் உண்டாகக் கூடியது. ஜப்பானியர்களால் நமக்கு எத்தனையோ காரியங்கள் ஆகவேண்டி இருக்கிறது. ஜப்பானியரிடமிருந்து நாம் எத்தனையோ விஷயங்கள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஜப்பானியர்கள் நமது தேசத்தை "தேவலோகம்" என்ற பாஷையிலே வழங்கி வருகிறார்களென்பது முன்னமே சொல்லியிருக்கின்றோம். அத் தேசத்தாருக்கு நம்மிடமுள்ள மதிப்பை நாம் வளர்க்க முயற்சி புரிய வேண்டும். இவ்விஷயத்திற்குத் தக்க உபதேசிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது நமது செல்வர்களாலும் மடாதிபதிகளாலும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

நன்றி : பாரதி தரிசனம்—முதற்பாகம்.

## 34. திரான்ஸ்வால் இந்தியரின் கஷ்டம்

*டிசம்பர் 8, 1906*

ஓநாய் ஆட்டுக்குட்டிகளிருக்கும் இடத்திற்கு வந்தால் ஓநாயின் பாடு வெகு உல்லாசம்தான். ஆனால், ஓநாய்கள் இருக்குமிடத்திற்கு ஆட்டுக்குட்டி செல்லுமானால் இதன் பாடு வெகு கஷ்டம். இந்தியர்களுக்கும் வெள்ளை ஜாதியாருக்கும் இப்போதிருக்கும் சம்பந்தம் மேற்கண்ட விதமாகவே இருக்கிறது. இந்தியாவுக்கு ஒரு

ஐரோப்பியன் வந்தால் அவனுக்கு வேட்டகத்திற்கு வந்த மாப்பிள்ளைக்கு நடக்கும் உபசாரங்களெல்லாம் குறை வின்றி நடக்கின்றன. அவன் திரும்பின இடத்திலேயெல் லாம் உத்தியோகம். அவன் கால் வைத்த இடம் எல்லாம் பணம். சென்ற இடமெல்லாம் மதிப்பு. கையிலே அரைக் காசு இல்லாமல் இங்கே வந்து சேர்கிறான். திரும்ப ஊருக்குப் போகும்போது பிரபுவாகப் போகிறான். அவனுடைய தசை அப்படியிருக்கிறது. இது நிற்க,

ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட திரான்ஸ்வால், கேப் காலனி, ஆஸ்டிரேலியா முதலிய தேசங்களில் இவன் (இந்தியன்) கதி மஹா பரிதாபகரமாய் விடுகிறது. இவர் வர்த்தகம் செய்து செழிப்படையவிடுகிறதில்லை. உத்தியோ கங்களென்று மூச்சுவிடக்கூடாது. "அங்கே நடக்கக்கூடாது இங்கே வீடு கட்டக்கூடாது, தண்ணீர் சாப்பிடத் தீர்வை கொடுக்கவேண்டும், மூச்சுவிட வரி செலுத்த வேண்டும்" என்பதாக எண்ணிறந்த இடைஞ்சல்களுக்கு உட்படுத்தப் படுகிறார்கள். நமது "காருண்ய"! கவர்ன்மெண்டாரிடம் முறையிட்டுத்தொண்டை வற்றிப்போய்விட்டதேயொழிய ஒரு காசுக்குப் பயன் கிடையாது. சிறிது காலத்திற்கு முன்பு திரான்ஸ்வாலில் "ஏஷ்யாக்காரர்விதி" (Asiatic Ordinance) என்பதாக ஒரு விதியேற்படுத்தப்பட்டது. இது இந்தியர் களுக்கு வெகு அவமானமான விதி. இதை மாற்றவேண்டு மென்ற திரான்ஸ்வாலின் இந்தியர்கள் பிரதிநிதிக் கூட்ட மொன்று இங்கிலந்துக்குச்சென்று அங்குள்ள மந்திரிகளையும் ராஜதந்திரிகளையும் பிரார்த்தனை புரிந்தது. எத்தனையோ பிரயாசைக்கப்பால் இங்கிலாந்து கவர்ன்மெண்டார் ஷை விதி கொஞ்ச நாளைக்கு நிறுத்திவைக்கப்படுமென்றும், முற்றிலும் மாற்றிவிடவேண்டுமானால் அது மிகவும் யோசனை செய்து முடியவேண்டிய காரியமென்றும் சொல்லி இருக்கிறார்கள். இது என்ன அவமானம்! என்ன நிந்தை!

ஆரிய புத்திரர்களே! தூங்கிக்கொண்டா இருக்கிறீர்கள்? இந்த மானமற்ற பிழைப்பு இன்னும் எத்தனை காலம் பிழைக்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறீர்கள்!

நன்றி : பாரதி தரிசனம்—முதற்பாகம்

## 35. ரூஸ்வெல்ட் அதிபரும் ஜப்பானும்

டிசம்பர் 8, 1906

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிபராகிய மிஸ்டர் ரூஸ்வெல்ட் (தியோடார் ரூஸ்வெல்ட்) இந்த வாரத்தில் முக்கிய மந்திராலோசனை சபைக்கு (காங்கிரஸ) அனுப்பிய கடிதம் அநேக விஷயங்களில் நன்கு கவனிப்பதற்குரியது. ரூஸ்வெல்ட் அதிபர் மிகுந்த தீரத்தன்மையுடையவர். தேச ஜனங்களின் மனதிற்கு வருத்த முண்டாகுமென்பதற்காக பயந்து உண்மைகளை மறைத்துக் கூறும் வழக்கமுடைய வரல்ல. சமீபத்தில் ஸான்பிரான்சிஸ்கோவில் கவர்ன் மெண்ட் பாடசாலைகளிலிருந்து ஜப்பானியர்களை விலக்கின அநீதிகளைப்பற்றி இவர் மிகுந்த கோபத்துடன் எழுதியிருக் கின்றார்.

ஜப்பானியர்களிடம் அநாவசியமான விரோதம் பாராட்டும் அமைச்சர்களை மூர்க்கர்கள் என்றுபேசுகின்றார். ஐக்கிய நாடுகளின் மத்திய கவர்ன்மெண்டார் வெளி தேசத்தாருடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை நிபந்தனைகள் ஒவ்வொரு தனி மாகாணமும் அனுஷ்டிக்கும் படி செய்ய இப்போது விதியேற் படுத்தப்படாமலிருக் கின்றது. எனவே, ரூஸ்வெல்ட் அதிபர் ஜப்பானியர்களை விலக்காமல் அவர்களுடன் சஹோதர பாவமாக நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்பிய போதிலும், காலி ஃபோர்னியா என்னும் ஒற்றை மாகாணத்தின் கவர்ன்

மெண்டார் அதற்கிணங்க மனமில்லாமல் இருக்கின்றூர்கள். இம்மாதிரியேற்பாடாமலிருக்கும் பொருட்டு அரசு முறைமை மாற்றப்படவேண்டுமென்று ரூஸ்வெல்ட் அதிபர் அபிப்பிராயப்படுகிறூர். இந்த ஜப்பானிய விவகாரத்திலே எந்த மாகாணத்தாரும் யாதொரு அக்கிரமமும் செய்யாமலிருக்கும் பொருட்டாக தனது 'ஸிவில்' அதிகாரத்தை மட்டுமேயன்றி ராணுவ பலத்தைக் கொண்டும் வற்புறுத்தத் தயாராகயிருப்பதாக இவர் வெளியிடுகின்றூர். ஜப்பானிய விவகாரத்தை மிகவும் நுட்பமாக விவரித்துப் பேசுகின்றூர். "எல்லா தேசத்து ஜனங்களையும் சமானமாக நடத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். சரியான ஒழுக்கத்துடன் நடக்கும் அன்னியர்களுக்குள்ளே பக்ஷபாதம் காட்டுதல் மிகுந்த தாழ்ந்த நாகரீகத்தின் அடையாளமாகும். ஜப்பானியரிடம் விரோதங் காட்டுதல் அமெரிக்கர்களுக்குப் பெரிய அவமானமாகும். அதிலிருந்து மிக்க விபத்துக்கள் ஏற்படக் கூடும்" என்று ரூஸ்வெல்ட் எழுதுகின்றூர். ஜப்பானியர்களின் தீரத்தன்மையைப்பற்றியும் மிகவும் புகழ்ச்சி செய்து பேசுகின்றூர். ஸான்பிரான்ஸிஸ்கோ பூகம்பத்தில்வருந்திய ஜனங்களுக்கு ஜப்பானியர்கள் ஒரு லக்ஷம் டாலர் தரும்படி செய்த நன்றியை நினைப்பூட்டுகின்றூர். ஜப்பானியர்களை பள்ளிக்கூடங்களினின்று விலக்குதல் மஹாமூடத்தனம். அமெரிக்காவுக்கும் ஏஷியாவுக்கும் (ஆசியாவுக்கும்.) இடையே மிகுந்த வர்த்தக நட்பு ஏற்பட வேண்டும். நாம் மற்றவர்களிடம் என்னவிதமான மரியாதையையெதிர்பார்க்கிறோமோ அதை நாம் அவர்களுக்குச் செய்யத் தயாராக வேண்டும் என்கிறூர்.

இனி அமெரிக்காவை மட்டிலும் குறிப்பிட்ட சில சீர்திருத்தங்கள் அந்தக் கூட்டத்திலே காணப்படுகின்றன. வரம்புக்கு மிகுந்த திரவியம் வைத்திருப்போர்களை மிகுந்த

தீர்வைகள் சுமத்தி கூடியவரை அமுக்கி வைத்திருக்க வேண்டுமென்ற சீர்திருத்தம் இவர் நெடுங்காலம் விரும்பி வருகின்றார். அதையும் இந்தக் கடிதத்தில் வற்புறுத்துகின்றார். அமெரிக்காவில் செல்வம் வரம்புக்கு மிஞ்சி வைத்துக் கொண்டிருப்பவர்களால் பொதுஜனங்கள் எவ்விதமான பெருந்தீமைகள் விளைவதென்பதை ஆராய்ச்சி புரிவோமானால் இவர் விரும்பும் சீர்திருத்தம் அவசியமென்பது விளங்கும்.

*　　　*　　　*

ரூஸ்வெல்ட் அதிபர் எல்லா தேச ஜனங்களையும் சமமாக நடத்த வேண்டுமென்று சொல்லி இருப்பதைப் பற்றி வெகு சந்தோஷத்துடன் எழுதுவதைக் கவனிக்கும் போது இங்கிலாந்து அவ்வாறுதான் நடந்து வருகின்றதோ?

நன்றி : பாரதி தரிசனம்-முதற்பாகம்

# 36. பாரஸீக தேசத்தில் பிரதிநிதி ஆட்சி முறைமை

*மார்ச் 16, 1907*

கீழ் திசையிலுள்ள தேசத்தாருக்குக் கொடுங்கோலரசு தான் பொருந்தி வருமென்றும், ஜனப் பிரதிநிதிகள் சேர்ந்து பொதுஜன விருப்பத்திற்கிணங்க அரசாகும் முறைமை பொருந்தமாட்டாதென்றும் நம்புவது ஐரோப்பியர்களின் மூட பக்திகளிலே ஒன்று. நமக்குள்ளே கிராம பஞ்சாயத்துக்கள் இருந்ததை வெள்ளைக்காரர்கள் மறந்து விடுகிறார்கள். பூர்வத்திலே பிரதிநிதி ஆட்சி முறைமை இருந்ததா? இல்லையா? என்பதுகூட நமக்கு இப்போது முக்கிய விவகாரமில்லை. இனி நமக்கு இஷ்டமுண்டானால் அவ்வித ஜன ஆட்சி முறைமை ஏற்படுத்திக் கொள்ள

முடியுமா, முடியாதா என்பது இப்போது முக்கியமாக ஆலோசிக்க வேண்டிய விஷயம். முடியாதென்று ஐரோப்பியரின் எண்ணம். ஏனென்ருல் கீழ்திசை ஜனங்கள் தம்மைத்தாம் கவனித்துக்கொள்ள முடியாமலிருக்கும் வரை தானே ஐரோப்பியர் கீழ் திசையாரை வந்து இம்சிக்கவும், கொள்ளையிடவும் சாத்தியமாகும். ஆதலால் கீழ்திசைக்காரரின் ஜன்மஸ்வபாவத்திற்கே பொதுஜன ஆட்சி பொருத்தமில்லாத விஷயமென்று ஐரோப்பியர்கள் தாம் நம்புவதுடன், நம்மையும் நம்புமாறு பலவந்தம் செய்து வருகிருர்கள். இடையே ஜப்பான் தேசமொன்று வந்து சேர்ந்தது. ஜப்பான் தேசவாஸிகள் பிரதிநிதி ஆட்சி முறைமை ஏற்பாடு செய்துகொண்டு வெகுநேர்த்தியாக நடத்திவரத் தொடங்கிவிட்டார்கள். இதைப் பார்த்த வுடனே ஐரோப்பியர்க்கு மூஞ்சி சுருங்க ஆரம்பித்தது. ஜப்பான் மட்டும் ஏதோ விதிவிலக்காக இவ்வாறு மேம் பாடு பெற்றதேயன்றி மற்ற நாடுகளுக்கெல்லாம் அவ்விதம் நடத்திவர இயலாதென்று நமது ஐரோப்பிய நண்பர்கள் சொல்லத் தொடங்கினர்கள். சமீபத்தில், பாரஸீக (பெர்ஷியா) தேசம் பிரதிநிதியாட்சி முறைமை ஸ்தாபனம் செய்துகொண்டது. நமது ஐரோப்பிய நண்பர்களுக்கு யோசனை ஜாஸ்தியாய் விட்டது. இதென்னடா! வெள்ளை நிறமற்ற ஜனங்களிடம்கூட மனுஷபாவம் இருக்கிறது போல் தோன்றுகிறதே, என்று அவர்கள் ஆச்சரியமடைந்து வருகிருர்கள்.

* * *

என்ன செய்யலாம். பாவம்! உலகம் முழுதையும் சதாகாலத்திலும் ஐரோப்பியர்களே உன்னத நிலையிலிருந்து தம்மிஷ்டப்படி இம்சை செய்துவர முடியாதென்றே காணப்படுகின்றது!

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகை இவ்விஷயமாக சில தினங்களின் முன்பு பிரஸ்தாபம் செய்திருப்பதில் பெர்ஷியாவில் ஏற்பட்டிருக்கும் புது ஆட்சி முறைமை நிலைத்து நிற்குமா என்பதைப்பற்றி வெகு சந்தேகத்துடன் எழுதுகிறது. இப்படி இவர்கள் ஒருபுறம் விசாரமடைந்து கொண்டிருக்க, மற்றொரு புறம் கீழ்திசை நாடுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அபிவிருத்தியடைந்து கொண்டு வருகின்றன. இந்தியாகூட பிரதிநிதியாட்சி வேண்டுமென்று கேட்கிறது. சுய ஆட்சி வேண்டுமென்கிறது. சும்மா சொல்வதுமட்டுமா? சீக்கிரம் பெற்றுவிடவும் செய்யும் என்று தோன்றுகிறது. ஸர்வலோக நாயகர்களாகிய வெள்ளை ஜனங்களுக்கு இவ்வாறு அடிக்கடி துக்கங்கள் நேர்ந்து வருவதுபற்றி நாம் மிகவும் அனுதாபம் தெரிவிக்கின்றோம்.

நன்றி : பாரதி தரிசனம் —இரண்டாம்பாகம்.

## 37. துருக்கியின் நிலை

*15 நவம்பர், 1920*

துருக்கிக்கும் நேசக் கக்ஷியாருக்கும் நடந்த உடம்பாட்டைத் துருக்கி இன்னும் உறுதி செய்யவில்லை. மறுபடியும் ஒரு முறை தேசீயக் கக்ஷியாரால் துருக்கிக்குச் சற்றே ஸௌகர்யம் ஏற்படலாமென்று தோன்றுகிறது. பால்கன் யுத்த முடிவில் துருக்கி தோற்றுப் போய்விட்டது. தேசீயக் கக்ஷிக்கு விரோதமான மனிதர் துருக்கியில் ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்களுடைய கொள்கை எப்படி யிருந்த தென்றால் :— உள்நாட்டில் தேசீயக் கக்ஷியாரின் சக்தியைக் குறைக்கும் பொருட்டு, அன்னியரின் உதவி பெற்று அதனால் அந்த அன்னியர்கள் நம்மைக்குதிரை யேறக்கூடிய நிலைமை

ஏற்பட்டாலும் பெரிதில்லை; நாட்டை அன்னியர் கொண்டு போனாலும் போகுக; ஆனால் தேசியக் கக்ஷியார் ஆளக் கூடாது. இங்ஙனம் கருதும் மனிதர் செய்துகொண்ட உடம்பாடு எப்படி யிருக்கும்! மேலும், லண்டன் நகரத்தில் பால்கன் தேசத்தார்களுக்கும் துருக்கிக்கும் உடம்பாடு கையெழுத்திடப்பட்டது. அதில், மற்ற நிபந்தனைகளுடன், அட்ரியாநோபிள் ஜில்லாவைத் துருக்கி விட்டுவிட வேண்டு மென்ற நிபந்தனையும் சேர்ந்திருந்தது. அக்காலத்தில், அன்வர்பாஷா முதலிய தேசீயக் கக்ஷித் தலைவர்கள் துணி வாகவும் தைரியமாகவும் வேலை செய்தபடியால் துருக்கிக்கு அட்ரியா நோபிள் நஷ்டமாகாமல் மிஞ்சிற்று. திடீரென்று அன்வர்பாஷா முன்னிருந்த கோழை மந்திரிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதிகாரத்தைக் கைவசப் படுத்திக்கொண்டு, அட்ரியா நோபிலை இழக்கப் போவதில்லை யென்று தெரிவித்துவிட்டார். இதற்குள், பால்கன் தேசங்கள் ஒன்றுக்கொன்று போராடத் தொடங்கித் தங்கள் மனஸ் தாபங்களைத் தீர்ப்பதற்குப் பிறர் மத்யஸ்தத்தை வேண்டக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டபடியால் அவற்றால் துருக்கியை வற்புறுத்த முடியவில்லை. ஆனால், "லண்டன் உடம்பாட்டை நாங்களன்றோ கூட இருந்து முடித்து வைத்தோம்? அப்படியிருக்க அவ்வுடம்பாட்டுக்கு மாறாக அட்ரியா நோபிள் துருக்கி வசத்திலிருப்பதை நாங்கள் அங்கீகாரம் செய்யமாட்டோம்" என்று ஆங்கில மந்திரிகள் சொன்னார்கள். அதற்கு அன்பர்பாஷா :— "தங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ள லாம். ஆனால் அட்ரியா நோபிலைக் கொடுக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டார். ஒன்றும் நடக்கவில்லை. துருக்கிக்கு அட்ரியா நோபிள் மிஞ்சிற்று. அதுபோல் இப்போது ஆசியா மைனரிலுள்ள அனடோலியாவின் ராஜதானியாகிய அங்கோரா நகரத்தில் கமால்பாஷா

தேசீயக் கக்ஷிப் படைகளேயும், தக்க உபபலங்களேயும் வைத்துக்கொண்டு கான்ஸ்டாண்டிநோபிள் நகரத்தி லுள்ள துருக்கிய அதிகாரிகளிடம் த்ரேஸ், ஸ்மர்ஞ மாகாணங்களே இழந்துவிடாமல் இருக்கும்படி வற்புறுத்தி வருகிருர். இப்போது ஸெவர் உடம்பாட்டை உறுதி செய்யுமாறு நேசக் கக்ஷியார் வற்புறுத்தியதற்குத் உத்திர மாகத் துருக்கி கவர்மெண்டார் அவ்விஷயம் இப்போது அத்தனே அவஸரமில்லேயென்று கமால் பாஷாவின் கூட்டத் தாரை ஸமாதானப்படுத்தும் பொருட்டாக அதைச் சற்று மெதுவாகவே கவனிக்கும்படி நேர்கிறதென்றும் தெரிவித் திருக்கிருர்கள். நேசக் கக்ஷியாருக்குள்ளேயே ஸமாதான நிபந்தனேகளேப் பற்றிய பூர்ண மன வொற்றுமையில்லாம லிருப்பதை யறிந்தே துருக்கிய அதிகாரிகளுக்கு இங்ஙனம் சொல்ல தைர்யம் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று நினேக் கிருேம். ஜெர்மனி விஷயத்திலேயே பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் மேன்மேலும் அபிப்பிராய பேதங்கள் தோன்றி வருகின்றன. அமெரிக்காவோ சொல்ல வேண்டியதில்லே; "இங்கிலாந்தினிடம் எனக்கு விரோதம் கிடையாது" என்று அமெரிக்காவின் புதிய ஜனுதிபதியாக நியமனம் பெற்றிருக்கும் ஹார்டிங் என்பவர் சொல்லு கிருர். நம்முடைய பிராண ஸ்நேஹிதனுக உயிர்த்துணே யாக இருந்த ஒருவன் இப்போது நமக்கும் தனக்கும் விரோதமில்லே யென்று சொல்ல நேர்ந்தால் முன் இருந்த ஸ்நேஹ நிலே எத்தனே தூரம் குறைந்து போய்விட்ட தென்பது சொல்லாமலே விளங்கும். இத்தாலியோ மிகவும் அபாயகரமான உள்நாட்டுக் குழப்பத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்த நிலேயில் தாமேன் தமது கழுத்திலே அவசரமாகச் சுருக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று துருக்கி நினேத்தே இங்ஙனம் வாயிதா போடுகிற தென்று தோன்றுகிறது. ஆனுல் இங்ஙனம் துருக்கி

கொடுத்த உத்தரத்தில் நேசச் கக்ஷியாருக்குக் கோப முண்டாய் அவர்கள் இதுவரை துருக்கி ராஜாங்கப் பொக்கிஷத்துக்குச் செய்துகொண்டு வந்த பண உதவியைக் குறைத்துவிடப் போகிறார்களென்றும், அதன் மேலும் துருக்கி சரிப்பட்டு வராவிட்டால் இறுதிச் சீட்டுப் பிறப் பிக்க நேருமென்றும் நேற்று கிடைத்த ராய்ட்டர் தந்தி யொன்று சொல்லுகிறது. இதினின்றும், துருக்கி மந்திரி கள் என்ன விதமான செய்கையை மேற்கொள்வார் களென்பது தெரியவில்லை.

ஆனால், நேசக் கக்ஷியாரின் இறுதிச் சீட்டு (எங்கள் வார்த்தையை அங்கீகாரம் செய்யாவிட்டால் யுத்தந் தொடங்குவோமென்ற சீட்டு) துருக்கியரை நடு நடுங்கச் செய்துவிடுமென்று தோன்றவில்லை.

— *சில குறிப்புகள் என்ற கட்டுரைப் பகுதி-பாரதி தமிழ்*

## 38. பாரஸீகத்துக்கு ஸௌக்ய காலம்

*19 நவம்பர் 1920*

பாரஸீகத்திலுள்ள ப்ரிடிஷ் துருப்புகள். இந்தியத் துருப்புகள் முழுவதையும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் அங்கிருந்து மீண்டு வரும்படி கட்டளை பிறப்பித்து விட் டார்களென்று ஸமீபத்தில் வந்த லண்டன் தந்தி யொன்றினால் விளங்குகிறது. இதுபோலவே, மெஸபடோ மியாவில் ப்ரிடிஷரால் அமைக்கப்பட்டு வரும் அராபிய ஆட்சியின் வசம் அந்நாட்டை ஒப்புவிப்பதாகிய நோக்கத் துடன் அங்குள்ள இந்திய, பிரிடிஷ் ஸைந்யங்களையும் மிகவும் குறைத்து விடும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. சிறிது காலத்தின் முன்புகூட வட மேற்குப் பாரஸீகத்திலிருந்து போல்ஷ்விக்களைத்

துரத்தும் பொருட்டாக ப்ரிடிஷ் படைகள் உபயோகப் படுத்தப் பட்டனவென்று இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்ட அறிக்கையிலிருந்து லண்டன் "டைம்ஸ்" முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கோபமுண்டு அவை ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரைக் கண்டித்தெழுகின்றன. "அந்த அறிக்கை உண்மையா, பொய்யா? பொய்யானல் அதனை உடனே ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் மறுக்க வேண்டும். அதனை வெளியிட்டது பற்றி இந்தியா கவர்ன் மெண்டாரைக் கண்டிக்கவும் வேண்டும்" என்று லண்டன் "டைம்ஸ்" சொல்லுகிறது, எது எப்படியாயினும், பாரஸீ கத்திற்கு இவ்விஷயம் பெரியதோர் நிவர்த்தியாகவே கருதத் தக்கது. ஆரம்பத்தில் இதனல் பாரஸீகத்துக்கு அன்னியர்களிடமிருந்து இடையூறுகளும், கஷ்டங்களும் நேரிடலாம். எனினும், காலக்கிரமத்தில், இதினின்றும் பாரஸீகத்துக்கு வயிற்றுப் பூச்சி வெளியேறியதால் மனித னுக்கு நலமேற்படுதல் போல முற்றிலும் நன்மைதானேற் படுமென்பது எனக்கு நிச்சயம்.

*விநோதத் திரட்டு என்ற கட்டுரைப் பகுதி—பாரதி தமிழ்*

# 39. ஐர்லாந்துக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்க மாட்டோம்

*19 நவம்பர் 1920*

இந்த மாதிரி தர்ம ஸமாசாரங்களைக் கொஞ்சம் மறை பொருளாக மூடின பாஷையில் சற்றே இரண்டர்த்தம் தோன்றும்படியாகப் பேசுவது இதுவரை மிஸ்டர் வாய்ட் ஜ்யார்ஜ் போன்ற "ராடிகல்" (வேர்த்திருந்த) ராஜ தந்திரி களின் வழக்கமாக இருந்தது. அதிலும், அமெரிக்கா விடம் யுத்த மையத்தில் ஏராளமாகப் பணம் கடன்

வாங்க வேண்டியிருந்தபடியாலும், மற்றபடி ஆஹார வஸ்துக்கள், ஸேனைக்கு வேண்டிய பண்டங்கள், மனித பலம் முதலிய வேறு பல உதவிகளும் அவசியமாக இருந்த படியாலும், விடுதலை விஷயத்தில் ஏராளமான பக்தி, ஆவேசம் காட்டுவதும், விடுதலை மறுப்புக் கொள்கைகளை மிகவும் ஜாக்கிரதையான, இரண்டு பொருளுடைய மொழி களில் மறைத்துச் சொல்வதும் ஆங்கில மந்திரிகளுக்கு அவஸரமாகவும் இன்றியமையாதன ஆகவும் ஏற்பட்டன. இப்போது சண்டை முடிந்துவிட்டது, அமெரிக்கா மேலே கடன் கொடுக்கக்கூடிய மனமில்லாது போய்விட்டது. மல்லாமல் ஜெர்மானியருக்காக ஓதப்பட்ட தர்ம ஸூத் ரங்களையெல்லாம் இங்கிலாந்தும் அனுஸரித்து ஐர்லாந் துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்க வேண்டுமென்று பல அமெரிக்கத் தலைவர் வற்புறுத்துகிறார்கள். கடன் கொடுக் கவும் மாட்டோம். நம் கீழேயிருக்கும் தேசத்தை வேறு வெட்டிட வேண்டுமென்று வற்புறுத்த வருவானும். தர்ம ஸூத்ரங்களாம்! தர்ம ஸூத்ரங்கள் நம்முடைய எதிரிகளிடமுள்ள குற்றங்களை உலகத்தாருக் கெடுத்துக் காட்டுவதற்கு உதவியாகப் பாதிரிகளாலும் பண்டிதர் களாலும் அமைக்கப்பட்டன. நாம் செய்யும் அநியாயங்கள் நம்முடைய ஸௌகர்யத்துக்கு அவசியமானவை. ஸௌகர் யத்தைக் குறைத்துக் கொண்டு தர்ம ஸூத்ரங்களைக் கவனிப்பது நமக்குப் பொருந்தாது. இங்ஙனம் பர்யா லோசனை செய்து ஆங்கிலேய மந்திரிகள் விடுதலை மறுப்பு விஷயத்தை முன்போல் இன்பமான பாஷையால் மறைத்து வைக்கும் சடங்கைக்கூடக் கைவிட்டு முரட்டு பாஷையில் கெட்டியாக ஐர்லாந்துக்கு விடுதலை கிடையாதென்று ஸாதிக்கத் தொடங்கி விட்டார்கள். ஐர்லாந்து விஷயமான ரஸமிகுந்த லண்டன் ராய்ட்டர் தந்தியொன்று நேற்று வந்தது. அதன் விவரமான வடிவத்தை நேற்றைய

மித்திரன் தந்திப் பக்கங்களிலே காணலாம். மிஸ்டர் ஆஸ்க்வித் (மாஜி ப்ரதம மந்திரி) இங்கிலாந்துக்கு ராணுவ விபத்துக்கள் ஏற்படாதபடி தடைகளேற்படுத்திக் கொண்டு மற்றப்படி ஸம்பூர்ணமான ஸ்வராஜ்யம் கொடுக்கவேண்டு மென்று பார்லிமெண்ட் ஸபையில் சொன்னர்.

எழுந்தார் லாய்ட் ஜ்யார்ஜ் மந்திரி. கத்தியைச் சுற்றத் தொடங்கிவிட்டார். மெய்யான உருக்குக் கத்தியன்று; பாஷைக் கத்தி; வாக்கு வாள். ஐர்லாந்துக்கு ஸ்வாதீனம் கொடுத்த பிறகும்கூட பழைய புண்களை மறந்து ஐர்லாந்து இங்கிலாந்திடம் நட்புச் செலுத்துமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் நம்பவில்லை. அவரால் நம்ப முடியவில்லை. குற்றமுள்ள நெஞ்சு குறு குறு குறு குறு என்னுமாம். அவருடைய இனத்தார் பண்ணிய பிழைகளெல்லாம் அவருக்குத் தெரியாதா? எனினும், ஆங்கிலேயர் தம்மைப் போலே பிறரையும் நினைத்து ஸித்தாந்தங்கள் ஏற்படுத்துவது தவறென்றும் ஐரிஷ் ஜாதியாருடைய சரித்திரத்தை நோக்குமிடத்தே, அவர்கள் நெடுங்காலமாகக்கஷ்டப்பட்டு பரிசுத்தமடைந்த கூட்டத்தாராதலால், அவர்களுடைய மனம் கல்மனதாக இராமல் நன்ருகக் குழைந்து, பக்குவப்பட்டு, தெய்வபக்திக்கு வசப்படுவதாகச் சமைந்திருத்தல் விளங்குகிறதென்றும், ஆதலால், ஐர்லாந்து தனக்கு ஸ்வாதீனம் கிடைத்தால், விரைவிலே இங்கிலாந்தின் பழைய பிழைகளை மறந்து, இங்கிலாந்துடன் உண்மையான நட்புப் பாராட்டியே வருமென்றும் நான் நினைக்கிறேன். ஐர்லாந்துக்கு ஸ்வாதீனம் கொடுத்ததால், அந்நாட்டிற்கும், இங்கிலாந்துக்கும் கேடு சூழும் பிற நாடுகளுக்கும் அஃதோர் தூண்டுதலாகுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிருர். ஐரிஷ் துறைமுகங்களின் பரிபாலனம் இங்கிலாந்தின் கையின்றும் நழுவுமாயின் அதனல் இங்கிலாந்தின் ராணுவ சக்திக்கு பங்கம் நேருமென்ருர். அங்ஙனம் நேரும்படி

செய்யக்கூடிய எந்த ஏற்பாட்டையும் இங்கிலாந்து அங்கீ கிரிக்க முடியாதென்கிறுர்.

மற்றக் குடியரசு நாடுகளுக்குள்ள ஸ்தாபனம் ஐர்லாந் துக்குக் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் வாயிஞல் சொல்லிய போதிலும், அவருடைய உட்கருத்து அப்படியில்லையென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எடுத்துக் காட்டுகிருர். ஏனென்ருல், ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுப்பதில் கடற் சண்டைத் தயாரிப்புக் களுக்கு ஸ்தலங்களாகக் கூடிய துறைமுகங்களின் மேற் பார்வை ப்ரிட்ஷ் கவர்ன்மெண்டாரிடம் வைத்துக் கொள் ளலாமென்று மிஸ்டர் ஆஸ்க்வித் சொல்லுகிருர். அப்படி யாஞல், கானடா, ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற அரசுகளின் ஸ்தானத்தை ஐர்லாந்துக்குக் கொடுப்பதாக மாட்டாது ஏனென்ருல், கானடா, ஆஸ்திரேலியா முதலிய குடியேற்ற நாடுகள் தம் துறைமுகங்களின்மீது பரிபூர்ண மான, வகுக்கப்படாத, தனியதிகராம் செலுத்தி வருகின்றன.

மேலும், 1918—ஆம் வருஷத்தில் ஐர்லாந்து தேசத்து "ஸின்பீன்" கக்ஷியார் ஜெர்மனியுடன் கலந்து ப்ரிட்டிஷ் அரசாட்சிக்கு விரோதமாக நடத்திய சூழ்ச்சியைப்பற்றிய அறிக்கை யொன்று சீக்கிரத்தில் ஸர்க்காரால் ப்ரசுரம் செய்யப்படுமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவித் தார்.

ஐர்லாந்து தேசத்துக் கடல் துறைகள் ப்ரிட்டனுக்கு எத்தனை விபத்தாக மாற்றத்தக்கன வென்பதும், ஸின்பீன்கள் அவற்றை எங்ஙனம் பயன்படுத்திச் சதி யாலோசனை நடத்திஞர்களென்பதும், அவர்கள் அங்ஙனம் பயன் படுத்த முடியாமற்போயினதெப்படி யென்பதும், அவர்கள் இங்கிலாந்து தன் கைக்குள் இறுகப் பிடித்துக்

கொண்டிராவிட்டால் இன்னும் அப்படியே வேலை செய்வார்களென்பதும் ஸர்க்கார் ப்ரசுரம் செய்யப் போகிற அறிக்கையில் நன்ருக விளங்குமாம். ஆதலால், ஐர்லாந்தை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் கைப்பிடியை நெகிழ விடப் போவதில்லையென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுகிருர்.

இங்கு,

"மீ தெழும் மொக்குளன்ன யாக்கையை விடுவ
தல்லால்
சீதையை விடுவதுண்டோ, இருபது திண்தோள்
உண்டா(க)?"

(நீர் மீதெழும் குமிழி போன்ற இந்த சரீரத்தை விட்டாலும் விடுவேனேயல்லாமல், என் உறுதியான தோள் இருபது மிருக்கையிலே, நான் ஸீதையை விடுவேனென்று நினைக்கவுஞ் செய்யலாமோ?)

என்று ராவணன் சொல்லியதாகக் கம்பர் எழுதியிருக்கிற வரிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. ராவணனுடைய கதி மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் வரக்கூடாதென்று நான் மனப்பூர்வமாகக் கடவுளை வேண்டுகிறேன். ஐர்லாந்து தன் கடற்படையையும் நிலப்படையையும் தன் இஷ்டப்படி சமைத்து நடத்துவதென்ற அம்சம் சேர்ந்த எந்த ஏற்பாட்டையும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டார் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொள்ள முடியாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தெரிவிக்கிருர். இந்த விஷயத்தை ஐயந்திரிபற, மிகத் தெளிவாக, எல்லோரும் உணரும்படி அழுத்திச் சொல்ல விரும்புவதாவும் அவர் தெரிவிக்கிருர். எந்தக் காலத்துக்குமா? அதாவது, யுகாந்தம் வரைக்குமா? உலக முடிவு வரை, எப்போதுமே ஐர்லாந்துக்குத் தன் இஷ்டப்படி படை சமைத்துப் பராமரிப்பதாகிய, மற்றக் குடியேற்ற

நாடுகளுக்குள்ள உரிமை கிடைக்கக் கூடாதென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லுவது எனக்கு ஒரு பக்கத்தில் வருத்தத்தையும் மற்றொரு பக்கத்தில் நகைப்பையும் விளைவிக்கிறது. விரைவில் ஐர்லாந்தின் விஷயத்துக்கு ஒரு முடிவேற்பட வழியில்லாமலிருப்பது பற்றி வருத்தமும், இப்படிப்பட்ட மந்திரிகள் வசம் இங்கிலாந்து அகப்பட்டுக் கொண்டு தாழ்வடைகிறதென்று வருத்தமும், மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் உலக முடிவுவரை ஐர்லாந்தை அடிமைப் படுத்தி ஆள முடியுமென்று நம்புவதை எண்ணுமிடத்தே பெரு நகைப்பும் தோன்றுகின்றன. இரும்புருளையா, நம் இஷ்டமான வரை நமது காலடியிலே போட்டிருப்பதற்கு! மனிதர் கூட்டமன்றோ? உலகமெங்கும் ஸமத்வ ஞானத்தை வற்புறுத்துவதாகிய கல்வித் தீ ஓங்கிக்கொண்டிருக்கையில் ஒரு கூட்டத்தார் மற்றொரு பிரமாண்டமான லக்ஷக்கணக்கான ஜனக் கூட்டத்தை எத்தனை காலம் தாழ்ந்த நிலையிலே அமுத்தி வைத்துக் கொண்டிருத்தல் ஸாத்யப் படும்?

குடியேற்ற நாடுகளைப் போன்ற ஸ்தானம் ஐர்லாந்துக்குக் கொடுத்தால் உடனே மிகவும் எளிதாக, ஆறு லக்ஷத்துக்குக் மேல் ஏழு லக்ஷம் வரை கட்டாய ராணுவ ஸேவகம் விதித்து ஐர்லாந்தியர் பெரிய ஸேனை அமைத்துக் கொள்வார்களென்றும், அதினின்றும் இங்கிலாந்திலும் காட்டாய ராணுவ ஸேவகம் விதிக்க நேருமென்பதைத் தொழிற் கக்ஷியார் உணர்ந்துகொள்ள வேண்டுமென்றும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் எச்சரித்தார். இதில், மிகவும் ரஸமான உபகதை யொன்று கிளைக்கிறது. அதாவது, கட்டாய ஸேவகம் வருமென்று பயமுறுத்துவதில் மிஸ்டர் லாயட் ஜ்யார்ஜ் தொழிற்கக்ஷியாரிடையே மட்டும் பெயர் குறிப்பிட்டுப் பேசியதன் நியாயமென்ன? ஐர்லாந்துக்கு விடுதலை வேண்டுமென்பதில் அனுதாப முடையோர்

இங்கிலாந்தில் தொழிற் கக்ஷியாரிடையே மாத்திரந்தானு இருக்கிறுர்கள்? மற்றக் கக்ஷியாரிடையே கிடையாதா? திருஷ்டாந்தமாக, ஸர்க்கார் உத்யோகம் கிடைக்கும் வரை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே, ஐர்லாந்தின் விடுதலைக் காக மனமுருகிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கவில்லையா? எனவே, தொழிற் கக்ஷியாரைப் பெயர் சொல்லிக் குறிப் பிட்டதன் காரணம் யாதென்ருல் கட்டாய ராணுவ லேவகம் சட்டமாகும் பக்ஷத்தில் அது மற்ற திரவிய வந்தர், வியாபாரிகள், உபாத்தியாயர் மந்திரிகள் முதலிய வகுப்பினரைத் தீண்டுவதைத் காட்டிலும் ஏழைத் தொழிலாளிகளேயே அதிகமாகத் தீண்டுமென்ற விஷயம் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜின் மனதிலிருந்து, அது அவரை மீறியே, வேருெரு விஷயத்தைப் பற்றிப் பேசுகையில், அவர் நாவிற்கு வந்துவிட்டது. இது நிற்க ஐர்லாந்தின் விஷயமாக மந்திரி லாய்ட் ஜ்யார்ஜ் சொல்லும் விஷயங் களே மீண்டும் கவனிப்போம்.

மேலும், ஐர்லாந்திலேயே, (ப்ராட்டஸ்டெண்ட்) வர்க்கத்தாரின் தொகையும் செல்வாக்கும் மிகுதிப்பட்டது இங்கிலீஷ் ஆட்சிக்குச் சார்பாக நின்று பொது ஐரிஷ் விடுதலையை எதிர்ப்பதுவுமாகிய அல்ஸ்டர் மாகாணத்தை அதன் ஸம்மதத்துக்கு மாருக எந்தப் பார்லிமெண்டுக்கும் (அதாவது, ஐரிஷ் பார்லிமெண்டுக்கு) உட்படுத்துவதாக உத்தேசங் கிடையாதென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அழுத்திக் கூறிஞர். அல்ஸ்டர் மாகாணத்துக்குத் தனிப் பார்லிமெண்ட் கொடுப்பதே, ஒற்றுமையை நிலை நிறுத்து வதற்குத் தக்க உபாயமென்று தெரிவித்தார். எந்த ஒற்றுமையை? ஐரிஷ் ஒற்றுமையையா? ஒரு தேசத்துக்கு இரண்டு பார்லிமெண்ட் கொடுத்து, அந்த தேசத்தை ஒற்றுமைப்படுத்துவது விநோதமான வழிதான். லண்டனில் ஒரு பார்லிமெண்ட், மான்செஸ்டரில் ஒரு

பார்லிமெண்ட் வைத்து இங்கிலீஸ் ஒற்றுமையை அதிகப் படுத்தலாமென்ற யோசனையை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் அங்கீகாரம் செய்வாரா? ஐரிஷ் சுங்கத் தீர்வையும் வருமான வரியும் ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரின் ஆதிக் கத்தின் கீழேதான் வைத்துக்கொள்ளப் போகிறார்களாம். அதுவும் இன்றியமையாததுதானென்பதற்கு மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஏதேதோ நொண்டி முகாந்தரம் சொல்லு கிறார்.

இந்தக் கொள்கைகளுடனே இவர்கள் செய்யப் போகிற ஸ்வராஜ்யச் சட்டத்தை ஐர்லாந்துவாஸிகள் தடி முனையாலேகூடத் தீண்டமாட்டார்கள். இதை ஐர்லாந்தில் யாரும்சிறிதேனும் அங்கீகாரம் செய்துகொள்ள மாட்டார் களென்பதை மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் தாமே அங்கீகரிக் கிறார். அங்ஙனம் அவர் அங்கீகாரம் புரிந்தும், அவரும் அவருடைய கூட்டத்தாரும் பார்லிமெண்டில் ஸ்வராஜ்ய மசோதா வொன்றைக் கொண்டு விட்டுக்கொண்டு, முதல் வாதம், இரண்டாம் வாதம் முதலிய விளையாட்டுக்களில் ஏன் வீணாக நேரத்தைச் செலவிடுகிறார்களென்ற விஷயம் எனக்கர்த்தமாகவில்லை. ஒரு வேளை ஒரு நிஷ்ப்ரயோஜனச் சட்டத்தை மிகவும் படாடோபங்களுடன் செய்து முடித்துக் கையில் வைத்துக்கொண்டே— "நாங்களென்ன செய்வோம்? ஐர்லாந்துக்கு ஸ்வராஜ்யம் கொடுக்கப் போனோம். அவர்கள் வாங்கிக்கொள்ள மறுக்கிறார்கள். எனவே, எங்கள் பொறுப்புக் கழிந்தது" என்று சொல்லித் தங்கள் மனஸாக்ஷிக்கும் அமெரிக்கர் முதலியவர்களின் கூக்குரலுக்கும் ஒரு கழிப்புக் கழித்துவிடலாமென்று மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜும் அவருடைய நண்பர்களும் நினைப்பதாகத் தோன்றுகிறது.

ஆனால், இங்ஙனம் நாடகம் காட்டுவதிலிருந்து ஐர்லாந்து வாஸிகள் ஸமாதான மெய்த மாட்டார்களென்

பதையும், ஐர்லாந்தில் ஸமாதான மேற்படும் வரை இங்கிலாந்திற்கு ஸமாதானம் ஏற்பட வழியில்லை யென்பதையும் மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜ் ஒருங்கே மறந்து விட்டது பற்றி வருத்தப்படுகிறேன்.

*— ரஸத்திரட்டு என்ற கட்டுரை— பாரதி தமிழ்*

# 40. நாகரீகத்தின் ஊற்று

*4 பிப்ரவரி 1921*

ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரி ஸ்தானத்திலிருந்தவராகிய ஸ்ரீமான் க்ளெமான்ஸோ சில தினங்களாக இந்தியாவில் ஸஞ்சாரம் பண்ணி வரும் செய்தி நம் நேயர்களுக்குத் தெரிந்ததேயாம். இவருக்குச் சில நாட்களின் முன்னே பம்பாயில் நடந்த விருந்தின்போது இவர் செய்த ப்ரஸங்கத்தில் பின்வரும் ஸார மயமான வாக்யம் காணப்படுகிறது :—

"ப்ரான்ஸிற்காக இரத்தம் சிந்திய மக்களைப் பெற்ற தேசத்தை வந்து பார்த்தது எனக்குப் பெருமையுண்டாக்குகிறது. ப்ரெஞ்ச் குடும்பங்களுடன் இந்திய சிப்பாய்களிருந்த போது நான் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மரியாதையும்அன்பும் ப்ரான்ஸ் தேசத்தாரை மோஹிக்கும்படி செய்தன. கீழ்த்திசையானது நாகரிகத்தில் குறைந்ததன்று. அன்பு மானுஷீகம் என்பவற்றிற்குரிய மஹோந்நத லக்ஷ்யங்களெல்லாம் கீழ்த்திசையிலிருந்து வந்தன. மேற்குத் திசையார் அவற்றை ஸ்வீகரித்துத் தம்முடைய லக்ஷ்யங்களாகச் செய்துகொண்டனர். எனவே, உங்களைக் காட்டிலும் உயர்ந்த நாகரிகத்தின் ப்ரதிநிதியாக என்னை மதித்து நான் உங்களோடு பேசவில்லை. (இந்தியாவாகிய)

நாகரிகத்தின் ஊற்றை நோக்கி நீஞ்சி வந்தவனுக என்னை மதிக்கிறேன்'' என்ருர்.

இவர் யார்? ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரியாக இருந்து அதி ஸமீப காலத்தில் விலகியவர். வெறும் இலக்கியப் படிப்புமட்டும் உடையவரல்லர். மிகவும் பழுத்த லௌகிகத் தேர்ச்சியும், ஐரோப்பிய ராஜ்தந்த்ரத்தில் மஹாகீர்த்தி வாய்ந்த நிபுணத் தன்மையு முடையவர். இவரே பத்து வருஷங்களுக்கு முந்தி இவ்விதமாகப் பேசியிருக்கமாட்டார். இரண்டு வருஷங்களுக்கு முன் இப்படிப் பேசியிருக்க மாட்டார் நினைத்துக்கூட இருக்கமாட்டார். ஐரோப்பிய நாகரிகமே மேம்பட்டதென்று நினைத்திருப்பார். இன்றைக்கு இந்தியாவை வந்து கூடியவரை நிஷ்பக்ஷபாதமான, தெளிந்த விழிகளுடன் பார்க்கும் போது, இந்த எண்ணம் இவர்மீது வற்புறுத்தப்படுகிறது. இவருடைய வசனத்தை நன்ருக ஊன்றிப் படிக்கும்படி நம்மவர்களை வேண்டுகிறேன். இவர் என்ன சொல்லுகிருர்? ஐரோப்பிய நாகரிகத்தின் பரம லக்ஷ்யங்கள் அவர்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றக் கருதும் தர்மங்கள், ஐரோப்பாவுக்கு சொந்தமல்ல வென்றும் அவை கீழ்த்திசையிலிருந்தே கிடைத்தன வென்றும் சொல்லுகிருர். நாமே ஐரோப்பாவுக்கு லக்ஷ்ய தானம் செய்தோமென்றும் நம் முதவியின்றி அவர்கள் இன்னும் பச்சை குத்திய நிர்வாண மான காட்டு ஜனங்களாகவே யிருந்திருப்பார்களென்றும் அங்கீகரித்துக் கொள்ளுகிருர். ஆசியாவிலிருந்து நாகரிகம் ஐரோப்பாவுக்குச் சென்றது. ஆசியாவின் நாகரிகத்துக்கு மூல ஸ்தானம் நமது பாரத வர்ஷம். ஆனுல் முற்காலத்தில் நாம் எத்தனை உயர்ந்த நிலைமையிலிருந்து உலகத்திற்கு எத்தனை அரிய நலங்கள் செய்தபோதிலும் இப்போது நாம் சரியான நிலைமையிலில்லாதிருப்போமானுல் நமதுபண்டைக் காலப் பெருமை யாருக்கும் நினைப்பிராது. இன்று மீண்டும்

நமது தேசம் அபூர்வமான ஞானத்திகழ்ச்சியும் சக்திப் பெருக்கமும் உடையதாய்த் தலைதூக்கி நிற்பதே நமது பெருமையைக் குறித்து ஸ்ரீமான் க்ளெமான்ஸோ முதலியவர்கள் மேலே காட்டியபடி பூஷித்துப் பேசக் காரணமாகிறது. எனினும் நாம் உலகத்திற்குப் புது வழி காட்டத் தகுதியுடையோமென்பதை ருஜுப்படுத்தி யிருக்கிறோமே யன்றி இன்னும் அந்த ஸ்தானத்தில் நாம் உறுதிபெற வில்லை. "மேற்குத் திசையிலிருப்பதுபோலவே இங்கும் மனிதர், பரஸ்பரம் அன்பு செலுத்தும்படி விதித்த கடவுளின் கட்டளையை மறந்து, ஒருவருக்கொருவர் விரோதிப்பதையும் கொலை புரிவதையும் கண்டு நான் வ்யஸனப் படுகிறேன்" என்று ஸ்ரீ க்ளெமான்ஸோவே சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த ஸமயத்தில் இந்தியாவில் பரவிவரும் ஸாத்விக தர்மக் காற்றை சுவாஸியாம லிருப்பாரானால், ஸ்ரீ க்ளெமான்ஸோவின் வாக்கில் இந்த வார்த்தை உதித்தே யிராதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இப்போது ஸ்ரீ க்ளெமான்ஸோ பாரீஸ் நகரத்திலிருந்தால் அங்கு மறுபடி வீசி வரும் ஜெர்மானிய விரோதக் காற்று இவரையும் தாக்கி, இவருடைய புத்தி ஸாத்விக நெறிகளிலே செல்ல இடங் கொடுத்திராது. எனவே, இந்தியா அன்பு நெறியால் வலிமை யோங்கி உலகை நடத்த வேண்டுமென்ற கொள்கையை ஆதரிக்கத் தொடங்கிவிட்டது. இந்த ஆசாரத்தின் ஆரம்பக் கலைகளே மிகவும் ஆச்சர்யமாக, உலகத்தாரெல்லாருங் கண்டு வியக்கும்படி யிருக்கின்றன. இனி இக் கொள்கை இந்தியாவில் மக்களுக்குள்ளே எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் பூர்ணமாக ஸதாபிக்கப்பட்டு விளங்கும் காலத்தைக் கடவுள் விரைவிலே அருள் செய்வாராகுக.

— காலவிளக்கு என்ற கட்டுரைப் பகுதி—பாரதி தமிழ்

# 41. கிரேக்க தேசத்தின் ஸ்திதி

*19 நவம்பர் 1920*

கிரேக்க தேசத்து ஜனங்கள் சமீபத்தில் நடந்த "எலெக்ஷன்"களில் வாக்குக் கொடுத்திருக்கும் மாதிரியைப் பார்க்கையிலே அவர்கள் முன்னிருந்த கான்ஸ்டன்டைன் ராஜாவே திரும்பப் பட்டத்துக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார்களென்பது நிச்சயமாகத் தெரிகிறது. இந்தக் கான்ஸ்டன்டைன் ராஜா கெய்ஸர் சக்ரவர்த்தியின் ஸஹோதரிக்குக் கணவரென்பதையும், யுத்த காலத்தில் கெய்ஸருக்கனுகூலமாக இருந்தா ரென்பதையும் கருதி, முன்னர் அவரை ராஜ பதவியினின்றும் தள்ளியவர்களாகிய இங்கிலாந்து முதலிய நேசக் கக்ஷியார் அவர் மீளவும் கிரேக்க தேசத்து ராஜாவாகக் கூடாதென்று தீர்மானித் திருக்கிறார்கள். கான்ஸ்டன்டைனுக்கப்பால் நேசக் கக்ஷி யாரின் கைப்பொம்மையாகிய வெனிஜிலாஸ் என்ற கிரேக்க மந்திரியின் உதவியுடனே, கிரேக்க ஆட்சியைத் தங்களிஷ் டப்படி மாற்றிக் கான்ஸ்டன்டைனுடைய இளைய மகனொரு வனைப் பட்டத்தில் வைத்திருந்தார்கள். இந்தப்பிள்ளை ஸமீபத்தில் குரங்கு கடித்ததனால் இறந்து போய்விட்டார். எனவே கிரேக்க தேசம் இப்போது ராஜா இல்லாமல் இருக் கிறது. கான்ஸ்டன்டைன் அரசரின் மற்றொரு குமாரரைப் பட்டத்துக்கிருக்கச் சொல்லியதில் தமது பிதாவே ராஜா ஆகவேண்டுமென்று கருதி அவர் ராஜ பதவியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். கிரேக்க ஜனங்கள் கான்ஸ்டன் டைன் ராஜாவையே மறுபடி ஸிம்ஹாஸனத்துக்கழைக் கிறார்கள். எலெக்ஷனில் வெற்றி பெற்ற கக்ஷிக்குத் தலைவராகிய ஸ்ரீமான் குநாரிஸ் என்பவர் கான்ஸ்டன் டைன் ராஜாவுக்கே மறுபடி பட்டங் கொடுக்க வேண்டு

மென்றநிச்சயத்தோடிருக்கிறார். அந்தந்த தேசத்தாரிஷ்டப் படி அந்தந்த ராஜ்யம் ஆளப்பட வேண்டுமென்று நேசக் கக்ஷியார். வாயால் ஓயாது சொல்லுகிறார்களேயன்றிக் கார்யத்தில் வரும்போது, உலகத்து ராஜ்யங்களில் பலஹீனத் தோடிருப்பவனவற்றையெல்லாம், இவர்களுடைய ஸௌகர்யங்களுக்கிசைந்தபடி இந்நேசக் கக்ஷியார்களின் அபிப்பிராயங்களுக்கு, பலாத்காரமாகவேனும் உட்படுத்த முயற்சி செய்கிறார்கள். கிரேக்க தேசத்து ஜனங்கள் தங்களிஷ்டப்படி ராஜா ஏற்படுத்திக் கொள்வதைக்கூடத் தடுத்துப் பேசத் தங்களுக்கதிகாரமுண்டென்று நேசக் கக்ஷியார் நினைக்கிறார்கள். இதினின்றும் கிரேக்கர் நேசக் கக்ஷியின் கூட்டத்தை விட்டுப் பிரிந்து செல்லவும் விரும்பக் கூடுமென்று கருதுகிறேன்.

—விநோதத்திரட்டு என்ற கட்டுரைப்பகுதி-பாரதி தமிழ்

# 42. விதி

9 செப்டம்பர் 1916.

விதி மூன்று வகைப்படும் :—

1. தெய்வ விதி 2. சாஸ்திர விதி 3. நாட்டு விதி

## தெய்வ விதி

இந்த மூன்றிலே தெய்வ விதியை மாற்ற முடியாது. காற்றிலே வீசிய கல் இடையிலே தடுக்கா விட்டால் மண் மேலே வந்துவிழும்; தீ சுடும்; பனி குளிரும். மின்னல் அழிக்கும். வெயில் ஒளி செய்யும். இவற்றைப் பிற விதிகளால் சிறிது நேரம் தடுத்தாலும் தடுக்கலாம். இயற்கை விதிகளை மாற்றிவிட வழியில்லை. நன்மை நினைத்தால் நன்மை விளையும். தீமை நினைத்தால் தீமை விளையும். பொய் இழிவு தரும். உண்மை கைதூக்கும். இவை

மாறுத விதிகள். இக்காலத்து இயற்கை விதிகளை ஒன்றென்றாக ஆராய்ந்து கண்டுபிடித்துப் பின் அவற்றை அனுசரித்து வாழவேண்டும். இந்த விதிகளிலே மனித ஜாதியார் இன்றுவரை "கற்றது கைமண்ணளவு, கல்லாத துலகளவு." இவற்றின் ஞானம் வளர வளர மனித ஜாதி மேன்மை பெறும்.

**சாஸ்திர விதி**

சாஸ்திரம் மனிதனால் எழுதப்பட்டது. ஆதலால் இன்னும் நிறைவு பெறவில்லை. தெய்வ விதிகளைக் கூடிய வரை பின்பற்றியே சாஸ்திரக்காரர் எழுத முயற்சி செய் திருக்கிறார்கள். ஆனால் காலதேச வர்த்தமானங்கள் மாறுபடுகின்றன. தெய்வ விதிகளைப் பற்றிய புதிய வித்தைகள் வழக்கப்படுகின்றன. அப்போது சாஸ்திர விதிகளை மாற்றுதல் அவசியமாகிறது. திருஷ்டாந்தமாக வைத்திய சாஸ்திரத்தைப் பாருங்கள். காலதேச வர்த்த மானங்களுக்குத் தக்கபடி விதிகள் மாறுகின்றன. பூர்வீக ஐரோப்பிய வைத்தியர்கள் பெரும்பான்மை எல்லா வியாதி களுக்கும் நோயாளியின் உடம்பைக் குத்தி ரத்தத்தைக் கொஞ்சம் வெளியேற்றினால், அதுவே நல்ல முறையென்று நினைத்திருந்தார்கள். தலை நோவு, ஜ்வரம் எது வந்தாலும் உடம்பைக் குத்தி ரத்தத்தைக் கொட்டித் தீரவேண்டும். இந்த மடமையாலே, பலர் ரத்த நஷ்டமே முதற் காரண மாய் அநியாயமாக மடிந்து போனார்கள். இக்காலத்தில் அந்தக் கொள்கை மாறிவிட்டது. ஜ்வரம் வந்தால் பத்தியம் மதுரையில் ஒரு மாதிரி, வேலூரிலே மற்றொரு மாதிரி.

இலக்கணத்தை எடுங்கள் :—

"பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே" என்று பவனந்தி முனிவரே சொல்லுகிறார்.

தர்ம சாஸ்திரத்தை எடுங்கள் :—

பஞ்சபாண்டவர் காலத்தில் ஒரு ஸ்திரீ பல புருஷரை விவாகம் செய்துகொள்ளலாம். வேதவியாஸர் காலத்தில் தமையன் பிள்ளையில்லாமல் இறந்து போனால் தம்பி அவனுக்கு ஸந்ததி ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

விசுவாமித்திரர் காலத்தில் க்ஷத்திரியர் அறிவினால் பிராமணராகிவிடலாம். மனுஸ்மிருதியின் விதிகள் வேறே. பராசரர் விதிகள் வேறே. நடப்பிலுள்ள வைத்தியநாத தீக்ஷிதர் விதிகள் வேறே. இங்கிலாந்துக்கு வேறு ஸ்மிருதி. ப்ரான்ஸ் தேசத்துக்கு வேறு. பாரஸீகத்துக்கு வேறு. நமக்கு வேறு. நமக்குள் வடநாட்டில் வேறு. தென்னாட்டில் வேறு. வைஷ்ணவருக்கு வேறு. ஸ்மார்த்தருக்கு வேறு.

சாஸ்திரங்களையெல்லாம் காலத்துக்குத் தகுந்தபடி மாற்றிக்கொண்டு போகிறோம். வேதத்தைத்தான் மாற்ற முடியாது; உண்மையான வேதமாக இருந்தால்.

**நாட்டு விதி**

நாட்டு விதி என்பது அர்த்த, நீதி சாஸ்திரங்களின் விதி. இதனைத் தற்காலத்தோர் அரசியல் விதியென்று சொல்லுகிறார்கள். அதுவும் சாஸ்திர விதியோடு சேர்ந்ததுதான். ஆனால் மற்ற இலக்கணம் முதலிய சாஸ்திரங்களின் விதிகளைக் காட்டிலும் அரசியல் விதிகள் மிகவும் விரைவுடன் மாறுபடுவதால் இதனைத் தனியாக ஒரு பகுதியாக்கும்படி நேரிட்டது. எனவே, தெய்வ விதிக்குப் பரிபூரணமாக உட்பட்டு சாஸ்திர விதிகளையும் நாட்டு விதிகளையும் மேன்மேலும் புத்திசாலித்தனமாகச் சீர்திருத்திக் கொண்டு வந்தால், மனுஷ்ய ஜாதிக்கு க்ஷேமமுண்டாகும்.

பாரதி தமிழ்.